வள்ளுவ ஆண்டு 2057 – ஆவணி 22 – செவ்வாய்க்கிழமை – 08.09.2026 | பக்கங்கள் – 36 | இதழ் – 04

# BEHIND ME MEDIA

WE SEE BOTH AHEAD AND BEHIND

web : behindmenews.org

குறள் 4 : வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல

பொருள் : விருப்பு வெறுப்பு இல்லாத கடவுளின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்க்கு எப்போதும் எவ்விடத்திலும் துன்பம் இல்லை.

## அதிகரித்து வரும் டக் ஃபோர்டின் செல்வாக்கு!



அரசியலில் பல மாதங்களாக பின்னடைவைச் சந்தித்து வந்த டக் ∴போர்டு, இந்த வாரம் டொனால்ட் டிரம்புடன் கடுமையான வார்த்தைப் போரில் ஈடுபட்டு அதிரடி தாக்குதலைத் தொடங்கினார்.

கணிப்பிட முடியாத அமெரிக்க அதிபருடனான இந்த மோதல், ஒன்டாரியோ முதல்வரின் பலங்களுக்குப் பலம் சேர்ப்பதுடன், இந்த வாரம் நடைபெறவுள்ள மூன்று முக்கிய மாகாண இடைத் தேர்தல்களுக்குச் சற்று முன்னதாக அவரது ஆதரவு விகிதம் திடீரென உயரவும் பங்களித்துள்ளதாக அரசியல் ஆலோசகர்களும் வல்லுநர்களும் தெரிவிக்கின்றனர்.

அமெரிக்க மற்றும் கனேடிய பேச்சுவார்த்தையாளர்களுக்கு இடையிலான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் முறிந்ததைத் தொடர்ந்து, இந்த வார தொடக்கத்தில் ∴போர்டும் டிரம்பும் பரஸ்பரம் விமர்சித்துக்கொண்டனர். திங்களன்று, ∴போர்டை அவரது மறைந்த சகோதரரும் டொராண்டோவின் முன்னாள் மேயருமான ராப் ∴போர்டுடன் ஒப்பிட்ட டிரம்ப், டக் ∴போர்டு தனது சகோதரரை விட ஈர்ப்பு சக்தி (charismatic), புத்தி கூர்மை மற்றும் ஆளுமை குறைந்தவர் என்று கூறினார். மேலும் அவர் பிரதமர் மார்க் காரினியின் "ஐ ாளை ∴ ஏவல் ஆள்" (flunky) என்றும் சாடினார்.

இதற்குப் பதிலடி கொடுத்த ∴போர்டு, டிரம்பை "வாங்குரோத்துகளின் ராஜா" (king of bankruptcies) என்றும் "போக்கிரி" (bully) என்றும் கடுமையாக விமர்சித்தார்.

"நான் இவரை விட நீண்ட காலமாக இந்த அரசியல் களத்தில் இருக்கிறேன், முதலையைப் போல தடிமனான தோலை (மன உறுதியை) கொண்டவன் நான். இவரது விமர்சனம் பாதிக்கும் என்று நினைக்கிறீர்களா?" என ∴போர்டு பதிலளித்தார்.

மற்றொரு சுங்கவரி அச்சுறுத்தலுக்கு மத்தியில், ஒன்டாரியோ முதல்வர் டக் ∴போர்டு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பை ஒரு 'தோல்வியாளர்' (loser), வாங்குரோத்துகளின் ராஜா என அழைத்ததுடன், அவரது புத்தி கூர்மையையும் விமர்சித்தார். கனடா-அமெரிக்க உறவு மேலும் மோசமடைந்த நிலையில், டிரம்ப் ∴போர்டை ஒரு 'ஏவல் ஆள்' என்று அழைத்தார்.

டிரம்புடன் மோதலில் ஈடுபடுவது முதல்வருக்கு எப்போதும் வெற்றி சூத்திரமாகவே இருந்துள்ளது. 2025 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற எதிர்பாராதத் தேர்தலில் (snap election) தொடர்ச்சியாக மூன்றாவது முறையாக பெரும்பான்மை அரசாங்கத்தைப் பெற இது அவருக்கு உதவியது. இந்த வாரம், அதிபருடன் அவர் காரசாரமாக விவாதித்த அதே நாளில் எடுக்கப்பட்ட 'லியாசன் ஸ்ட்ராடஜீஸ்' (Liaison Strategies) கருத்துக்கணிப்பில், அவரது தனிப்பட்ட ஆதரவு விகிதம் 12 புள்ளிகள் உயர்ந்ததுடன், அவரது பிசி (PC) கட்சியும் முன்னிலைக்கு வந்தது.

வியாழக்கிழமை, ஸ்கார்பாரோ சவுத்வெஸ்ட் (Scarborough Southwest), யார்க்-சிம்கோ (York-Simcoe) மற்றும் ஹாமில்டன் ஈஸ்ட்-ஸ்டோனி க்ரீக் (Hamilton East–Stoney Creek) ஆகிய தொகுதிகளின் வாக்காளர்கள் புதிய மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களை (MPPs) தேர்வு செய்ய வாக்களிக்கவுள்ளனர்.

P- 26

## செம்மணியில் கிருஷாந்தி உள்ளிட்டோரின் 30ஆவது ஆண்டு நினைவேந்தல்!

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி குமாரசாமி கிருஷாந்தி உள்ளிட்டோரின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் திங்கட்கிழமை மாலை செம்மணியில் நடைபெற்றது.

இதன்போது, கிருஷாந்தியுடன் செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்ட ஏனையவர்களும் நினைவுகூரப்பட்டு, அவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.




1996 செப்டம்பர் 7ஆம் திகதி, 18 வயதான கிருஷாந்தி செம்மணி பகுதியில் இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்டு, பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டதாக பதிவுகள் தெரிவிக்கின்றன. அவரைத் தேடி சென்ற அவரது தாயார் குமாரசாமி இராசம்மா, சகோதரர் குமாரசாமி பிரணவன் மற்றும் குடும்ப நண்பர் சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோரும் கொல்லப்பட்டனர். நால்வரின் உடல்களும் பின்னர் செம்மணி பகுதியில் புதைக்கப்பட்டிருந்தன.









இந்த வழக்கில் 1998 ஆம் ஆண்டு இராணுவத்தைச் சேர்ந்த சிலர் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை பெற்றனர். பின்னர் செம்மணி பகுதியில் இடம்பெற்ற அகழ்வுப் பணிகள், மேலும் பல மனித எச்சங்கள் தொடர்பான கேள்விகளை எழுப்பியுள்ளன.



இவ்வாண்டின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல், கிருஷாந்தி உள்ளிட்டோரின் நினைவைப் பேணுவதுடன், செம்மணி உள்ளிட்ட பகுதிகளில் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் மனித எச்சங்கள் தொடர்பில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் குறித்த கோரிக்கைகளையும் மீண்டும் முன்னிறுத்தும் நிகழ்வாக அமைந்துள்ளது.



# 2026 மிசிசாகா மாநகரத் தேர்தல்: மேயர் பதவிக்காக 14 வேட்பாளர்கள் போட்டி

2026 மிசிசாகா மாநகரத் தேர்தலில் மேயர் பதவிக்காக மொத்தம் 14 பதிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளனர்.

வரும் அக்டோபர் 26ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில், தற்போதைய மேயர் கரோலின் பாரிஷ் (Carolyn Parrish) தனது பதவியைத் தக்கவைத்துக் கொள்வாரா அல்லது முன்னாள் மேயர் போனி க்ரோம்பி (Bonnie Crombie) மீண்டும் மேயர் பதவிக்கு திரும்புவாரா என்பது முக்கிய கவனமாக உள்ளது.

ஆகஸ்ட் 14ஆம் திகதி வெளியிடப்பட்ட Liaison Strategies கருத்துக்கணிப்பின்படி, இந்த தேர்தல் தற்போது கரோலின் பாரிஷ் மற்றும் போனி க்ரோம்பி ஆகியோருக்கு இடையிலான கடுமையான நேரடி போட்டியாக மாறியுள்ளது.

மேயர் பதவிக்கான பதிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள்:

கரோலின் பாரிஷ்
தற்போதைய மிசிசாகா மேயர். 2024 இடைத்தேர்தலில் வெற்றி பெற்று பதவியேற்றார். முன்னாள் நகர சபை உறுப்பினரும், மிசிசாகா-எரிண்டேல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். கல்வித் துறையிலும் சேவை செய்த அனுபவம் கொண்டவர்.

போனி க்ரோம்பி

2014 முதல் 2024 வரை மிசிசாகா நகரின் ஆறாவது மேயராக பணியாற்றினார். பின்னர் ஒன்ராறியோ லிபரல் கட்சியின் தலைவராக பொறுப்பேற்றார். தற்போது மீண்டும் மேயர் பதவிக்காக போட்டியிடுகிறார்.

ஆல்வின் டெட்ஜோ

வார்டு 2-ன் தற்போதைய நகர சபை உறுப்பினர். அரசியலுக்கு முன்பு டொராண்டோ மெட்ரோபாலிட்டன் பல்கலைக்கழகம் மற்றும் ஷெரிடன் கல்லூரியில் தொடர்பாடல் நிபுணராக பணியாற்றினார்.

தீபிகா டமேர்லா

வார்டு 7-ன் தற்போதைய நகர சபை உறுப்பினர். முன்னாள் மாகாண நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒன்ராறியோ அரசில் மூத்த குடிமக்கள் விவகார அமைச்சராகவும் பணியாற்றியுள்ளார்.

கரம் அகமது

மிசிசாகாவில் வாழ்ந்து பணியாற்றும் டோயிங் வாகன இயக்குநர். வாழ்க்கைச் செலவைக் குறைத்தல், வரி குறைப்பு மற்றும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தல் ஆகியவற்றை முன்னிறுத்தி பிரச்சாரம் செய்கிறார்.





ஆமிர் பட்டி

தொழிலதிபர், நில அபிவிருத்தியாளர் மற்றும் முதலீட்டாளர். குடும்பங்களின் வாழ்க்கைச் செலவைக் குறைப்பது மற்றும் மக்களின் பொருளாதார சுமையைக் குறைப்பது அவரது முக்கிய வாக்குறுதிகளாகும்.

கோர்ட் எலியட்

சொத்து வரி உயர்வுகளை ரத்து செய்தல், வாடகையாளர்களின் உரிமைகளை வலுப்படுத்தல் மற்றும் உயர்மாடி கட்டிட அபிவிருத்திகளுக்கு அதிக கண்காணிப்பு கொண்டு வருதல் ஆகியவற்றை வலியுறுத்துகிறார்.

பிராங்க் பாங்

பொருளாதார நிபுணரும் தொழில் முனைவோருமான இவர், கடந்த இருபது ஆண்டுகளில் பல கூட்டாட்சி மற்றும் நகராட்சி தேர்தல்களில் போட்டியிட்டுள்ளார். சமூக ஊடகங்களில் வைரலான காணொளிகளால் பரவலாக அறியப்படுகிறார்.

அம்ஜத் ஜிலானி

டிஜிட்டல் மார்க்கெட்டிங் நிபுணர். சாலை பராமரிப்பை முன்னுரிமைப்படுத்துதல், நகர சொத்து வரிகளை முடக்குதல் மற்றும் இளைஞர்களுக்காக விளையாட்டு வசதிகளை அதிக நேரம் திறந்து வைத்திருத்தல் ஆகியவற்றை வாக்குறுதி அளித்துள்ளார்.

மைக் மடுலெவிச்

டொராண்டோ காவல்துறையில் 34 ஆண்டுகள் பணியாற்றிய ஓய்வுபெற்ற போலீஸ் சார்ஜென்ட். பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் மலிவான மிசிசாகாவை உருவாக்குவதே அவரது நோக்கம்.

ஃபாதி நாமி

ரியல் எஸ்டேட் விற்பனை பிரதிநிதி. பாதுகாப்பான சமூகங்கள், சுத்தமான அயல்பகுதிகள் மற்றும் பொருளாதார வளர்ச்சியை முன்னிறுத்துகிறார்.

டேவிட் ஷா

1966 முதல் மிசிசாகாவில் வசித்து வருகிறார். தீ பாதுகாப்புத் துறையில் 38 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் 2021ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார்.
மேலும் போட்டியிடும் வேட்பாளர்கள்:

குர்ப்ரீத் சிங் கில்ல், பிலிப் பிரெனன், சைமன் டெனிஸ்
2026 மிசிசாகா மேயர் தேர்தல் அக்டோபர் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. நகரின் அடுத்த தலைவரை தேர்ந்தெடுக்க வாக்காளர்கள் தயாராகி வருகின்றனர்.

# ஸ்கார்பரோ - ரூஜ் பார்க் நகரசபை உறுப்பினர் நீதன் ஷானின் பிரச்சார அலுவலக திறப்பு விழா!




ஸ்கார்பரோ-ரூஜ் பார்க் நகரசபை உறுப்பினர் நீதன் ஷான் அவர்களின் தேர்தல் பிரசாரத்துக்கான அலுவலக திறப்பு விழா எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்பகல் 2 மணி தொடக்கம் 4679 Kingston Rd Unit 1 & 2Scarborough, ON M1E 2P8 - என்ற முகவரியில் நடைபெறவுள்ளது.

நீதன் ஷான் தற்போது ஸ்கார்பரோ-ரூஜ் ரிவர் தொகுதியின் நகரசபை உறுப்பினராக (Councillor) பணியாற்றி வருகிறார். இதற்கு முன்னர், இன உறவுகள் தொடர்பான நகர்ப்புறக் கூட்டமைப்பான Urban Alliance on Race Relations (UARR) அமைப்பின் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றினார்.

கல்வித் துறையிலும் தலைமைப் பொறுப்புகளை வகித்துள்ள அவர், ஸ்கார்பரோவைப் பிரதிநிதித்துவப் படுத்தும் Toronto District School Board (TDSB) அறங்காவல ராகவும், TDSB தலைவராகவும் பணியாற்றியுள்ளார். 2006 முதல் 2010 வரை York Region District School Board அமைப்பின் அறங் காவலராகவும் அவர் சேவையாற்றினார்.

இனநீதிக்காக நீதன் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறார். கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் நீதி ஆகிய துறைகளில் அமைப்புசார் கொள்கை மாற்றத்தை ஏற்படுத்துவதில் அவர் கவனம் செலுத்துகிறார். கல்வி, சுகாதாரம் மற்றும் சட்ட உதவிக ளுக்கான நிதிக் குறைப்புகளை எதிர்த்து சமூகப் பிரச்சாரங்களை முன்னெடுத் துள்ளார். மேலும், COVID-19 தொற்றுநோய்க்குப் பிந்தைய மீட்பு நடவடிக்கைகள் இனச் சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமைய வேண்டும் என்பதை உறுதி செய்வதற்கான முயற்சிகளையும் தற்போது முன்னெடுத்து வருகிறார்.

மனித உரிமைகளுக்காக அவர் மேற்கொண்ட பணிக்காக நீதன் பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். அவற்றில் UARR வழங்கிய Race Relations Award மற்றும் Toronto Community Foundation toq;fpa Vital People Award ஆகியவை அடங்கும். டொராண்டோ நகரசபை உறுப்பினராகப் பணியாற்றிய காலத்தில், நகரின் Youth Equity Champion kw;Wk; Newcomer Advocate ஆகிய அங்கீகாரங்களையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

BEHIND ME MEDIA

# கனடாவில் உலகத் தமிழ் ஆய்வு மாநாடு 2026!




கனடா - ரொறன்ரோவில் எதிர்வரும் ஒக்கோடபர் 15 -18 ஆம் திகதி வரை உலகத் தமிழ் ஆய்வு மாநாடு 2026 நடைபெறவுள்ளது. நிகழ்வில் இணைந்து கொள்வோருக்கான பதிவுகள் தற்போது ஆரம்பித்துவிட்டன. முன்பதிவுகளை பின்வரும் இணையத்தளத்தின் வாயிலாக மேற்கொள்ள முடியும்.

Register now: https://globaltamilconference.org/.

உலகத் தமிழ் ஆய்வு மாநாடு 2026 வழியாக, வரலாறு, பண்பாடு, தத்துவம், புத்தாக்கம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் எவ்வாறு ஒன்றிணைந்து தமிழ் மற்றும் தமிழரின் எதிர்காலத்தை வடிவமைக்கின்றன என்பதை ஆராயும் உலகளாவிய உரையாடலில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# செம்மணி எழுச்சி - அணையா தீபம் விழித்தெழு தமிழா! நிகழ்வுக்கு பங்களித்தோர்!

BEHIND ME MEDIA மற்றும் BEHIND ME FOUNDATION ஆகிய நிறுவனங்களின் ஏற்பாட்டில் கனேடிய மண்ணில் கடந்த 30ஆம் திகதி நடைபெற்ற செம்மணி எழுச்சி – அணையா தீபம் விழித்தெழு தமிழா நிகழ்வுக்கு நிகழ்வுக்கு தமது பங்களிப்புக்களை நல்கியோர் விபரங்கள்...

HI FI BARBERSHOP

AKT Fresh Meat & Fish
Middlefield & Steeles
416-291-2838

SV MEDIA

**சமூக செயற்பாட்டாளர்**

**Santha Panchalingam,**
**Sasikala Naren,**
**Scarborough Supermarket**

SMART RESTORATION

5 SPICE DINING

AAROSAI "WHERE MUSIC BEGINS..."

NEW RANGANAS JEWELLERY SINCE 1996

CEYLON SPICY HUB

NEW SPICELAND SUPERMARKET

New Nanthu's Kitchen

பசுமை

Swarnamahal Fashion Jewellery

MAYA'S TAKEOUT & CATERING

DYNEVOR EXPRESS

# 'LEGENDS & ICONS AWARDS 2026'

BEHIND ME MEDIA












**Behind Me Media** கனடாவில் பிரம்மாண்டமாக நடாத்திய **'LEGENDS & ICONS AWARDS 2026'** நிகழ்விலிருந்து...






# 'LEGENDS & ICONS AWARDS 2026'

BEHIND ME MEDIA



















Behind Me சர்வதேச ஊடக வலையமைப்பினால் கனடாவில் கடந்த ஜூன் மாதம் நடாத்தப்பட்ட மாபெரும் விருது வழங்கல் நிகழ்வான Legends & Icons Awards 2026 மிகச் சிறப்பாக நடந்தேறியுள்ளது.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்டுள்ள பல் துறைச் சாதனையாளர்கள் வெளிநாடுகள் மற்றும் உள்நாட்டிலிருந்து (கனடா) வருகை தந்து நிகழ்வைச் சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மும்மதங்களையும் சார்ந்த தலைவர்கள் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்து தமது ஆசியுரைகளையும் வழங்கியிருந்தார்கள். கனேடிய தேசியகீதம் தமிழ்த்தாய் வாழ்த்து மௌன அஞ்சலி ஆகியவை சம்பிரதாய பூர்வமாக நடைபெற்றதன் பின்னர் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

இந்த நிகழ்ச்சி எமது சமூகத்தைச் சேர்ந்த சாதனையார்கள் கௌரவிப்பு மாத்திரமன்றி இலங்கை, அவுஸ்திரேலியா மற்றும் கனடா வாழ் வைத்திய நிபுணர்கள் இணைந்து கொண்ட ‘புற்றுநோய் விழிப்புணர்வு” செயற் திட்டமும் இணைந்ததாக வடிவமைக்கப்பட்டிருந்தமை பலரால் வரவேற்கப்பட்டிருந்தது.

நிகழ்வில் கலந்து கொண்ட வைத்தியர்கள்· மனிதர்களிடத்தில் ‘புற்றுநோய்’ குறித்த அச்சத்தை நாம் எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்தும். முக்கியமாக, குணப்படுத்தக் கூடிய நோயே இது என்பது பற்றியும் தெளிவுபடுத்தினார்கள். அத்துடன் மிக முக்கியமாக நோய்கள் குறித்த விழிப்புணர்வுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கு பக்க பலமாக Behind Me Media துணை நிற்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்கள்.

Behind Me சர்வதேச ஊடகத்தின் தோற்றம் அதன் நிறுவனரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கணா செல்வாவினால் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பது குறித்த ஆவணத் தொகுப்பொன்று வெளியிடப் பட்டது.

நிகழ்ச்சிக்கு அனுசரணை வழங்கியவர்களுக்கு சிறப்பான கௌரவிப்பு வழங்கப்பட்டது என்பதோடு சாதனையாளர் கௌரவிப்பின்போது அவர்கள் ஒவ்வொருவரதும் வாழ்வின் திருப்புமுனையாக அமைந்திருந்த விடயங்கள் பற்றியும் இந்த மேடையில் கௌரவம் பெறுவதைப் பெருமிதப்படுத்தியும் பிரத்தியேகமாக ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காணொளிகள் வெளியிடப்பட்டிருந்தன.

அது மாத்திரமன்றி Behind Me Media வுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்ட பாடல் வெளியீடும் விழா மேடையைக் கௌரவித்தது.

Behind Me சர்வதேச ஊடக வலையமைப்பின் நிறுவனரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கணா செல்வாவினால் வழங்கப்பட்ட ஏற்புரையில் ஈழத்தமிழருக்கான மேடை எம்மத்தியில் இல்லை என்பதாலும் உலகளாவிய ரீதியில் எம்மவர்கள் பல்துறைகளில் சாதித்துக கொண்டிருப்பதை நாம் கௌரவிக்க வேண்டும் என்பதையும் கருத்திற்கொண்டு Behind Me Media மேற்படி நிகழ்வை ஒழுங்கமைத்ததைக் குறிப்பிட்டிருந்தார்.

மிக முக்கியமாக இந்த விழாவின் நாயகர்களாகத் திகழும் அனுசரணையாளர்கள் அனைவருக்கும் முதற்கண் நன்றியைத் தெரிவித்த கணா செல்வா, எம்மவர்களிடத்தில் உள்ள திறமைகளுக்கான களத்தை நாங்கள் தான் வழங்கவேண்டும் என்பதே Behind Me Media உடைய நோக்கம். அதைவிட நோய்கள் பற்றிய விழிப்புணர்வை எமது மக்களுக்காக நாம் வழங்கவேண்டும் என்பதையும் கருத்திற்கொண்டு மேற்படி கௌரவிப்பு நிகழ்வுடன் சேர்த்து ‘புற்றுநோய் விழிப்புணர்வு’ குறித்த விடயங்களும் இந்த மேடையில் முன்னெடுக்கப் பட்டதையும் சுட்டிக் காட்டினார்.

ஒவ்வொரு ஆண்டும் நடைபெறவுள்ள விருது வழங்கல் விழாக்களின் போதும் ஒவ்வொரு நோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டமும் முன்னெடுக்கப் படவுள்ளதாகவும் அவர் தனதுரையில் மேலும் தெரிவித்தார்.

நிகழ்வின் இடையிடையே இடம்பெற்ற ஆடல்களும் மிகச் சுருக்கமான உரைகளும் பார்வையாளர்களைச் சலிப்படையா வண்ணம் வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# 'LEGENDS & ICONS AWARDS 2026'

BEHIND ME MEDIA















## Behind Me Media கனடாவில் பிரம்மாண்டமாக நடாத்திய 'LEGENDS & ICONS AWARDS 2026' நிகழ்விலிருந்து...












BEHIND ME MEDIA



# கனடிய உள்நாட்டுப் பொருட்களுக்கு அதிகரிக்கும் தேவை!

அமெரிக்காவுடனான வர்த்தகப் போர் தீவிர மடைந்து வரும் நிலையில், கனடிய மக்கள் உள்நாட்டு உணவு மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை வாங்குவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இருப்பினும், கனடாவில் தயாரிக்கப்படும் பொருட்களுக்குத் தங்களின் விற்பனை நிலையங்களின் அலமாரிகளில் (Shelf space) போதுமான இடம் ஒதுக்குவதில் சில பெரிய சில்லறை விற்பனையாளர்கள் (Retailers) தாமதம் காட்டி வருவதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரணமாக, நுகர்வோரின் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்யப் பல நிறுவனங்கள் இணையவழி மூலம் வாடிக்கையாளர்களுக்கு நேரடியாகவே (Direct-to-consumer) பொருட்களை விற்பனை செய்யும் புதிய உத்தியைக் கையாளத் தொடங்கியுள்ளன.

முக்கிய விவரங்கள்:

அதிகரிக்கும் நேரடி விற்பனை (Direct-to-Consumer):

ஒன்டாரியோவின் போமன்வில்லை (Bowmanville) பகுதியைச் தளமாகக் கொண்டு இயங்கும் ‘ஏவென்கோ’ (aVenco Ltd.) எனும் பேக்கிங் காகித (Parchment Paper) நிறுவனத் தலைவி கேத்லின் சேப்மேன் (Kathleen Chapman) கூறுகையில், அமெரிக்க வர்த்தக வரிகளால் தங்களது அமெரிக்க ஏற்றுமதி வர்த்தகம் முற்றிலுமாக ஸ்தம்பித்துள்ளதாகத் தெரிவித்தார்.

அதேவேளை, கனடிய நுகர்வோரிடமிருந்து நேரடி விற்பனைக்கான கோரிக்கைகள் கடந்த வாரங்களில் நூற்றுக்கணக்கில் குவிந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சந்தையைப் பல்வகைப்படுத்தும் முயற்சிகள் (Diversification):

நியூ பிரன்சுவிக் (New Brunswick) மாநிலத்தின் ‘கிங் கோல் டீ’ (King Cole Tea) மற்றும் ‘நட்ஸ் அபவுட் பீனட் பட்டர்’ (Nuts About Peanut Butter) தயாரிப்பு நிறுவனமான ‘ஜி.ஈ. பார்பர்’ (G.E. Barbour Inc.), தங்களது பொருட்கள் அமெரிக்க வரியிலிருந்து தப்பிய போதிலும், இனிவரும் காலங்களில் உள்நாட்டுச் சந்தை மற்றும் பிற சர்வதேசச் சந்தைகளில் கவனம் செலுத்தத் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, கனடிய தயாரிப்புகளை மட்டுமே விற்பனை செய்யும் ‘பார்பர்ஸ் மார்க்கெட்’ (Barbours Market) என்ற இணையவழி விற்பனை தளத்தை அவர்கள் விரைவில் தொடங்கவுள்ளனர்.

சில்லறை விற்பனையாளர்களின் அணுகுமுறை:

உள்நாட்டுப் பொருட்களுக்கான நுகர்வோரின் ஆதரவை சில சில்லறை விற்பனை நிறுவனங்கள் தற்காலிக அலையாகக் கருதும் அதேவேளை, காஸ்ட்கோ (Costco) போன்ற சர்வதேச நிறுவனங்கள் வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப கனடியப் பொருட்களுக்கு விரைவாக இடமளித்து வருகின்றன.

**நுகர்வோரின் உடனடித் தேவையைப் பூர்த்தி செய்யப் பல கனடிய நிறுவனங்கள் இணையவழி மூலம் வாடிக்கை யாளர்களுக்கு நேரடி யாகவே பொருட்களை விற்பனை செய்யும் புதிய உத்தியைக் கையாளத் தொடங்கியுள்ளன.**







கனடிய நுகர்வோரின் கோரிக்கைகள் தொடரும் பட்சத்தில், சில்லறை விற்பனை நிலையங்களும் உள்நாட்டுப் பொருட்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்படும் எனச் சந்தை பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றனர்.



# கலை - இலக்கியம்

BEHIND ME MEDIA

## பொ. ஐங்கரநேசனின் ‘வேர்முகங்கள்’ - நூல் அறிமுக விழா





ஏற்கெனவே யாழ்ப்பாணத்திலும் தமிழ்நாட்டிலும் வெளியிடப்பெற்று பின்னர் பொ. ஐங்கரநேசனின் “வேர்முகங்கள்” நூல் கலை இலக்கியப் பேராளுமைகளுடன் அறிமுக விழா கடந்த மாதம் கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

ஊடகங்களுக்காக பொ. ஐங்கரநேசன் மேற்கொண்ட நேர்காணல்களின் தொகுப்பு ‘வேர்முகங்கள் என்ற பெயரில் எங்கட புத்தகங்கள் பதிப்பகத்தின் ஊடாக வெளியாகியுள்ளது. புகழ்மிக்க இருபது கலை இலக்கிய ஆளுமைகளின் நேர்காணல்கள் அடங்கிய இந்த நூலின் அறிமுகவிழா சமூக ஆய்வாளர் தெ.மதுசூதனன் தலைமையில் நடைபெற்றது இவ்வறிமுக விழாவில் கருத்துரைகளைச் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திரா, மொழிபெயர்ப்பாளர் அம்பிகை டிவகலாலா போமன் ஆகியோர் நிகழ்த்தியிருந்தார்கள்.





சட்டத்தரணி ந. காண்டீபன் அறிமுக உரையை நிகழ்த்தியிருந்தார். சொல்லேர் உழவர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டிருந்த இந்நூலின் முதற்பிரதியை ஊடகவியலாளர் வி. தனபாலசிங்கம் வழங்கி வைக்க மூத்த எழுத்தாளுமை அன்னலட்சுமி இராஜதுரை பெற்றுக்கொண்டார்.

தமிழ்த்தாய் வாழ்த்தை செல்வன் ம. தர்மயா இசைக்க, புகழ்பெற்ற கணித ஆசிரியரும் பொ. ஐங்கரநேசனின் பள்ளிக்கால தோழரும் பல்துறைக் கலைஞருமான கலாபூஷணம் வி.ரி.ராஜேந்திரா வரவேற்புரை ஆற்றியிருந்தார். அரங்கு நிறைந்த இலக்கிய ஆர்வலர்கள் பங்கேற்ற இவ்விழாவின் இறுதியில் நூலாசிரியரும், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவருமான பொ.ஐங்கரநேசன் ஏற்புரையாற்றினார்.












Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Unity of Tamil Canadians"

IMHO CANADA
INTERNATIONAL MEDICAL HEALTH ORGANIZATION

OfERR (CEYLON)

# 17 ஆவது ஆண்டு தமிழ் கனடிய நடைப்பயணம்

## உத்தியோகபூர்வமாகத் தொடக்கம்

BEHIND ME MEDIA



## இந்தியாவில் இருந்து இலங்கை திரும்பும் தமிழ் குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்க நிதியுதவி

கனடியத் தமிழர் பேரவை (CTC), சர்வதேச மருத்துவ சுகாதார நிறுவனம் (IMHO) கனடா மற்றும் இலங்கை அகதிகள் மறுவாழ்வுக் சுழகம் (OfERR) ஆகிய அமைப்புகள் ஒன்றிணைந்து, தமிழ் கனடிய நடைபயணத்தை ஜூலை 29, 2026 அன்று உத்தியோகபூர்வமாகத் தொடங்கியுள்ளன.

**நடைப்பயணம் நடைபெறும் நாள்:**
செப்டம்பர் 13, 2026 (ஞாயிற்றுக்கிழலை)

**இடம்:**
Millennium Square Park,
Frenchman's Bay, Pickering, Ontario

**முக்கிய நோக்கம்:**
இந்தியாவில் பல வருடங்களாக இடம்பெயர்ந்து வாழ்ந்து, தற்போது தாமாகவே முன்வந்து தங்களின் சொந்த ஊரான திருகோணமலைக்குத் திரும்பும் 30 தமிழ் குடும்பங்கள் மற்றும் தனிநபர்களின் மறுவாழ்வுக்கு ஆதரவளித்தல்.

**மறுவாழ்விற்கான உதவிகள்:**
- தற்காலிக பாதுகாப்பான வீட்டு வசதி
- உலர் உணவுப் பொருட்கள் மற்றும் அன்றாட அத்தியாவசியத் தேவைகள்
- குழந்தைகள் கல்வியுடன் இணைதல்
- பெரியவர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகள் மற்றும் பொருளாதார சுதந்திரம்

> **இந்து முயற்சி வெறும் நடைபயணம் அல்ல...**
> இது தாயகம் திரும்பி வாழ்வை மீண்டும் கட்டியெழுப்பத் துணியும் குடும்பங்களுக்கு ஆதரவாக நிற்கும் ஒரு மனிதாபிமான முயற்சி.

**தொடக்க விழாவில் சிறப்புரையாற்றியவர்கள்:**
- **ஷர்மிலா விக்னேஸ்வரானந்தன்**
  – ஒருங்கிணைப்பாளர், தமிழ் கனடிய நடையயணம் 2026
- **ஸ்ரீதரன் துரைராஜா**
  – தலைவர், கனடியத் தமிழர் பேரவை
- **டாக்டர் வரகுணன் மகாதேவன்**
  – முன்னாள் தலைவர், IMHO கனடா
- **திருமதி சின்னத்தம்பி சூரியகுமாரி**
  – தலைவர், OfERR சிலோன் (வீடிபோ செய்தி)
- **கிஷன் பத்மநாதன்**
  – ஒருங்கிணைப்பாளர், தமிழ் கனடிய நடையயணம் 2026

## ஒன்றிணையுங்கள்!

கனடியத் தமிழர் பேரவை, IMHO கனடா மற்றும் OfERR சிலோன் ஆகிய அமைப்புகள், கனடா முழுவதிலும் அதற்கு அப்பாலும் உள்ள அனைவரையும் இந்த நோக்கம் கொண்ட இந்த முயற்சியில் இணைந்து ஆதரவளிக்க அன்புடன் அழைக்கின்றன.

**நன்கொடை அளிக்க:**
tamilcanadianwalk.ca
என்ற இணையதளத்தின் மூலம் உங்கள் பங்களிப்பை வழங்கலாம்.


**ஒன்றாய் நடப்போம்.**
**நோக்கத்தோடு நடப்போம்.**
**நம்பிக்கையோடு நடப்போம்.**

tamilcanadianwalk.ca | For more information contact:

Scan here to donate

# கனடிய தொழிற்துறைகளை அமெரிக்கா மாற்ற முயல்கிறது - பிரதமர் மார்க் கார்னி குற்றச்சாட்டு

BEHIND ME MEDIA



அமெரிக்காவுடன் நடைபெற்ற வர்த்தக பேச்சுவார்த்தைகளின் போது, கனடாவின் வாகன உற்பத்தித் துறை உள்ளிட்ட முக்கிய தொழிற்துறைகள் அமெரிக்க நிறுவனங்களின் துணை நிறுவனங்களாக மாற வேண்டும் அல்லது படிப்படியாக கனடாவில் மூடப்பட்டு "முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும்" என்ற வகையிலான சலுகைகளை அமெரிக்க பேச்சாளர்கள் வலியுறுத்தியதாக கனடிய பிரதமர் மார்க் கார்னி (Mark Carney) குற்றம் சாட்டியுள்ளார்.

ஒட்டாவாவில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த பிரதமர் கார்னி, "இத்தகைய கடுமையான மற்றும் நியாயமற்ற நிபந்தனைகளை கனடா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது" எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

செய்தியின் முக்கிய அம்சங்கள்:

பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தம்: அமெரிக்கா ஆகஸ்ட் 22 ஆம் திகதியை இறுதி கெடுவாக விதித்திருந்த நிலையில், நியாயமற்ற கோரிக்கைகள் காரணமாகப் பேச்சுவார்த்தைகளை நிறுத்திவிட்டுத் தனது பேச்சுவார்த்தைக் குழவை பிரதமர் கார்னி நாட்டிற்குத் திரும்ப அழைத்தார்.

அமெரிக்காவிற்கு கடும் எச்சரிக்கை: "அமெரிக்கத் தரப்பினர் சமூக வலைத்தளங்களில் மீம்களை (Memes) பதிவிடுவதையும், வம்புகளுக்கு இழுப்பதையும் நிறுத்திவிட்டு, தீவிரமான பேச்சுவார்த்தைக்குத் தயாராகும் போது மட்டுமே கனடா மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்குத் திரும்பும்" என பிரதமர் கார்னி சுட்டிக்காட்டினார்.

பிரெஞ்சு மொழி மற்றும் கலாச்சாரம்: கனடாவின் பிரெஞ்சு மொழி உரிமை, கலாச்சாரம் மற்றும் பிற நாடுகளுடனான சுதந்திர வர்த்தக உரிமைகளில் அமெரிக்கா செய்ய முற்பட்ட கட்டுப்பாடுகளும் பேச்சுவார்த்தை முறிவுக்கு முக்கிய காரணங்களாக அமைந்தன.

தொழிற்சங்கங்களுடன் கலந்தாய்வு: ஒட்டாவாவில் கனடாவின் முக்கிய தொழிற்சங்கப் பிரதிநிதிகளைச் சந்தித்த பிரதமர், வர்த்தகப் போரினால் பாதிக்கப்படும் தொழிலாளர்களைப் பாதுகாப்பது மற்றும் வேலைவாய்ப்புகளை உறுதிசெய்வது குறித்து ஆலோசித்தார்.

பரிமாற்ற வரிகள் (Counter-Tariffs): அமெரிக்காவின் 50% வரி விதிப்பிற்குப் பதிலடியாக, சுமார் 28 பில்லியன் டாலர் மதிப்புள்ள பால் பொருட்கள், எ∴கு (Steel), செம்பு மற்றும் அழகு சாதனப் பொருட்கள் உள்ளிட்ட அமெரிக்கப் பொருட்களுக்கு செப்டம்பர் 8 முதல் 15% முதல் 50% வரையிலான பதிலடி வரிகளை விதிக்க கனடா ஆயத்தமாகி வருகிறது.

# $25,000 செலவில் டக் ஃபோர்டின் "லேக் ஒன்ராறியோ"!

அமெரிக்க அதிபர் ஏரியின் பெயரை மாற்றியதற்கு பரவலான கண்டனங்கள் எழுந்த நிலையில், அதற்குப் பதிலளிக்கும் விதமாக முதலமைச்சர் டக் ∴போர்ட் (Premier Doug Ford) "லேக் ஒன்ராறியோ" (Lake Ontario) என்பதைக் குறிக்கும் பெரிய விளம்பரப் பலகை ஒன்றைத் திறந்து வைத்தார்.

கடந்த வார இறுதியில் முதலமைச்சர் டக் ∴போர்டால் திறக்கப்பட்ட புதிய "லேக் ஒன்ராறியோ, இப்போதும் எப்போதும்" (Lake Ontario, Now and Always) என்ற விளம்பரப் பலகைக்காக ஒன்ராறியோ அரசு 25,000 டாலர்களைச் செலவிட்டுள்ளதாக அவரது அலுவலக செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

க்ளோபல் நியூஸ் (Global News) நிறுவனத்தால் முதன்முதலில் செய்தி வெளியிடப்பட்ட இந்தச் செலவினத் தொகையை, புதன்கிழமை காலையில் முதலமைச்சரின் அலுவலகம் CTV News நிறுவனத்திற்கு மின்னஞ்சல் மூலம் உறுதிப்படுத்தியது.

வைனோனாவில் அமைக்கப்பட்ட பலகை

அமெரிக்க அரசாங்கப் பதிவுகள் மற்றும் வரைபடங்களில் "லேக் ஒன்ராறியோ" என்பதை "லெக் அமெரிக்கா" (Lake America) என மறுபெயரிடுமாறு தனது நிர்வாகத்திற்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நிறைவேற்று உத்தரவு (executive order) பிறப்பித்த சில நாட்களுக்குப் பிறகு, இந்த விளம்பரப் பலகை ஒன்ராறியோவின் வைனோனா (Winona, Ont.) பகுதியில் அமைக்கப்பட்டது.

கனடா-அமெரிக்க வர்த்தக பதற்றங்கள் தொடர்ந்து தீவிரமடைந்து வரும் நிலையில், டிரம்பின் முடிவிற்கும் அவரது தொடர்ச்சியான பேச்சுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ∴போர்ட் சனிக்கிழமை இந்த விளம்பரப் பலகையைத் திறந்து வைத்தார்.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட காணொளியில் அவர் கூறுகையில்:

"அதிபர் டிரம்போ அல்லது யாரேனும் மறந்துவிட்டார்கள் என்றால் நினைவூட்டுவதற்காக, இது இப்போதும் எப்போதும் "லெக் ஒன்ராறியோ" தான் என்பதை நினைவூட்டும் பலகையை நாங்கள் அமைத்துள்ளோம்."

'நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்'

இருமொழிகளில் அமைக்கப்பட்ட அந்தப் பலகையில் "லெக் ஒன்ராறியோ, இப்போதும் எப்போதும்" என்று எழுதப்பட்டுள்ளது. வாஷிங்டனின் அச்சுறுத்தல்களுக்கு ஒன்ராறியோ மாகாணம் ஒருபோதும் பின்வாங்காது என்று ∴போர்ட் கூறினார்.

அமெரிக்க அரசாங்கப் பயன்பாட்டில் மெக்சிகோ வளைகுடாவை (Gulf of Mexico) "அமெரிக்க வளைகுடா" (Gulf of America) என மறுபெயரிட டிரம்ப் முன்னதாக மேற்கொண்ட முயற்சியைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

"நாங்கள் மீண்டு வரும் வல்லமை படைத்த, உறுதியான கனடியர்கள்," என்று ∴போர்ட் முன்னதாகக் கூறியிருந்தார். "நாங்கள் எப்போதும் எங்கள் இறையாண்மையைப் பாதுகாப்போம், அச்சுறுத்துபவர்களுக்கு நாங்கள் ஒருபோதும் பின்வாங்க மாட்டோம்."






பிரதமர் மார்க் fhuconservatives (Mark Carney) லெக் ஒன்ராறியோ பெயர் மாற்றத்தை நிராகரித்ததுடன், இந்த ஏரியின் நீண்டகால வரலாற்றையும் அதன் "வெண்டாட்" (Wendat) பழங்குடியின மொழிப் பின்னணியையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"லெக் ஒன்ராறியோ" என்ற பெயர் "ஒன்டாரி யோ" (Ontari'io) என்ற வெண்டாட் சொல்லிலிருந்து வந்தது, அதற்கு "ஏரி அழகானது, ஏரி பெரியது" என்று பொருத்தமாகப் பொருள்படும்.

"இந்த பெயர் 400 ஆண்டுகளுக்கும் மேலான பழமையானது, கனடாவின் கூட்டமைப்பு (Confederation of Canada) மற்றும் அமெரிக்காவின் சுதந்திரப் பிரகடனம் ஆகிய இரண்டிற்கும் முந்தியது..."

- மார்க் fhuconservatives (@MarkJCarney), ஆகஸ்ட் 27, 2026

வாஷிங்டனுடன் ஒரு புதிய வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதற்கான ஒட்டாவாவின் (Ottawa) முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதாகக் கூறிய முதலமைச்சர், அதேவேளையில் "ஒரு மோசமான ஒப்பந்தத்தை விட ஒப்பந்தமே இல்லாமல் இருப்பது நல்லது" என்றும் வாதாடினார்.

வரைபடச் சேவைகளின் தற்போதைய நிலை

டிரம்பின் இந்தப் பெயர் மாற்றம் பல பிரபலமான வரைபடச் சேவைகளிடமிருந்து கலவையான எதிர்வினைகளைத் தூண்டியதை அடுத்து, இந்த கூ25,000 மதிப்பிலான விளம்பரப் பலகை அமைக்கப்பட்டுள்ளது.

கூகிள் மேப்ஸ் (Google Maps) அமெரிக்க பயனர்களுக்கு "லெக் அமெரிக்கா" என்று காண்பிக்கும் அதே வேளையில், கனடிய பயனர்கள் தொடர்ந்து "லெக் ஒன்ராறியோ" என்றே காண்கின்றனர். இந்த வார தொடக்கத்தில், டிரம்ப் நேரடியாகத் தொடர்புகொண்டதைத் தொடர்ந்து, அப்பிள் (Apple) நிறுவனம் தனது அமெரிக்க வரைபடங்களின் இணைய பதிப்பில் இந்தப் பெயரை மாற்றியது.

இதற்கிடையில், மேப்க (MapQuest) இந்த மாற்றத்தைச் செய்ய தொடர்ந்து மறுத்து வருகிறது.

30 ஆண்டுகள் பழமையான அந்த வரைபடச் சேவை நிறுவனம் கடந்த வாரம், "நாங்கள் அதை மாற்றப்போவதில்லை" என்று கூறியது. இந்தத் தீர்மானத்தைத் தொடர்ந்து அதன் பிரபலம் கணிசமாக உயர்ந்துள்ளதுடன், தற்போது கனடாவின் முன்னணி இலவச செயலிகளில் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளது.

∴போர்டைப் பொறுத்தவரை, அவரது செய்தி மாறாமல் உள்ளது:

"அதிபர் டிரம்ப் அதை என்ன வேண்டுமானாலும் அழைக்கலாம், ஆனால் உலகின் ஏனைய பகுதிகள் எப்போதும் அதை லெக் ஒன்ராறியோ என்றே அழைக்கும் என்பதை என்னால் சொல்ல முடியும்."

# 'Mega Blast 2026'

BEHIND ME MEDIA

Tamil 1 TV மற்றும் SV Media இணைந்து வழங்கிய 'Mega Blast 2026' கோடை காலத் திருவிழா கடந்த 5 மற்றும் 6ஆம் திகதிகளில் திகதிகளில் சிறப்பாக நடைபெற்றது.









இசை நிகழ்ச்சியுடன் பல் சுவை உணவுகள், சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு அம்சங்கள் களியாட்டங்கள், கொண்டாட்டங்கள் என கடந்த வார இறுதியில் சிறப்பாகவும் மகிழ்வாகவும் நிறைவுபெற்றிருக்கின்றது 'Mega Blast 2026'





























நமது அன்றாட வாழ்வில் எப்போது வேண்டுமானாலும் அவசரத் தேவைகள் ஏற்படலாம். அந்த நேரத்தில் பதற்றமடையாமல், சரியான துறைக்கு உடனடியாகத் தொடர்புகொள்ள இந்தத் தொலைபேசி எண்கள் மிக அவசியமானவை.

இந்தப் படத்தைச் சேமித்து வைத்துக் கொள்ளுங்கள், உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுடனும் பகிர்ந்து கொள்ளுங்கள். இது ஒருவருடைய உயிரைக் காக்க அல்லது ஆபத்தான நேரத்தில் உதவக்கூடும்!

BEHIND ME MEDIA




= = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = = =

# மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலை வலுப்படுத்த வேண்டும் ஐ.நா மனித உரிமைகள் பேச்சாளர் ரவீனா ஷம்தாசனி

மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக் கூறலை வலுப்படுத்துவதற்கும், நல்லிணக்கம் மற்றும் நிவாரணத்தை முன்னெடுப்பதற்கும் இலங்கை அரசு ஏற்கனவே எடுத்துள்ள நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அலுவலகம் அழைப்பு விடுத்துள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் பேச்சாளர் ரவீனா ஷம்தாசனி (Ravina Shamdasani) தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டில், இலங்கை தொடர்ந்து தொடர்ச்சி யான இயற்கை பேரிடர்களையும் பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்கொண்டுள்ளது. இது ஏழை எளிய மக்களையே அதிகம் பாதித்துள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

“ஊழலை ஒழிப்பதற்கு அதிகாரிகளால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதும், அரசியல் படுகொலைகள், பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்டமைகள் மற்றும் 2019 தாக்குதல்கள் தொடர்பில் முக்கிய கைதுகளும் விசாரணைகளும் இடம்பெற்றிருப்பதும் ஊக்கமளிப்பதாக இருப்பினும், நீண்டகாலமாக நிலவும் தண்டனையிலிருந்து விலக்கு பெறும் கலாச்சாரத்தை முடிவுக்குக் கொண்டுவர மேலும் பல செய்யப்பட வேண்டி யுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) அரசாங்கம் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறது, இதனால் தன்னிச்சையான கைதுகளும், குற்றச்சாட்டுகள் இன்றி நீண்டகால தடுப்புக்காவல்களும் இடம்பெறுகின்றன. சித்திரவதைகள், காவலில் நிகழும் மரணங்கள், சிறைச்சாலை நெருக்கடி மற்றும் வன்முறைகள் தொடர்ந்து நீடிக்கின்றன. சிவில் சமூகப் பிரதிநிதிகள், செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அரசின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுவதோடு, காணி மற்றும் மதத் தலங்கள் தொடர்பான பதற்றங்களும் தொடர்ந்து நிலவி வருகின்றன.

இலங்கை தனது நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் முயற்சிகளை இரட்டிப்பாக்க வேண்டும் என்றும், பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும் வரை அதைப் பயன்படுத்துவதைத்



இடைநிறுத்துமாறும் (moratorium), அச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாகத் தடுப்பில் வைக்கப்பட்டுள்ள கைதிகள் மற்றும் கைதிகளை விடுதலை செய்யுமாறும் நாங்கள் வலியுறுத்துகிறோம்” என ரவீனா ஷம்தாசனி தெரிவித்துள்ளார்.

# Business Global International award அமைப்பின் 'Excellence Award' நிகழ்வு!

BEHIND ME MEDIA

Business Global International award அமைப்பானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 3ஆம் திகதி 'Excellence Award' என்ற நிகழ்வை யாழ்ப்பாணம் திவ்ய மஹால் மண்டபத்தில் நடாத்தவிருக்கின்றது. அது தொடர்பான நேர்காணல்...

கேள்வி: **Excellence Award நிகழ்வை எதற்காக நடத்த வேண்டும் என்ற யோசனை ஏற்பட்டது?**

பதில்: எமது சமூகத்தில் பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்டு வருகின்ற பலர் இருக்கின்றார்கள். தொழில் முனைவோர், சமூக சேவையாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்கள் தங்களுடைய பங்களிப்புக்கான உரிய அங்கீகாரத்தைப் பெறாமல் இருக்கின்றார்கள்.

அவர்களின் திறமை, உழைப்பு மற்றும் சமூகப் பங்களிப்புகளை பாராட்டி, அவர்களுக்கு சர்வதேச தரத்திலான ஒரு கௌரவத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே Excellence Awards நிகழ்வை நடத்தும் எண்ணம் உருவானது.

BGIA-வின் நோக்கமும் சிறந்த சாதனையாளர்களை அடையாளம் கண்டு, அவர்களை கௌரவிப்பதுடன், மேலும் பலரை சாதனைப் பாதையில் பயணிக்க ஊக்குவிப்பதாகும்.

கேள்வி: **நிகழ்விடமாக ஏன் யாழ்ப்பாணம் தெரிவு செய்யப்பட்டது?**

பதில்:
யாழ்ப்பாணம் என்பது கல்வி, கலை, கலாசாரம், தொழில் முயற்சி மற்றும் சமூக சேவை போன்ற பல துறைகளில் சிறந்து விளங்கும் திறமையான மக்களைக் கொண்ட ஒரு முக்கியமான பிரதேசமாகும்.

வடமாகாணத்தில் உள்ள சாதனையாளர்களை கொழும்பு போன்ற இடங்களுக்கு அழைத்துச் செல்வதைவிட, அவர்களுடைய சொந்த மண்ணிலேயே அவர்களை கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் யாழ்ப்பாணத்தைத் தெரிவு செய்தோம்.

மேலும், வடமாகாணத்தில் இருந்து தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கு சாதனையாளர்களை அறிமுகப்படுத்துவதற்கான ஒரு முக்கியமான மேடையாக இந்த நிகழ்வை உருவாக்க வேண்டும் என்பதும் எமது நோக்கமாகும்.

கேள்வி: **Business Global International Award Organisation-ன் செயற்பாடுகள் குறித்து கூற முடியுமா?**

பதில்:
Business Global International Award Organisation – BGIA என்பது தொழில், சமூக சேவை, தலைமைத்துவம், கலை, ஊடகம், கல்வி, சுகாதாரம், சுற்றுலா, தொழில்நுட்பம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குபவர்களை அடையாளம் கண்டு கௌரவிக்கும் ஒரு விருது அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

விருது விழாக்களை நடத்துவதுடன், சமூகப் பொறுப்பு சார்ந்த செயற்பாடுகள், சமூக சேவையாளர்களை ஊக்குவித்தல், தொழில் முனைவோர்களை கௌரவித்தல் மற்றும் பல்வேறு துறைகளில் சாதனையாளர்களை ஒரே மேடையில் இணைத்தல் போன்ற செயற்பாடுகளிலும் BGIA கவனம் செலுத்துகிறது.

கேள்வி: **Business Global International Award Organisation-ன் கடந்தகால செயற்பாடுகள் குறித்து...**

பதில்:
BGIA கடந்த காலங்களில் பல்வேறு விருது மற்றும் சமூக அங்கீகார நிகழ்வுகளை நடத்தியுள்ளது.

குறிப்பாக கொழும்பு BMICH-ல் சர்வதேச விருது விழா நடத்தப்பட்டுள்ளது. மேலும் கத்தாரிலும் சமூக சேவையாளர்களை கௌரவிக்கும் விருது நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது. சமூக சேவையாளர்களை ஊக்குவிக்கும் வகையில் Social Service Awards போன்ற நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த அனுபவங்களின் தொடர்ச்சியாகவே தற்போது வடமாகாணத்தில் Excellence Awards 2026 நிகழ்வை நடத்துவதற்கு நாம் தயாராகி வருகின்றோம்.

கேள்வி: **அக்டோபர் 3ஆம் தேதி நடைபெறவுள்ள நிகழ்வின் முன் ஏற்பாடுகள் எந்தக் கட்டத்தில் உள்ளன?**

பதில்:
தற்போது நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

விருது பெறவுள்ள சாதனையாளர்களை தெரிவு செய்தல், அழைப்பிதழ்கள், விருந்தினர்களுக்கான ஏற்பாடுகள், மேடை மற்றும் நிகழ்ச்சி ஒழுங்குகள், ஊடக ஒருங்கிணைப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

03 அக்டோபர் 2026 அன்று யாழ்ப்பாணம் திவ்ய மஹாலில் மாலை 4.00 மணிக்கு சிறப்பாகவும் கௌரவமாகவும் இந்த நிகழ்வை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வருகின்றோம்.

கேள்வி: **Excellence Awards நிகழ்வில் கலந்துகொள்ள அல்லது தொடர்புகொள்ள விரும்புபவர்கள் எவ்வாறு உங்களை அணுகலாம்?**

பதில்:
நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் அல்லது விருது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் எமது ஏற்பாட்டுக் குழுவை நேரடியாகத் தொடர்புகொள்ளலாம்.

தொடர்பு இலக்கம்: 0773653989

விருது தொடர்பான பரிந்துரைகள், பங்கேற்பு மற்றும் நிகழ்வு பற்றிய மேலதிக தகவல்களையும் இந்த இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கேள்வி: **பொதுமக்களிடத்தில் உங்களுக்கான வரவேற்பு எப்படி உள்ளது?**

பதில்:
மிகவும் மகிழ்ச்சியான வரவேற்பு கிடைத்து வருகிறது. குறிப்பாக வடமாகாணத்தில் பல்வேறு துறைகளில் சாதனை படைத்தவர்கள் மற்றும் சமூக சேவையாளர்கள் இந்த நிகழ்வைப் பற்றி ஆர்வத்துடன் விசாரித்து வருகின்றனர்.

ஒருவருடைய உழைப்பையும் சாதனையையும் பொதுமக்கள் முன்னிலையில் கௌரவிப்பது அவருக்கு மட்டுமல்ல, அவரைப் பார்த்து எதிர்காலத்தில் சாதிக்க நினைக்கும் இளம் தலைமுறைக்கும் ஒரு மிகப்பெரிய ஊக்கமாக அமையும்.

கேள்வி: **Business Global International Award Organisation-ன் எதிர்கால செயற்திட்டங்கள் என்ன?**

பதில்:
எமது எதிர்காலத் திட்டங்கள் ஒரு விருது விழாவுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை.

இலங்கையின் பல்வேறு மாவட்டங்களிலும் திறமையான தொழில் முனைவோர், சமூக சேவையாளர்கள் மற்றும் சாதனையாளர்களை அடையாளம் கண்டு அவர்களை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அறிமுகப்படுத்துவதே எமது முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

அத்துடன் இளைஞர்களை ஊக்குவித்தல், தொழில் முனைவோர் வளர்ச்சிக்கு ஆதரவளித்தல், சமூகப் பொறுப்புத் திட்டங்களை முன்னெடுத்தல் மற்றும் சர்வதேச மட்டத்தில் இலங்கையின் திறமையாளர்களுக்கு வாய்ப்புகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுக்க நாம் எதிர்பார்க்கின்றோம்.

“சாதனையாளர்களை அடையாளம் காண்போம் - அவர்களை கௌரவிப்போம் அடுத்த தலைமுறையை சாதிக்க ஊக்குவிப்போம்” என்பதே எமது பயணத்தின் முக்கிய நோக்கமாகும்.

“எதிர்வரும் 03 அக்டோபர் 2026 அன்று யாழ்ப்பாணம் திவ்ய மஹாலில் நடைபெறவுள்ள Excellence Awards 2026 நிகழ்வில் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். சாதனையாளர்களைக் கௌரவிக்கும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வில் அனைவரும் இணைந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

BGIA-வின் அதிகாரப்பூர்வ தளம் விருது விழாக்கள், சமூக சேவை, தொழில் முனைவோர் மற்றும் பல்வேறு துறைகளின் சாதனைகளை கௌரவிப்பதை அதன் முக்கிய செயற்பாடுகளாக உள்ளதை இந்த வேளையில் குறிப்பிட விரும்புகின்றோம்.



# மேயர் வேட்பாளர்களால் வரி திட்டங்கள் வெளியீடு!







ஒலிவியா சௌ மற்றும் அலெக்சாண்டர் குறைந்த வரி உயர்வுகளை உறுதியளிக்கின்றனர், பிராட்.ஃ.போர்டோ முழு திட்டத்தையும் பின்னர் வெளியிட காத்திருக்கிறார்

மேயர் ஒலிவியாசௌ, மேயர் வேட்பாளர் கிறிஸ் அலெக்சாண்டர் மற்றும் கவுன்சிலர் பிராட் பிராட்.ஃ.போர்டு ஆகியோர் அனைவரும் சொத்து வரி உயர்வுகளை குறைவாக வைத்திருக்க விரும்புகின்றனர்

ஒலிவியா சௌ வின் இரண்டாவது மேயர் பதவிக்காலம் ஜான் டோரி காலகட்டத்தில் இருந்த பணவீக்க விகிதத்திற்கு நெருக்கமான சொத்து வரி உயர்வு வாக்குறுதிக்குத் திரும்புவதைக் குறிக்கலாம்.

செப்டம்பர் 9-ஆம் தேதி சோ தனது மறுதேர்தல் பிரச்சாரத்தைத் தொடங்க இருக்கும் நிலையில், கிட்டத்தட்ட வரலாறு காணாத அளவிற்கு அதிகமான சொத்து வரி உயர்வுகளின் நாட்கள் முடிவுக்கு வரும் என அவரது பணியாளர்கள் தெரிவித்தனர், ஏனெனில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர் பொறுப் பேற்றபோது இருந்ததை விட நகரம் இப்போது “மிகவும் நிலையான நிதி நிலையில்” உள்ளது.

வெள்ளிக்கிழமை காலை சோவின் இந்த உறுதிமொழியை டொரண்டோ ஸ்டார் முதலில் வெளியிட்டது.

சோவின் முதல் இரண்டு வரவு செலவுத் திட்டங்கள் சொத்து வரியை முறையே 9.5 சதவீதம் மற்றும் 6.9 சதவீதம் உயர்த்தின. முந்தையது டொரண்டோவின் வரலாற்றிலேயே அதிக உயர்வாகும்.

வெள்ளிக்கிழமையன்று, தொற்றுநோய்க்குப் பிறகும் ஒப்பீட்டளவில் குறைந்த வரி உயர்வுகள் நடைபெற்ற பல ஆண்டுகளுக்குப் பிறகும் டொரண்டோவின் நிதி நிலையை சீரமைக்க அந்த சர்ச்சைக்குரிய நடவடிக்கைகள் அவசியமாக இருந்தன என்று அவரது பிரச்சாரக் குழு வாதிட்டது.

வாக்காளர்களை சந்திக்கும் முன் தனது கடைசி வரவு செலவுத் திட்டத்தில், 2021-க்குப் பிறகான மிகக் குறைந்த உயர்வான 2.2 சதவீத உயர்வை சோ முன்மொழிந்தார்.

அவரது முக்கிய மேயர் போட்டியாளரான கவுன்சிலர் பிராட் பிராட்.ஃ.போர்டு (பீச்சஸ்-ஈஸ்ட் யார்க்), தனது முழுமையான நிதித் திட்டம் பிரச்சாரத்தின் பிற்பகுதியில் வெளிவரும் என்று கூறினார்.

“டொரண்டோ குடியிருப்பாளர்களின் வாழ்க்கைச் செலவை மேம்படுத்துவதற்கான விரிவான திட்டம் எங்களிடம் உள்ளது, அதை உரிய நேரத்தில் அறிவிப்போம்” என்று பிராட்.ஃ.போர்டின் பிரச்சாரப் பேச்சாளர் வெள்ளிக்கிழமை தெரிவித்தார். ”மரியாதையுடன் சொல்கிறேன், நீண்ட வார இறுதியின் வெள்ளிக்கிழமை மதியம், மேயர் சோ பற்றிய ஒரு செய்தியில் எதிர்வினையாக நாங்கள் அதை அறிவிக்க மாட்டோம்.”

“இது முழுமையான விவாதத்திற்கு உரியது” என்று அந்தப் பேச்சாளர் மேலும் கூறினார்.

2023 மேயர் இடைத்தேர்தலின் போது “மிதமான” வரி உயர்வுகளை சோ உறுதியளித்தார், ஆனால் பதவியேற்ற பிறகு டொரண்டோவின் வரலாற்றிலேயே மிக அதிக உயர்வை செய்தார் என்பதால், சோவின் இப்போதைய உறுதிமொழியைப் பற்றி டொரண்டோ மக்கள் சந்தேகப்பட வேண்டும் என பிராட்.ஃ.போர்டின் பிரச்சாரக் குழு கூறியது.

முன்னாள் கூட்டாட்சி அமைச்சரான கிறிஸ் அலெக்சாண்டரும், தேர்ந்தெடுக்கப்பட்டால் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு சொத்து வரி உயர்வுகளை குறைந்தபட்சமாக வைத்திருப்பதாக உறுதி யளிக்கிறார்.

அவரது முதல் ஆண்டில் முழுமையான உறைவு இருக்கும் என்று அவர் கூறினார்.

“பணவீக்கத்திற்கு கூட எந்த உயர்வும் இருக்காது” என்று அலெக்சாண்டர் வெள்ளிக்கிழமை கூறினார்.

இருப்பினும், தனது இரண்டாம் ஆண்டில் பணவீக்கத்திற்குக் கீழான உயர்வுக்கு தான் திறந்த மனதுடன் இருப்பதாக அவர் கூறினார்.

“2027 மற்றும் 2028-க்கான உங்கள் வரிப் பட்டியலில் ஒரே எண்ணிக்கை இருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன், ஆனால் 2028-க்கு அந்த உறுதிமொழியை நான் இப்போது கொடுக்கத் தயாராக இல்லை” என்று அவர் கூறினார்.

சொத்து வரியை உயர்த்த மாட்டேன் என்று உறுதியளித்திருந்தாலும், நகர கட்டிட நிதிக்கான ஆண்டு 1.5 சதவீத உயர்வைத் தொடரக்கூடும் என்று அலெக்சாண்டர் கூறினார் - இது உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்ட தனி வரியாகும். இயல்பான சொத்து வரி செயல்பாட்டு மற்றும் மூலதனச் செலவுகளுக்கு பயன்படுத்தப்படுகிறது.

# கனடாவில் நாய் கின்னஸ் சாதனை 56 பேரை 16 விநாடிகளில் தாண்டியது!

கனடாவில் நடைபெற்ற நாய்களுக்கான தாண்டும் போட்டியில், 56 பேரை வெறும் 16 விநாடிகளில் தாண்டிய நான்கு வயதான பெண் அவுஸ்திரேலியன் ஷெப்பர்ட் நாய் கின்னஸ் உலக சாதனை படைத்துள்ளது.




கனடாவின் எட்மன்டன் நகரில் உள்ள பொதுமைதானத்தில் கடந்த ஜூன் 14 ஆம் திகதி இந்த வித்தியாசமான போட்டி நடைபெற்றது.

எட்மன்டன் ரிவர்ஹாக்ஸ் பேஸ்பால் அணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், பயிற்சி பெற்ற நாய்கள் மைதானத்தில் சற்று குனிந்த நிலையில் வரிசையாக நின்ற மனிதர்களை ஒரு நிமிடத்திற்குள் தாண்டும் சவால் இடம்பெற்றது.

இதில், ஜெனிபர் ஃப்ரேசரால் பயிற்றுவிக்கப்பட்ட நான்கு வயதான அவுஸ்திரேலியன் ஷெப்பர்ட் இனத்தைச் சேர்ந்த □ஷார்டோனே□ என்ற பெண் நாய் பங்கேற்றது.

மைதானத்தில் 56 பேர் வரிசையாக சற்று குனிந்த நிலையில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், ஷார்டோனே அவர்களை வெறும் 16 விநாடிகளில் தாண்டி புதிய கின்னஸ் உலக சாதனையைப் பதிவு செய்தது.

ஷார்டோனேவின் திறமை குறித்து அதன் பயிற்சியாளர் ஜெனிபர் ஃப்ரேசர் கூறுகையில், சில ஆண்டுகளுக்கு முன்பு அந்த நாயை தனது முதுகின் மீது தாண்டுவதற்கு பயிற்சி அளிக்கத் தொடங்கியதாக தெரிவித்தார்.

அதன்பின்னர் ஷார்டோனேவின் திறமைகள் படிப்படியாக அதிகரித்ததாகவும், மனிதர்களைத் தாண்டுவது அதன் பல்வேறு திறமைகளில் ஒன்றே என்றும் அவர் குறிப்பிட்டார்.






# டொராண்டோவில் தன்னை கருணைக்கொலை செய்யுமாறு நடிகை கோரிக்கை!

மனநல பாதிப்பை மட்டுமே காரணமாகக் கொண்டு மருத்துவ உதவியுடனான மரணத்தை நாட அனுமதி கோரிய பிரபல நகைச்சுவை நடிகையின் அவசர மனுவை ஒன்டாரியோ உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

எனினும், இது தொடர்பாக அவர் தாக்கல் செய்துள்ள அரசமைப்புச் சட்டப் போராட்டத்திற்குப் பதிலளிக்குமாறு கனடா அரசுக்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



டொராண்டோவைச் சேர்ந்த முன்னாள் நடிகையும் நகைச்சுவைக் கலைஞருமான கிளாரி புரோஸோ, கடந்த 35 ஆண்டுகளுக்கும் மேலாக தீவிர மனநலப் பிரச்சினைகளால் அவதிப்பட்டு வருகிறார்.

பல கட்ட சிகிச்சைகளுக்குப் பிறகும் தனக்குக் தீராத மன உளைச்சல் நீடிப்பதால், சட்டம் வழங்கும் கருணைக்கொலைக்குத் தனக்கு அனுமதி அளிக்க வேண்டும் என கடந்த மே மாதம் அவசர மனுத் தாக்கல் செய்திருந்தார்.

நீதிபதி, புரோஸோவின் வேதனைகள் உண்மையானவை என்பதில் மாற்றுக் கருத்து இல்லை என்றபோதிலும், சட்ட விலக்கு அளிப்பது சமூகத்திலும் அரசின் கொள்கை முடிவுகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனக் கூறி மனுவை நிராகரித்தார்.

# விடுதலைப் புலிகள் அமைப்புக்கு பளையில் முகாமுள்ளதாகக் கூறியவரின் விளக்கமறியல் நீடிப்பு



விடுதலைப் புலிகள் அமைப்புக்குச் சொந்தமான முகாம் ஒன்று பளைப் பாதுகாப்புக் காட்டில் உள்ளதாகப் போலியான செய்தியைப் பரப்பியதாகக் கூறி, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதவான் பசன் அமரசேகர, புதன்கிழமை (02) அன்று உத்தரவிட்டுள்ளார்.

சந்தேகநபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவித்து, பயங்கரவாத விசாரணைப் பிரிவு முன்வைத்த கருத்துக்களை ஆராய்ந்ததன் பின்னரே நீதவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர், கண்டகண்டார மனித உரிமைகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எனக் கூறப்படும் சங்கீத் ஜெயசேகர என்பவராவார்.

வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சிறைச்சாலை அதிகாரிகளால் சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நீதிமன்றத்தில் ஆஜராகிய பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய விசாரணைகளின் முன்னேற்றத்தைக் காட்டும் அறிக்கையைச் சமர்ப்பித்தனர். அண்டர் கான்டினென்டல் மனித உரிமைகள் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் எனத் தன்னை அறிமுகப்படுத்திய சந்தேகநபர், செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தி, கிளிநொச்சி, பளைப் பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்புக் காடு ஒன்றிற்குள் எல்.டி.இ.டி அமைப்புக்குச் சொந்தமான பயிற்சி முகாமும் வெடிகுண்டு தயாரிப்புத் தொழிற்சாலையும் உள்ளதாகத் தகவல்களை வெளியிட்டுள்ளதாக நீதிமன்றத்திற்குத் தெரிவித்தனர்.

சந்தேகநபர் ஊடகவியலாளர் சந்திப்பில் வெளியிட்ட கருத்துக்களைப் பொலிஸ் மா அதிபர் அடுத்த நாளே முற்றிலுமாக மறுத்துள்ளதாகவும், சம்பவம் குறித்து விசாரணை நடத்துவதற்காகக் கிளிநொச்சி பகுதிக்கு விசாரணைக் குழு ஒன்றும் பொலிஸ் மோப்ப நாய்களும் அனுப்பப்பட்டுச் சோதனையிடப்பட்ட போதிலும், அங்கு வெடி குண்டுத் தொழிற்சாலை ஒன்று உள்ளமைக்கான எந்தவொரு சாட்சியமும் கிடைக்கவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர். மேலும், அப்பகுதியில் உள்ள தமிழ் மக்கள் பளைப் பாதுகாப்புக் காப்பிற்குள் சென்று விவசாய மற்றும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது தொடர்பில் பளைப் பொலிஸார் ஏற்கனவே நீதிமன்றத்தில் விடயங்களை அறிவித்து வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

கொழும்புப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து கடந்த ஓகஸ்ட் 14 ஆம் திகதியன்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்திய சந்தேகநபர், கிளிநொச்சியின் பளைப் பாதுகாப்புக் காட்டில் எல்.டி.இ.டி முகாமும் வெடிகுண்டு தயாரிப்புத் தொழிற்சாலையும் இருப்பதாகத் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்ட பொலிஸார், இத்தகைய கருத்துக்களை வெளியிடுவது அமைதிக்குக் குந்தகம் விளைவிப்பதோடு, மக்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தக் கூடியது எனவும் விளக்கமளித்தனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்ட பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, கிளிநொச்சிப் பகுதி வலய வன அதிகாரி ஒருவர் வழங்கிய தகவலின் அடிப்படையிலேயே தாம் இத்தகைய அடிப்படையற்ற கருத்தைக் கூறியதாகச் சந்தேகநபர் வெளிப்படுத்தியுள்ளார்.

அதற்கமைய, குறித்த வன அதிகாரி மற்றும் அவரது மனைவியிடம் வாக்குமூலம் பெறப்பட்ட போது, தாங்கள் அவ்வாறான எதையும் கூறவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளதாகக் குறிப்பிட்ட பொலிஸார், வன அதிகாரியுடன் தொடர்புகொண்டு விசாரித்ததில் சந்தேகநபர் கூறியது முற்றிலும் பொய்யான தகவல் என்பதும் உறுதியாகியுள்ளதாக நீதிமன்றத்திற்குத் தெரிவித்தனர்.

பளைப் பாதுகாப்புக் காப்பிற்குள் சட்டவிரோதமான முறையில் பண்ணை ஒன்றும் ஆடைத் தொழிற்சாலை ஒன்றும் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துத் தமிழ்ப் வர்த்தகர் ஒருவருக்கு எதிராகப் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளதாகக் குறிப்பிட்ட பொலிஸார், சந்தேகநபர் பல போலியான அடையாள அட்டைகளைப் பயன்படுத்தியுள்ளமைக்கான தகவல்களும் வெளியாகியுள்ளதாகத் தெரிவித்தனர்.

மேலும், சந்தேகநபரின் தொலைபேசி ஆவணங்கள் மற்றும் அவர் 3 தேசிய அடையாள அட்டைகளைப் கைவசம் வைத்திருந்தது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளமையால், சந்தேகநபரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கோரினர்.

சமர்ப்பிக்கப்பட்ட கருத்துக்களை ஆராய்ந்த நீதவான், சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், சம்பவம் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றத்தை எதிர்வரும் 16 ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்குப் பணித்தார்.

BEHIND ME MEDIA

# சிறுவர்கள் இணையவழி பாலியல் துஷ்பிரயோகம் 21 நாடுகளில் ஒரு வருடத்தில் 20 மில்லியனாகியது!



21 நாடுகளில் இணையத்தைப் பயன்படுத்தும் சுமார் 20 மில்லியன் சிறுவர்கள் ஒரு வருட காலத்தில் டிஜிட்டல் தளங்கள் ஊடாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்று ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியம் (UNICEF) வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆப்பிரிக்கா, ஆசியா, லத்தீன் அமெரிக்கா மற்றும் கிழக்கு ஐரோப்பா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 12 முதல் 17 வயதுக்கு இடைப்பட்ட, இணையத்தைப் பயன்படுத்தும் சிறுவர்களில் ஐந்தில் ஒருவருக்கும் அதிகமானோர் கடந்த ஆண்டில் குறைந்தது ஒரு வகையான பாலியல் துஷ்பிரயோகத்திற்காவது முகங்கொடுத்துள்ளதாக அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.



அங்கு சுமார் 15 மில்லியன் சிறுவர்கள் தேவையற்ற பாலியல் உள்ளடக்கங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளதுடன், 9 மில்லியன் சிறுவர்கள் பாலியல் உரையாடல்களில் ஈடுபட அல்லது பாலியல் புகைப்படங்களைப் பகிர்ந்து கொள்ள அழுத்தங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.


மேலும் 4 மில்லியன் சிறுவர்களின் பாலியல் புகைப்படங்கள் அவர்களின் அனுமதியின்றி பகிரப்பட்டுள்ளதாகவும் வெளிப்படைந்துள்ளது.

அறிக்கையின்படி, இச்சம்பவங்களில் சுமார் 60 சதவீதம் முகநூல் (Facebook), வாட்ஸ்அப் (WhatsApp), இன்ஸ்டாகிராம் (Instagram), ஸ்னப்செட்(Snapchat) மற்றும் டிக்டொக் (TikTok) போன்ற சமூக ஊடக தளங்கள் மூலமாகவே நடந்துள்ளன. இணையவழி விளையாட்டுகள் (Online Games) சார்ந்த சம்பவங்களின் அளவு சுமார் 14 சதவீதமாகும்.

இவ்வாறான சம்பவங்களில் பாதிக்கும் மேற்பட்டவற்றில் சிறுவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த ஒருவரே தொடர்புபட்டுள்ளமை ஒரு விசேட அம்சமாகும். மேலும் 38 சதவீத சம்பவங்களில் சிறுவர்கள் முதலாவதாக துஷ்பிரயோகம் செய்தவரை இணைய வழியிலேயே அடையாளம் கண்டுள்ளனர்.

அத்துடன், சிறுவர்கள் தொடர்பான இச்சம்பவங்களில் 1 சதவீதத்திற்கும் குறைவானவையே பொலிஸார், சமூகப் சேவையாளர்கள் அல்லது உதவிச் சேவைகளுக்குப் புகாரளிக்கப்பட்டுள்ளது என்றும் யுனிசெப் (UNICEF) தெரிவிக்கிறது.

செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்தி உருவாக்கப்படும் பாலியல் உள்ளடக்கங்கள் குறித்தும் இவ்வறிக்கை கவனம் செலுத்தியுள்ளது.



தரவுகள் சேகரிக்கப்பட்ட 9 நாடுகளில் சுமார் 1.1 மில்லியன் சிறுவர்கள், தங்களைச் சித்தரிக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவு மூலம் உருவாக்கப்பட்ட பாலியல் புகைப்படங்கள் அல்லது காணொளிகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகப் பதிவு செய்துள்ளனர்.

தொழில்நுட்பம் ஊடாக பாலியல் சுரண்டலுக்கு உள்ளான சிறுவர்களிடையே தற்கொலை எண்ணங்கள் அல்லது தமக்குத்தானே சுய தீங்கு விளைவிக்கும் நடத்தைகள் பதிவாவது, ஏனைய சிறுவர்களுடன் ஒப்பிடுகையில் சுமார் நான்கு மடங்கு அதிகம் என்றும் யுனிசெப் சுட்டிக்காட்டுகிறது.

இந்த ஆராய்ச்சி 2020 முதல் 2025 வரையிலான காலப்பகுதியில் 21 நாடுகளில் இணையத்தைப் பயன்படுத்தும் சுமார் 21,000 சிறுவர்களை உள்ளடக்கி நடத்தப்பட்டுள்ளதுடன், இது இவ்வாறான அமைப்பில் நடத்தப்பட்ட மிகப்பெரிய ஆய்வுகளில் ஒன்றாகும் என்றும் யுனிசெப் குறிப்பிட்டுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நடைமுறைகளைப் பலப்படுத்துதல், புதிய வகையான துஷ்பிரயோகங்களை உள்ளடக்கும் வகையில் சட்டங்களைப் புதுப்பித்தல் மற்றும் புகாரளிக்கும் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அமைப்புகளை மேம்படுத்துமாறு யுனிசெப் அரசாங்கங்களிடமும் தொழில்நுட்ப நிறுவனங்களிடமும் கோரிக்கை விடுத்துள்ளது.

# பிரிட்டன் - காஞ்சோண்டியை கொண்டாடும் நாடு

BEHIND ME MEDIA

போன வார தொடர்ச்சி...

பருத்தி பற்றாக்குறை காரணமாக முதலாம் உலகப் போரின் போது ஜெர்மன் இராணுவ சீருடைகள் கிட்டத்தட்ட அனைத்தும் காஞ்சோண்டி நாரால் தயாரிக்கப்பட்டன என்று பரவலாக நம்பப்படுகிறது.

சமீபத்தில், ஆஸ்திரியா, ஜெர்மனி மற்றும் இத்தாலியில் உள்ள நிறுவனங்கள் வணிக ரீதியாக காஞ்சோண்டி செடி நூலில் இருந்து துணிகளை ஆடைகளை உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளன.

காஞ்சோண்டியை சாயப் பொருளாகப் பயன்படுத்தலாம், வேர்களில் இருந்து மஞ்சள் நிறத்தையோ அல்லது இலைகளில் இருந்து மஞ்சள் கலந்த பச்சை நிறத்தையோ உற்பத்தி செய்யலாம்.

வழக்கமான ஆடைகளுக்கு நிலையான மாற்றான காஞ்சோண்டி செடி துணி, அதன் வலுவான, நீடித்த மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த பண்புகள் காரணமாக கவனத்தை ஈர்த்து வருகிறது. பொதுவான தொட்டால் எரிச்சலூட்டுகிற ஒருவகை செடி செடியின் தண்டுகளிலிருந்து பெறப்பட்ட காஞ்சோண்டி நார், ஃபேஷன் துறையின் சுற்றுச்சூழல் சவால்களுக்கு ஒரு நம்பிக்கைக்குரிய தீர்வை வழங்குகிறது. நூற்பு தொழில்நுட்பம் மற்றும் தாவர இனப்பெருக்கத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், சுற்றுச்சூழல் உணர்வுள்ள நிறுவனங்களின் ஆர்வத்தை அதிகரித்து வருவதால், நிலையான நம்பகத்தன்மையை மேம்படுத்துகின்றன.

வழக்கமான பருத்தி மற்றும் பிற துணிகளின் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த கவலைகளால் உந்தப்பட்டு, நிலையான ஜவுளிகளில் காஞ்சோண்டி பயன்படுத்துவதற்கான இயக்கம் வளர்ந்து வருகிறது.

புதிய நூற்பு தொழில்நுட்பங்கள் மற்றும் தாவர இனப்பெருக்கத் திட்டங்கள் வலுவான, பல்துறை மற்றும் நீண்ட கால நோக்குடன் காஞ்சோண்டி நம்பப்டுகிறது, இதனால் அவை உயர்தர நூல்களில் செயலாக்க த்தை எளிதாகின்றன.

ஹேலிக்சா மற்றும் நெட்டில் சர்க்கிள் போன்ற நிறுவனங்கள் நிலையான ஜவுளிகளில் காஞ்சோண்டி நார்களைக் உபயோகிக்கும் திறனை உறுதி செய்வதற்கும்,

நெய்த துணிகள் முதல் நெய்யாத பொருட்கள் வரை பல்வேறு வகையான ஜவுளி பயன்பாடுகளுக்கு காஞ்சோண்டி நார் பொருத்தமானது. தனித்துவமான அமைப்பு மற்றும் பண்புகளை உருவாக்க பருத்தி போன்ற பிற இழைகளுடன் இதை கலக்கலாம்.

உங்கள் கொல்லைப்புறத்தில் அல்லது காட்டு விளிம்பில் உள்ள பகுதியில் மறைந்திருக்கும் ஒரு சாதாரண செடி யான காஞ்சோண்டி தாவரத்தின் தண்டுகளுக்குள் நீண்ட, வலுவான, மெல்லிய இழைகள் உள்ளன. ஆச்சரியப்படும் விதமாக, துணியில் நெய்யப்படும்போது காஞ்சோண்டி கடுமையானது அல்ல காஞ்சோண்டி துணி பளபளப்பாகவும் மென்மையாகவும் இருக்கும், கைத்தறி போன்றது ஆனால் இன்னும் வலிமையானது.

காஞ்சோண்டி குறைந்தபட்சம் நீண்ட காலமாகவே ஜவுளிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. சணலுடன், காஞ்சோண்டி ஐரோப்பாவில் மிக முக்கியமான தாவர அடிப்படையிலான ஜவுளிப் பொருளாக இருந்தது, ஏனெனில், பருத்தியைப் போலல்லாமல், அது எல்லா காலநிலையிலும் கூட வளரும் செடி.



வணிகத்தில் காஞ்சோண்டி செடி நார் விவசாயம் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தொடங்கியது. முதல் உலகப் போரின் போது, பருத்தி மீது விதிக்கப்பட்ட தடைகளுடன், ஜெர்மன் இராணுவம் தங்கள் வீரர்களின் சீருடைகளுக்கு காஞ்சோண்டி துணியைப் பயன்படுத்தியது.

இப்போது நிலையான ஃபேஷன் துறையில் காஞ்சோண்டி சார்ந்த ஜவுளிகளில் ஆர்வம் மீண்டும் எழுவதைக் காண்கிறோம். தொட்டால் எரிச்சலூட்டுகிற ஒருவகை செடி நார் பல காரணங்களுக்காக நிலையான ஃபேஷனுக்கு ஒரு நம்பிக்கைக்குரிய மாற்றாகும் என்று நிபுணர்கள் சொல்கின்றனர்.

பூச்சிக்கொல்லிகள், களைக்கொல்லிகள் அல்லது நீர்ப்பாசனம் போன்ற தீவிர உள்ளீடுகள் இல்லாமல், காஞ்சோண்டி எல்லா இடங்களிலும் தீவிரமாக வளரும். மற்ற பயிர்களுக்குப் பொருந்தாத மோசமான மண்ணிலும் கூட காஞ்சோண்டி செழித்து வளரும்.

பருத்தியைப் போலல்லாமல், காஞ்சோண்டி குளிர்ந்த காலநிலையில் வளர்கிறது, இது உள்ளூர் அல்லது பிராந்திய உற்பத்தி மற்றும் செயலாக்கத்திற்கு ஒரு நல்ல விடயமாக அமைகிறது.

காஞ்சோண்டி நார் கோடையில் குளிர்ச்சியாகவும், குளிர்காலத்தில் சூடாகவும் இருக்கும்.

காஞ்சோண்டி நார் உள்ளமைக்கப்பட்ட தீ தடுப்பு பண்புகளைக் கொண்டுள்ளது.

காஞ்சோண்டி செடி ஒரு உணவு, மருத்துவ மற்றும் சாய தாவரமாகவும் மதிப்பிடப்படுகிறது.

இங்கே பிரபல்யமான பிராண்ட் கடைகளில் காஞ்சோண்டி நாரில் நெய்யப்பட்ட பலவகையான நவீன ஆடைகளை சாதாரணமாக காணலாம். வாங்கலாம் அது சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாததாகவும் பருத்திக்கு மாற்றீடாகவும் பார்க்கிறார்கள்.

அப்பாடா காஞ்சோண்டி செடியில் இவ்வளவு இருக்கிறதா என்று மூக்கில் விரல் வைக்குமளவுக்கு அதன் பிரபல்யம் ஐரோப்பாவில் இருக்கிறது. தேடத்தேட காஞ்சோண்டியின் பலன்கள் வந்த வண்ணமிருக்கின்றன. உங்களுக்கும் இந்த விடயங்கள் புதியனவாக இருக்கும்.

நிறைவாக காஞ்சோண்டி தூள் தேநீர் அருந்துங்கள். அது உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.

## இரண்டு தலை, எட்டு கால்களுடன் பிறந்த அதிசய கன்றுக்குட்டி!



இந்தியாவில் இரண்டு தலை, எட்டு கால்களுடன் அதிசய கன்றுக்குட்டியொன்று பிறந்துள்ளமை தற்போது சமூக ஊடகங்களில் வைரலாகி வருகிறது.

ஆந்திரப் பிரதேசம் குண்டூர் மாவட்டத்தின் எருகலப்புடியில் உள்ள ஆயுர்வேத மருத்துவமனை ஆசிரமத்தில் வளர்க்கப்படும் ஒரு பசுவுக்கு பிரசவ வலி ஏற்பட்டது. உடனடியாக நிர்வாகத்தினர் கால்நடை மருத்துவர்களுக்கு தகவல் தெரிவித்தனர்.

அங்கு வந்த மருத்துவர்கள், பிரசவத்தை முடிப்பதற்கு சுமார் ஐந்து மணிநேரம் கடுமையாக உழைத்தனர். இருப்பினும், கருப்பையிலிருந்து வெளிவந்த கன்றைக் கண்டு அவர்கள் ஆச்சரியப்பட்டனர். அந்தக் கன்று, இரண்டு தலை மற்றும் எட்டு கால்களுடன் ஒரு விசித்திரமான வடிவத்தில் பிறந்திருந்தது.

இதையறிந்த உள்ளூர் மக்கள் ஏராளமானோர் மருத்துவமனை ஆசிரமத்திற்கு சென்று, அந்த விசித்திரமான கன்றை ஆர்வத்துடன் பார்த்தனர். சுற்றுப்புற பகுதிகளில் இருந்தும் மக்கள் கன்றைப் பார்க்கச் சென்றதால், அங்கு சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

இதுகுறித்து கூறிய கால்நடை துறை மருத்துவர்கள், ‘இதுபோன்ற பிறப்பு மிகவும் அரிதானது. கரு வளர்ச்சியின்போது ஏற்படும் அரிதான குறைபாடுகளால், விலங்குகள் இதுபோன்ற உடல் மாற்றங்களுடன் பிறக்க வாய்ப்புள்ளது’ என்று தெரிவித்தனர்.

## “நாங்கதான் மாடு.. பக்கத்துல வந்து பாடு..!” - புதவிதமான காணொளிகள்




சமூக வலைத்தளங்களில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் புதுவிதமான காணொளிகள் தற்போது சமூகவலைத் தளங்களில் பரவி இணையவாசிகளை வெகுவாகக் கவர்ந்து வருகின்றன.

குறிப்பாக, செயற்கை நுண்ணறிவு உதவியுடன் ஆடு, மாடு, குரங்கு போன்ற விலங்குகள் மனிதர்களைப் போலப் பேசுவதும், பாட்டுப் பாடுவது போன்றும் உருவாக்கப்படும் அனிமேஷன் காணொளிகள் இன்ஸ்டாகிராம் ரீல்ஸ், ஃபேஸ்புக் மற்றும் யூடியூப் போன்ற சமூக வலைத்தளங்களை ஆக்கிரமித்துள்ளன.

“நாய்க்கு நாய்னு பேரு வச்சது யாருடா?”, “நாங்கதான் மாடு.. பக்கத்துல வந்து பாடு!” போன்ற வேடிக்கையான மற்றும் நகைச்சுவையான வரிகளைக் கொண்ட பாடல்களை இந்த AI விலங்கு கதாபாத்திரங்கள் பாடுவது போல உருவாக்கப்பட்டுள்ள காணொளிகள், சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் சிரிக்க வைத்து இணையத்தில் வைரலாகி வருகிறது.

சமீபகாலமாக AI தொழில் நுட்பத்தின் வளர்ச்சி அதிகரித்து வரும் சூழலில், சினிமா மற்றும் தொழில்முறைத் தேவைகளுக்கு மட்டுமின்றி, இதுபோன்ற பொழுதுபோக்கு மற்றும் மீம்ஸ் (Memes) கலாசாரத்திலும் AI-ன் பயன்பாடு முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்து வருவதை இந்த வைரல் காணொளிகள் வெளிப்படுத்துகின்றன.

## சத்த மாசுபாட்டைக் கட்டுப்படுத்த புதிய நடவடிக்கை!

இலங்கையில் சத்த மாசுபாட்டைக் (Noise Pollution) கட்டுப்படுத்துவதற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA) புதிய மற்றும் கடுமையான விதிமுறைகளை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்த முக்கிய தகவல்கள் வருமாறு:

புதிய விதிமுறைகளின் முக்கிய அம்சங்கள்
பிடியாணை இன்றி கைது செய்தல்: சட்டவிரோதமாக சப்த மாசுபாட்டை ஏற்படுத்துவோரை பிடியாணை இன்றி கைது செய்வதற்கான அதிகாரத்தை பொலிஸாருக்கு வழங்க முன்மொழியப்பட்டுள்ளது.

அதிர்வுகள் (Vibrations) கட்டுப்பாடு: இதற்கு முன் இருந்த சட்டங்களில் அதிர்வுகள் தொடர்பான தெளிவான விதிமுறைகள் இல்லாத நிலையில், புதிய சட்டத்தின் மூலம் கட்டடங்கள் மற்றும் தொழிற்சாலைகளினால் ஏற்படும் அதிர்வுகளையும் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
கடுமையான சட்ட நடவடிக்கைகள்: ஏற்கனவே உள்ள சட்டங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்து, சுற்றாடலுக்கும் பொதுமக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒலி மாசுபாட்டைக் குறைக்க சட்ட நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும்.

தற்போது நடைமுறையிலுள்ள ஒலி சட்டங்கள்
ஒலிபெருக்கி பயன்பாடு: உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, இரவு 10:00 மணி முதல் காலை 6:00 மணி வரை ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்துவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதில்லை.
எல்லைக் கட்டுப்பாடு: ஒலிபெருக்கிகள் மூலம் வெளிவரும் சப்தம், குறிப்பிட்ட வளாகத்திற்கு வெளியே செல்லக்கூடாது என்ற கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வாகன ஹாரன்கள் (Horns): வாகனங்களில் அனுமதிக்கப்பட்ட அளவை விட (2 மீட்டர் தூரத்தில் 105 டெசிபல்) அதிகமான சப்தத்தை எழுப்பும் ஹாரன்களைப் பயன்படுத்துவது சட்டவிரோதமானது.

பொதுமக்களுக்கான முக்கியத்துவம்
ஒலி மாசுபாடு என்பது வெறும் அசௌகரியம் மட்டுமன்றி, அது மன அழுத்தம், செவிப்புலன் பாதிப்பு மற்றும் பல்வேறு ஆரோக்கியப் பிரச்சினைகளை உருவாக்கும் ஒரு முக்கிய காரணியாகும்.
புதிய ஒழுங்குமுறைகள் மூலம் விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக விரைவாகவும் திறம்படவும் நடவடிக்கை எடுக்க மத்திய சுற்றாடல் அதிகாரசபை எதிர்பார்க்கிறது.

## நாசா விண்வெளியில் கீரைகள் வளர்த்து சாதனை



எதிர்காலத்தில், விண்வெளியில் விவசாயம் செய்வது குறித்த ஆராய்ச்சியில் நாசா விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். அதன் ஒரு பகுதியாக, சர்வதேச விண்வெளி நிலையத்தில் முட்டைக்கோஸ் மற்றும் வசாபி கடுகு கீரைகளை வெற்றிகரமாக விளைவித்துள்ளனர்.

இந்நிலையில், அந்த கீரைகளை இந்திய வம்சாவளி விண்வெளி வீரர் அனில் மேனன் சாப்பிடும் காணொளி தற்போது வெளியாகி, சமூக ஊடகங்களில் வைரலாகிறது.

# இராணுவ முகாமுக்கு அருகில் காணாமற் போன ரஜனிக்கு என்ன நடந்தது?

BEHIND ME MEDIA

1996 ஆம் ஆண்டு இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டவர்தான் இந்த ரஜனி.



ரஜனி வேலாயுதம்பிள்ளை வயது 22 என்ற இளம் யுவதி கோண்டாவில் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டார்.

இவர் யாழ்,கோண்டாவில் டிப்போவுக்கு அருகாமையில் அமைந்துள்ள இராணுவ முகாமினை அண்மித்த பகுதியில் வைத்து 30.09.1996ம் ஆண்டு காணாமல் போயிருந்தார்.

தனது தாயார் மற்றும் உறவினர்களுடன் இணைந்து கொள்வதற்காக வெளிநாட்டுக்குப் பயணமாக தயாராக இருந்தார்.

**காவல் நிலையத்தில் கடமையாற்றிய 1ம், 3ம், 4ம் எதிரிகள் காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள வீடு ஒன்றுக்குள் ரஜனியைத் தூக்கிக் கொண்டு செல்வதை அவதானித்தேன். கிட்டத் தட்ட ஒரு மணி நேரத்தின் பின்னர் 3ம், 4ம் எதிரிகள் என்னையும் வருமாறு அழைத்தனர், நான் மறுத்துவிட்டேன்**

வெளிநாடு செல்வதற்கான ஆயத்தங்களையும் செய்து முடித்தவர் மானிப்பாய் பகுதியிலுள்ள தனது உறவினர்களுக்கு பயணம் பற்றி கூறுவதற்காக பல்கலைக்கழக இராமநாதன் வீதியில் கலட்டிச் சந்தியிலுள்ள காவலரண் ஊடாகச் சென்ற ரஜனி பின்னர் வீடு திரும்பவில்லை.

உடனே வீடு திரும்புவதாக கூறிச் சென்றவர் அன்றைய தினம் வீடு திரும்பாததால் போக்குவரத்து சிக்கலால்தான் வராமல் உள்ளாரென நினைத்த அவரது உறவுகள் அன்று ரஜனியை தேடாமல் விட்டுள்ளனர்.

மறுநாளும் மதியம் வரை ரஜனி வீடு திரும்பாததால் சந்தேகமடைந்த அவளது அண்ணன் மானிப்பாய்க்கு சென்று உறவினர்களிடம் விசாரித்த போது ரஜனி நேற்றே திரும்பிச் சென்று விட்டதாக கூறியுள்ளார்கள்.

அதன் பின்னரே அண்ணன் உட்பட உறவினர்கள் ரஜனியை இராணுவ முகாம் முகாமாக தேடத்தொடங்கினர் பொலிசாரிடமும் முறையிட்டுள்ளனர். (தனது சகோதரனுடன் சேர்ந்து சென்ற வேளையே சகோதரன் திருப்பி அனுப்பப்பட்டு ரஜனி காவலரணில் நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இராணுவத்தினரின் இந்த சம்பவம் பற்றி பலரும் கதைக்க பயப்பட்டதனால் கிருசாந்தி கொலை வழக்குப்போல இதன் முழு விபரங்கள் இணையங்களில் பெரிதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது) சகோதரன் முறையிட்டதில் எந்தவித தகவலும் கிடைக்காமல் இருந்தது.ரஜனி காணாமல் போய் இரண்டு கிழமைகள் ஆகிய நிலையில் கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு பின்புறமாக உள்ள மக்கள் வசிக்காத வீடு ஒன்றிலிருந்து துர்நாற்றம் வீசவே அங்கு சென்று சிலர் பார்த்த போது பாதி திறந்து அரை குறையாக மூடப்பட்டிருந்த மலக்குழி ஒன்றினுள் பெண்ணின் சடலம் இருப்பதை அவதானித்து பொலிசாருக்கு தெரிவித் துள்ளார்கள்.

அதன் பின்னரே காணாமல்போன ரஜனியின் சடலம்தான் அது என அடையாளம் காணப்பட்டது. ரஜனி அணிந்திருந்த சங்கிலி, தோடு, உடைகள் மற்றும் சைக்கிள் என்பனவும் அடையாளம் காணப்பட்டது. இதன் பின்னர் பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளில் அப்பகுதியில் கடமையிலிருந்த ஆறு(06) படையினர் கைது செய்யப்பட்டனர்.

ரஜனியின் சடலம் மீட்கப்பட்டு உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் ரஜனியின் வாய்க்குள் இருந்து ரஜனி அணிந்திருந்த உள்ளாடைகள் தொண்டை வரை அடையப்பட்டவாறு காணப்பட்டதாக தெரிய வருகின்றது.

வீதியால் சென்ற ரஜனியை மறித்து காவலரணுக்குள் வைத்திருந்துவிட்டு பின்னர் ஆட்கள் அற்ற வீட்டுக்குள் தூக்கிச் சென்று ஆறு(06) இராணுவத்தினர் ரஜனியை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார்கள். ரஜனியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 5வது மற்றும் 6வது ராணுவச் சிப்பாய்கள் அரச சாட்சியாக மாறினார்கள்.

அந்த இரு சிப்பாய்களும் ரஜனியை துஷ்பிரயோகம் செய்ய முற்பட்ட போதே அவர் இறந்துவிட்டதாக கூறியுள்ளார்கள். அத்துடன் அவர்களது கூட்டாளிகளுடன் சேர்ந்து ரஜனியின் சடலத்தை தூக்கிச் சென்று மலசல கூட குழிக்குள் போட்டுள்ளார்கள்.

**யாழ்,கோண்டாவில் டிப்போவுக்கு அருகாமையில் அமைந்துள்ள இராணுவ முகாமினை அண்மித்த பகுதியில் வைத்து 30.09.1996 ம் திகதி காணாமல் போயிருந்தார்**

பல வருடங்களாக இழுபறியில் இருந்த வழக்கினை இலங்கை அரசாங்கமானது போர்க்குற்றங்களில் இருந்து தப்பித்துக்கொள்வதற்காக 2011 ஆம் ஆண்டு அவசர அவசரமாக தூசு தட்டி எடுத்து முடித்து வைத்தது.

இதில் மூன்று (03) இராணுவத்தினருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. இந்த வழக்கின் சாட்சியாளராக சீ.குணசிங்கம் அவர்கள் கோண்டாவில் பகுதியில் இருந்து வழக்குகளிற்காக கொழும்பு சென்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த வழக்கு கொழும்பு நீதிமன்றில் நடைபெற்ற போது அரச சட்டத்தரணியாக கடமையாற்றியவர் பிரசாந்தி என்ற பெயருடைய சிங்கள பெண் சட்டத்தரணி ஆவார். (குறித்த பெண் அரச சட்டத்தரணியே கிருசாந்தி கொலை வழக்கிலும் ஆஜராகியிருந்தார்)

பிரசாந்தியுடன் சேர்ந்து ரஜனியின் குடும்பத்தினரின் நலன்களைக் கவனிப்பதற்கு என என். ரவிராஜ் சட்டத்தரணியும் க.பூபாலசிங்கம் சட்டத்தரணியும் செயற்பட்டார்கள்.

**ரஜனியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த 5வது மற்றும் 6வது ராணுவச் சிப்பாய்கள் அரச சாட்சியாக மாறினார்கள்**

அப்போது கடமையிலிருந்து பிரதம நீதவான் முனிதாச முன்னிலையில் படையினர்கள் தரப்பு சட்டத்தரணியாக சஞ்யேத்கம என்பவர் ஆஜராகி வாதிட்டார்கள். குறித்த வழக்கின் முக்கிய சாட்சியாக அப்பகுதியில் கடமையாற்றிய பொலிஸ் உபாலி அவர்கள் பின்வருமாறு சாட்சி கூறியுள்ளார்.

“நான் காவல் கடமையிலிருந்த காவலரண் கோண்டாவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் பலாலி வீதியில் அமைந்திருந்தது. குறித்த காவல் நிலையத்திற்கு அருகில் கடைகளும் இருந்தன. குறித்த காவல் நிலையத்தில் கடமையாற்றிய 1ம், 3ம், 4ம் எதிரிகள் காவல் நிலையத்திற்கு அருகில் உள்ள வீடு ஒன்றுக்குள் ரஜனியை குண்டுக் கட்டாகத் தூக்கிக் கொண்டு செல்வதை அவதானித்தேன். கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்தின் பின்னர் 3ம், 4ம் எதிரிகள் என்னையும் வருமாறு அழைத்தனர். நான் மறுத்துவிட்டேன்.

அதன் பின்னர் அவர்கள் மேலும் ஒரு மணி நேரம் ரஜனியுடன் காணப்பட்டார்கள். பின்னர் அவர்கள் வெளியே வரும் போது அதிர்ச்சியான நிலையில் இருந்தார்கள். நான் என்ன நடந்தது என கேட்ட போது அவள் இறந்து விட்டாள் என தெரிவித்தார்கள்.

அத்துடன் என்னையும் இது தொடர்பாக யாரிடமும் கூற வேண்டாம் என அச்சுறுத்தினார்கள். அதனால் நான் பயத்தில் யாரிடமும் கூறவில்லை” என இவ்வாறு சாட்சியமளித்துள்ளார் சம்பந்தப்பட்ட பொலிசார்.

முடிவு

1996-இல் படுகொலை செய்யப்பட்ட ரஜனிக்கு நீதி கிடைக்குமென 15 வருடங்களுக்கு மேலாக போராடிய குடும்பம்…

2011-இல் கடுமையான சாட்சிகளுடன் மூன்று இராணுவத்தினருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.
ஆனால்…

2023-இல், அந்த இருவருக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது

மற்றவர்கள் மேல் முறையீடு செய்துள்ளார்கள். அவர்களும் விரைவில் வெளிவரலாம்.

# வலி வடக்கு காணி விடுவிப்பு இம்மாத இறுதியில் சாத்தியம்!

யாழ். வலி வடக்கு பகுதியில் விடுவிக்கப்படாத மக்களுடைய காணிகள் ஒரு தொகுதியினை இம்மாத இறுதியில் விடுவிப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இடம்பெற்று வருவதாக கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும், யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அண்மையில் காணி விடுவிப்பு தொடர்பாக ஜனாதிபதி பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்த நிலையில் எப்போது காணி விடுவிப்பு சாத்தியம் என அவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்ததாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

**நாட்டை அழிவு பாதையில் கொண்டு சென்ற ஒரு கூட்டத்தை நாட்டு மக்கள் விரட்டியடித்துள்ள நிலையில் மீண்டும் அந்தக் கூட்டம் நாட்டை குழப்புவதற்கு எத்தனித்துக் கொண்டிருக்கிறது**

நாட்டு மக்கள் தெளிவாக இருக்க வேண்டும் ஆட்சி அதிகாரத்தை இழந்த கும்பல் நாட்டை மீண்டும் அதல பாதாளத்துக்கு கொண்டு செல்வதற்காக மக்களை இனவாத ரீதியாக தூண்டிவிடும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள்.

இந்த செயற்பாடுகளில் தமிழ் அரசியல்வாதிகளும் விதிவிலக்கு அல்ல மக்களின் காணி விடுவிப்பு தொடர்பில் ஜனாதிபதி உத்தரவு வழங்கிய பின்னரும் தமது அரசியல் சுயலாபங்களுக்காக மக்களை அழைத்து போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்கு பற்றிய நல்லாட்சி அரசாங்கத்தில் காணி விடுவிப்பு தொடர்பில் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கு எதிராக போராட்டம் நடத்த முடியாது என கூறினார்கள்.

அவ்வாறு போராட்டம் நடாத்தினால் நல்லாட்சி அரசாங்கம் குழப்பி விடும் என கூறிய தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என தங்களைத் தாங்கள் கூறுபவர்கள் தற்போது காணி விடுவிப்பு தொடர்பில் கொழும்பு ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் தொடர் போராட்டம் நடாத்தப் போகிறோம் என கூறுகிறார்கள்.

இது அவர்களின் வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடாகவே பார்க்க முடியும் மக்கள் மீது கரிசனை கொண்டவர்கள் அல்ல.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

காணி விடுவிப்பு தொடர்பில் எமது அரசாங்கம் ஏற்கனவே கூறிய வாக்குறுதியான மக்களின் காணி மக்களுக்கே என்ற நிலைப்பாட்டில் தொடர்ந்து பயணித்து வருகிறது.

அண்மையில் ஜனாதிபதி அநுர தலைமையில இடம் பெற்ற பாதுகாப்பு உயர் கூட்டத்தில் வலி வடக்கு பகுதியிலுள்ள விடுதிக்கப்படாத காணிகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பாதுகாப்பு உயர் அதிகாரிகளுக்கு உத்தரவு வழங்கியிருந்தார்.

அதன் அடிப்படையில் பாதுகாப்பு தரப்பினரிடம் உள்ள பொது மக்களின் காணிகளை படிப்படியாக விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இம்மாதம் செப்டம்பர் இறுதி பகுதியில் வலி வடக்கு பகுதியில் உள்ள ஒரு தொகுதி காணிகளை மக்களிடம் கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகிறது.

எமது அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின் நாட்டில் ஊழல் கலாச்சாரம் போதை ஒழிப்பு போன்ற விடயங்கள் கடந்த காலங்களை விட கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோம்.



நாட்டை அழிவு பாதையில் கொண்டு சென்ற ஒரு கூட்டத்தை நாட்டு மக்கள் விரட்டியடித்துள்ள நிலையில் மீண்டும் அந்தக் கூட்டம் நாட்டை குழப்புவதற்கு எத்தனித்துக் கொண்டிருக்கிறது.

நாட்டை குழப்பம் நடவடிக்கையில் மக்களால் துரத்தப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்களிடம் ஆசி பெற்ற போதைப் பொருள் பின்னணியில் செயற்பட்டுபவர்களும் குழப்பம் விளைவிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நாங்கள் அவற்றை கண்டு அஞ்சப் போவதில்லை மக்கள் அளித்த ஆணையை பொறுப்பேற்ற எமது தோழர் அநுர மக்களின் தோழராக எந்த சவாலையும் வெற்றி கொள்ளும் தலைவனாக செயற்பட்டு வருகிறார்.

நாங்கள் அவற்றை கண்டு அஞ்சப் போவதில்லை மக்கள் அளித்த ஆணையை பொறுப்பேற்ற எமது தோழர் அநுர மக்களின் தோழராக எந்த சவாலையும் வெற்றி கொள்ளும் தலைவனாக செயற்பட்டு வருகிறார்.

மக்களால் கொண்டுவரப்பட்ட இந்த ஆட்சியை மக்கள் தான் பாதுகாக்க வேண்டும் நாட்டு மக்களுக்கு எதிரான சூழ்ச்சிகளை மக்களால் ஒன்றிணைந்து முறியடிக்க வேண்டும் இல்லையேல் மீண்டும் நாடு இருண்ட யுகத்தை நோக்கி தள்ளப்படும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

ஆகவே காணி விடுவிப்பு மற்றும் ஏனைய மக்கள் நலன் சார்ந்த திட்டங்களில் நாம் அக்கறையுடன் செயல்பட்டு வரும் நிலையில் சில தாமதங்கள் ஏற்பட்டாலும் அதனை உரிய முறையில் நிறைவேற்றுவோம் என தெரிவித்தார்

## “எங்கடை பொடியள்” நிகழ்வில் இனி நான் இல்லை – திஷோன் விஜயமோகன்

ஈழத்து இசைத்துறை மற்றும் தமிழ் ராப் (Tamil Rap) உலகில் மிகவும் பிரபலமான ஒரு இசை அமைப்பாளரும் புகழ்பெற்ற கலைஞருமாகத் திகழும் திஷோன் விஜயமோகன் ஊடகங்களுக்கு முக்கியமான தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதாவது இனிமேல் “எங்கடை பொடியள்” - நிகழ்வுகளில் தான் இனிமேல் கலந்துகொள்ளப் போவதில்லை என அறிவித்திருக்கின்றார். அத்துடன் தனது இசைப்பயணத்திற்கு ஆதரவாக இருந்த சகலருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்




கொண்டு இசைத் தயாரிப்புத் துறையின் வாயிலாக இசைப் பயணத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவுள்ளதாகவும் வளர்ந்து வரும் புதிய கலைஞர்களுக்கு வாய்ப்புக்களை வழங்கவும் தயாராக உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தனது “எங்கடை பொடியள்” இசைப் பயணத்தின் முடிவு புதிய அத்தியாயமொன்றின் தொடக்கமாக இருக்கும் எனவும் சகல வழிகளிலும் தனக்கு ஆதரவுகளை வழங்கியவர்களுக்கு மீண்டும் நன்றியுடன் நினைவு கொள்வதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்திருக் கின்றார்.


அதிகாரப்பூர்வ
அறிவிப்பு

வி. திஷோன்
திஷோன் விஜயமோகன்
FOUNDER OF RAP CEYLON & MAX STUDIOS




# தற்கொலைகளைத் தடுப்புக் குறித்த விழிப்புணர்வு சைக்கிளோட்டம் திருகோணமலையை வந்தடைந்தது

தற்கொலைகளைத் தடுப்பது தொடர்பாகப் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர் சைக்கிளோட்டப் பயணம் புதன்கிழமை திருகோணமலையை வந்தடைந்தது.

தற்கொலை முயற்சிகளைத் தடுப்பதுடன், மக்களின் உளவள நலனை மேம்படுத்துதல், தற்கொலை எண்ணங்களால் பாதிக்கப்படுவோருக்கு உளவள ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் அவர்களுக்குத் தேவையான ஆதரவை வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன் இவ்விழிப்புணர்வு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

“தைரியம், இரக்கம், பொறுப்பேற்றல்” என்ற தொனிப்பொருளின் கீழ், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினால் ரோட்டரி கழகத்தின் அனுசரணையுடன் இத்தொடர் சைக்கிளோட்டப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையில் தற்கொலை காரணமாக நாளொன்றுக்குச் சராசரியாக 11 பேர் உயிரிழப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில், தற்கொலைத் தடுப்பு மற்றும் உளவள நலன் தொடர்பான விழிப்புணர்வைப் பொதுமக்களிடம் ஏற்படுத்துவது இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாகும்.

இத்தொடர் சைக்கிளோட்டம் இலங்கையின் 12 மாவட்டங்களை உள்ளடக்கியதாக முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், தற்கொலை எண்ணங்களால் பாதிக்கப்படுவோருக்கு இலவச உளவள ஆலோசனை மற்றும் ஆதரவைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஊஊஊ 1333 என்ற தொலைபேசி சேவை தொடர்பிலும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.











திருகோணமலைக்குச் சைக்கிளோட்ட வீரர்கள் வருகை தந்ததையடுத்து, அவர்களைத் திருகோணமலை ரோட்டரி கழகத்தின் உறுப்பினர்கள் வரவேற்றனர்.

இதனைத் தொடர்ந்து, திருகோணமலை நகரின் பிரதான கடற்கரையில் மாலை 6:00 மணியளவில், தற்கொலையின் தாக்கம் மற்றும் அதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் தொடர்பாகப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வொன்றும் நடைபெற்றது.

இதன்போது, தற்கொலை எண்ணங்களைத் தவிர்ப்பதற்கான ஆலோசனைகள் மற்றும் ஊஊஊ 1333 இலவச ஆலோசனைத் தொலைபேசி இலக்கம் அடங்கிய விழிப்புணர்வு கையேடுகள் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

# இலங்கையின் மலையக மக்களுக்கு 200 ஆண்டுகளுக்குப் பிறகு நிரந்தர முகவரி!

மலையக மக்கள் நாட்டிற்கு வருகை தந்து 200 ஆண்டுகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், அவர்களுக்கு உறுதிப்பத்திரத்துடன் கூடிய சொந்த வீடொன்றையும் நிரந்தர முகவரியையும் வழங்குவதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.



2017 ஆம் ஆண்டு ஏற்பட்ட இயற்கை அசாதாரண சூழ்நிலையினால் வீடுகளை இழந்த மக்களுக்காக பாலிந்தநுவர, பெலேத மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் முஹமதியாவத்தை புதிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 17 வீடுகளை அமைக்கும் பணிகள் அண்மையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெருந்தோட்ட மற்றும் சமுதாய உள்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப்பும் கலந்துகொண்டார்.

2025 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முஹமதியாவத்தை புதிய வீடமைப்புத் திட்டத்தின் கீழ், உள்கட்டமைப்பு வசதிகளுடன் ஒரு வீடு 34 இலட்சம் ரூபா செலவில் 17 வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

அவற்றில் 12 வீடுகள் பெருந்தோட்ட மற்றும் சமுதாய உள்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் கீழும், எஞ்சிய 5 வீடுகள் இந்திய வீட்டுவசதி உதவித் திட்டத்தின் கீழ் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலையீட்டுடனும் அமைக்கப்படவுள்ளன.

9 ஆண்டுகளாக கடும் ஆபத்தான சூழ்நிலைகளை எதிர்கொண்டு வீடற்ற நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்குவதற்காக இரு அமைச்சுகளின் கூட்டுப் பங்களிப்புடன் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.



இதேவேளை, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினால் நடைமுறைப்படுத்தப்படும் □சொந்தமாக இருக்க இடம் - ஒரு அழகான வாழ்க்கை□ வீடமைப்பு உதவித் திட்டத்தின் 2026 ஆம் ஆண்டிற்கான இரண்டாம் கட்டத்தின் கீழ் பாலிந்தநுவர பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 16 பயனாளிகளுக்கு தலா ஒரு மில்லியன் ரூபா வீதமான வீடமைப்பு உதவி காசோலைகளும் இன்று வழங்கி வைக்கப்பட்டன.

இதன் முதற்கட்டத்தின் கீழ் 08 பயனாளிகளுக்கு வீடமைப்பு உதவிகள் வழங்கப்பட்டு வீடமைப்புப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன், மூன்றாம் கட்டத்திற்காக 55 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மலையக மக்கள் இந்நாட்டிற்கு வருகை தந்து 200 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், அவர்களுக்கு உறுதிப்பத்திரத்துடன் கூடிய சொந்த வீடொன்று, முகவரி மற்றும் அடையாளத்தை வழங்க முடிந்தது தற்போதைய அரசாங்கத்தின் கீழேயே என அமைச்சர் நலிந்த ஜயதிஸ்ஸ இங்கு தெரிவித்தார்.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஒதுக்கப்படும் நிதி, இலக்கு நிர்ணயிக்கப்பட்ட திட்டமிடலின் கீழ் அதற்கான பணிகளுக்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும், எதிர்வரும் ஆண்டிற்கான அபிவிருத்தி திட்டங்களுக்காக அரசாங்கம் வரலாற்றிலேயே அதிகபட்ச தொகையாக 2,000 பில்லியன் ரூபாயை ஒதுக்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நீண்டகாலமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிரந்தர மற்றும் பாதுகாப்பான வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதே அரசாங்கத்தின் முதன்மை நோக்கமாகும் என்றும், குறித்த வீடுகளை விரைவாக மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# வல்வெட்டித்துறை நகரசபை தூய்மைப் பணியாளர்களுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வெகுமதி!

வல்வெட்டித்துறை நகரசபையில் பணியாற்றும் 33 தூய்மைப் பணியாளர்களிற்கு, ஆடைகளும், அரிசிப் பொதிகளும் ஒரு தொகை நிதியும் வழங்கப்பட்டன.



ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் அவர்கள், 03/09/2026 ந்திகதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆச்சிரமத்தில் வைத்து வழங்கினார்.

இம்முறை சந்நிதி திருவிழா காலங்களில் சமூகப் பொறுப்பற்ற பக்தர்கள் ஆலய சுற்றுப் புறங்களில் வகைதொகையின்றி வீசிச் சென்ற குப்பை, கழிவுகளை வல்வெட்டித்துறை நகரசபையின் தூய்மைப் பணியாளர்கள் இரவு பகல் பாராது அர்ப்பணிப்புடன் செயற்பட்டு உடனுக்குடன் அகற்றி ஆலய சூழலை தூய்மையாக வைத்திருக்க உதவியிருந்தார்கள். அவர்களுக்கு பாராட்டுகளும் வாழ்த்துக்களும் எனவும் அந்த நிகழ்வில் தெரிவிக்கப்பட்டது.





# பாரிய மனித உரிமை-மீறல்கள் : சட்ட நடவடிக்கை எடுப்பதில் இலங்கை தவறிவிட்டது!

இலங்கையின் தற்போதைய அரசாங்கம் கடந்த காலத்தில் இடம்பெற்ற கடுமையான மனித உரிமை மீறல்கள் மற்றும் ஆட்கடத்தல்கள் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மிகக் குறைந்த முன்னேற்றத்தையே அடைந்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பில் அண்மையில் அறிக்கை யொன்றை வெளியிட்டே அந்த அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

பக்கச்சார்பற்ற மற்றும் வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்படுதல், படுகொலைகள் மற்றும் ஏனைய கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பயனுள்ள முறையில் குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்வதை உறுதி செய்ய நாட்டின் அரசாங்கங்கள் தவறியுள்ளன என்பதை குறித்த அறிக்கை மேலும் வலியுறுத்துகிறது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து 580 க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப் பட்டமையானது, கடந்த காலத்தில் இடம்பெற்ற கடுமையான மனித உரிமை மீறல்கள் குறித்து நம்பகமான சுயாதீன விசாரணையின் அவசியத்தை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்துகிறது.

இவ்வறிக்கையில் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளபடி, செம்மணி மனிதப் புதைகுழியானது நாட்டில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனிதப் புதைகுழியாகும் என்பதுடன், பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மனிதப் புதைகுழி தொடர்பான உள்நாட்டு விசாரணையின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் வெளியிடுகின்றனர்.

மேலும், 2006 ஆம் ஆண்டு மூதூரில் “எக்ஷன் அகெய்ன்ஸ்ட் ஹங்கர்“ (Action Against Hunger) தொண்டு நிறுவனத்தின் 17 தன்னார்வ ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டு இருபது ஆண்டுகள் கடந்துள்ள போதிலும், அச்சம்பவத்துடன் தொடர்புடைய நபர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.





இதேவேளை, உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல், 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம், ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை, ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை மற்றும் கீத் நொயார் கடத்தப்பட்டமை உள்ளிட்ட சில முக்கிய சம்பவங்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் சிறிய முன்னேற்றத்தைக் காட்டியுள்ளது.

இருப்பினும், பல சம்பவங்கள் தொடர்பில் இறுதியான சட்டப்பூர்வ முடிவுகள் கிடைக்கப்பெறவில்லை என்று மனித உரிமைகள் கண்காணிப்பக அமைப்பு சுட்டிக்காட்டுகிறது.

பெரும்பாலான சம்பவங்கள் தொடர்பில் இன்னமும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படவில்லை என்றும், அச்சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

கடந்த காலத்தில் நியமிக்கப்பட்ட பல ஆணைக் குழுக்களால் வழங்கப்பட்ட பரிந்துரைகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை வழங்கும் வழக்குகளாக மாறவில்லை என்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பாதிக்கப்பட்ட 32 பேர், காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள், சட்டத்தரணிகள் மற்றும் ஏனைய மனித உரிமைச் செயற்பாட்டாளர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்கள், நீதிமன்ற ஆவணங்கள் மற்றும் ஏனைய மூலங்களை விரிவாக மதிப்பாய்வு செய்து இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

1987-1989 காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற மக்கள் விடுதலை முன்னணி (JVP) கிளர்ச்சி மற்றும் 2009 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்த உள்நாட்டுப் போரின் போது அரசாங்க பாதுகாப்புப் படைகள் மற்றும் அரச சார்பற்ற ஆயுதக் குழுக்களால் பல்லாயிரக்கணக்கான மக்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு, வலுக்கட்டாயமாக காணாமல் ஆக்கப்பட்டு, கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

1990 களில் இருந்து மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதற்கு அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் 10 க்கும் மேற்பட்ட ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்ட போதிலும், நாட்டின் கடந்த கால குற்றங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவது தோல்வியடைந்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டுகிறது.

## டிஜிட்டல் காப்புறுதி அட்டைகளை நிராகரித்தால் கடும் நடவடிக்கை

டிஜிட்டல் காப்புறுதி அட்டைகளை (Digital Insurance Cards) பரிசோதிப்பது தொடர்பாக பொலிஸ் மா அதிபரினால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டல்களை மீறி, சாரதிகளை அசௌகரியத்திற்கு உள்ளாக்குவது கடுமையான கடமை மீறலாகும் என போக்குவரத்து கட்டுப்பாடு மற்றும் வீதி பாதுகாப்பு திணைக்களத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே.சேனாதீர தெரிவித்துள்ளார்.

செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர், பாதுக்கை மற்றும் கம்பஹா ஆகிய பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த சில அதிகாரிகள் டிஜிட்டல் காப்பீட்டு அட்டைகளை ஏற்றுக்கொள்ள மறுத்து பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தியதாக தகவல்கள் பதிவாகியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இதன்படி, சு.வு.ஆ. 93 சட்டத்தின் மூலம் 2026.05.05 ஆம் திகதியிட்ட மேலதிக செய்தி மூலம் காப்புறுதி ஒழுங்குமுறை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள, நாட்டின் முன்னணி 14 காப்புறுதி நிறுவனங்களால் வழங்கப்படும் டிஜிட்டல் காப்பீட்டு அட்டைகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளுமாறு பொலிஸ் மா அதிபரினால் நாட்டின் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப் பட்டுள்ளதாகக் கூறினார்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மின்னணு பரிவர்த்தனை சட்டத்தின் கீழ் டிஜிட்டல் காப்புறுதி அட்டைகளுக்கு முழுமையான சட்ட அங்கீகாரம் கிடைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒரு சாரதியிடம் டிஜிட்டல் காப்புறுதி அட்டை இல்லாத சந்தர்ப்பத்தில் கூட, பின்வரும் இலவச சேவைகள் மூலம் காப்புறுதி பாதுகாப்பு செல்லுபடியாகும் நிலையில் உள்ளதா என்பதை பொலிஸ் அதிகாரிகள் உறுதிசெய்து கொள்ள முடியும்:

*1338# ஐ அழைப்பதன் மூலம் காப்பீட்டு இலக்கம் அல்லது வாகன இலக்கத்தை உள்ளீடு செய்து உடனடியாக தகவல்களைப் பெறுதல்.

1338 என்ற இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) அனுப்புதல்.

1338 உடனடி அழைப்பு மையத்தை (Call Center) தொடர்புகொள்ளுதல்.

இதன் காரணமாக, நாடு முழுவதிலும் உள்ள 607 பொலிஸ் நிலையங்களின் பொறுதிகாரிகளின் ஊடாக கீழ்நிலை அதிகாரிகளுக்கு மீண்டும் விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாதேனுமொரு பொலிஸ் அதிகாரி டிஜிட்டல் காப்புறுதி அட்டையை ஏற்றுக்கொள்ள மறுத்தால், அது குறித்து அருகிலுள்ள பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் அல்லது போக்குவரத்து தலைமையகத்தின் 070 47 55 600 என்ற விசேட தொலைபேசி இலக்கத்திற்கு முறைப்பாடு செய்யுமாறு பொதுமக்களிடம் கோரப்பட்டுள்ளது.

அவ்வாறான அதிகாரிகளுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி.ஜே. சேனாதீர மேலும் தெரிவித்தார்.

# லண்டன் வர்த்தகரால் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு ரூ 5 மில்லியன் நன்கொடை

BEHIND ME MEDIA












கிளிநொச்சி வைத்தியசாலையில் இயங்கும் செயற்கைக் கருக்கட்டல் சிகிச்சை நிலையத்தினை விரிவாக்கும் ‘கிளி மக்கள்’ அமைப்பின் திட்டத்திற்கு, இலண்டன் வர்த்தகர் தங்கராஜா கலாமோகன் அவர்கள் ரூபாய் 5 மில்லியன் நன்கொடை வழங்கும் நிகழ்வு, கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் கடந்த 3 ஆம் திகதி நடைபெற்றது.

வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் எம். தயாளினி தலைமையில் இத்திட்டத்திற்குப் பொறுப்பாகவுள்ள வைத்திய நிபுணர் பேராசிரியர் சிவலிங்கராஜா ரகுராமன் அவர்களின் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது.

இலண்டனிலிருந்து கலந்துகொண்ட தங்கராஜா கலாமோகன், ‘கிளி மக்கள்’ அமைப்பின் நிறுவனர்களில் ஒருவரான கிருஷ்ணபிள்ளை விஜயராஜா, இலண்டன் மருத்துவ பீட மாணவி அபினயா விஜயராஜா, ‘கிளி மக்கள்’ அமைப்பின் இலங்கைக்கான இணைப்பாளர் கிருஷ்ணபிள்ளை விக்கினராஜா ஆகியோர் கலந்துகொண்டு, காசோலையினை வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் பேராசிரியர் குமரன், கிளிநொச்சி வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத் தலைவர் கே. விஜயசேகரன், வைத்தியசாலை அதிகாரிகள், பணியாளர்கள் மற்றும் ‘கிளி மக்கள்’ அமைப்பின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.









# விமர்சனங்களை நிறுத்தி விட்டு தீவிரமான வர்த்தக பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுங்கள் - டிரம்ப்பிற்கு கார்னியின் செய்தி

BEHIND ME MEDIA

ஒட்டாவா (OTTAWA) - இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் முறிந்து, கசப்புணர்வு அதிகரித்துள்ள நிலையில், இணைய வழித் தாக்குதல்களை நிறுத்திவிட்டு வர்த்தக விவாதங்களை மேலும் தீவிரமாக எடுத்துக்கொள்ளுமாறு அமெரிக்க அதிகாரிகளுக்குப் பிரதமர் மார்க் கார்னி (Mark Carney) அழைப்பு விடுத்துள்ளார்.

திங்கள்கிழமை இரவு மூன்று இடைத்தேர்தல்களில் பெற்ற வெற்றிகளைத் தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை ஒட்டாவாவில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோது கார்னி இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

“அமெரிக்கர்கள் மீம்களைப் பரப்புவதையும், பழிவாங்குவதையும், கெத்து காட்ட முயல்வதையும் நிறுத்திவிட்டு, அந்த விவாதங்களை நடத்துவதில் தீவிரமாகச் செயல்படத் தொடங்கும்போது, நம்மால் அந்த விவாதங்களை நடத்த முடியும்,” என்று கார்னி கூறினார். ”ஆனால் தற்போதைய செயல்பாடு ஆரோக்கியமானதாக இல்லை.”

வாரக்கணக்கான தீவிரப் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு, கடந்த மாத இறுதியில் கனடாவும் அமெரிக்காவும் கடைசி நிமிட வர்த்தக ஒப்பந்தத்தை எட்டுவதில் தோற்றன. இதன் காரணமாகப் பல பில்லியன் டாலர் மதிப்புள்ள கனடியப் பொருட்கள் மீது டிரம்பின் புதிய 50 சதவீத வரிகள் அமலுக்கு வந்தன. இதில் கனடா-அமெரிக்கா-மெக்சிகோ ஒப்பந்தத்தின் (CUSMA) கீழ் வரும் பொருட்களும் அடங்கும்.

இதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, செப்டம்பர் 8 முதல் சுமார் 28 பில்லியன் டாலர் மதிப்புள்ள அமெரிக்கப் பொருட்கள் மீது கனடா பதிலடி வரிகளை விதிக்கும் என கார்னி அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிகாரிகளின் பேச்சுகள் சமூக ஊடகப் பதிவுகளில் அவதூறுகளாகவே மாறியுள்ளன. டிரம்ப் கனடாவை “மிக மோசமாக முறைகேடு செய்பவர்களில் ஒன்று” என்று அழைத்ததுடன், லெக் ஒன்ராறியோவை (Lake Ontario) மறுபெயரிடுவதற்கான நிறைவேற்று உத்தரவிலும் கையெழுத்திட்டார்.

பேச்சுவார்த்தைகள் முறிந்ததிலிருந்து டிரம்பும் அவரது நிர்வாகமும் இணையத்தில் தொடர்ச்சியான மீம்களைப் பதிவிட்டு வருகின்றனர் - அவற்றில் பல யுஐ-ஆல் உருவாக்கப்பட்டவை. உதாரணமாக, லெக் ஒன்ராறியோ ”லெக் அமெரிக்கா” என மறுபெயரிடப்பட்ட அமெரிக்காவின் LEGO-பாணி வரைபடம், மற்றும் ஒரு கழுகு கனடிய வாத்தை தரைமட்டமாக்கும் படம் போன்றவை அடங்கும்.

அமெரிக்க பாதுகாப்புச் செயலர் (Secretary of War) பீட் ஹெக்சேத் (Pete Hegseth), திங்களன்று கனடிய கேடட்களின் படத்தைச் சமூக ஊடகங்களில் பதிவிட்டு, அவர்களை உருவக் கேலி செய்வது போல் “இது உண்மை” என்ற தலைப்புடன் பதிவிட்டிருந்தார்.

“இந்த விவாதங்களிலும், அதைத் தொடர்ந்தும் அமெரிக்காவின் அணுகுமுறையானது, நான்கு கனடிய தொழில்துறைகள் அமெரிக்க தொழில்துறைகளின் துணை நிறுவனங்களாக மாற வேண்டும், அல்லது கனடாவில் அந்த தொழில்துறைகள் படிப்படியாக மூடப்படும் நிலையை உருவாக்க வேண்டும் என்பதாகவே இருந்தது,” என்று வர்த்தகப் பேச்சுவார்த்தைகளின் நிலை குறித்து கார்னி கூறினார்.

“நிச்சயமாக நாங்கள் அந்த நிபந்தனைகளை ஏற்கப் போவதில்லை,” என்று அவர் மேலும் கூறினார். ”மேலும், அது தவறான வழிகாட்டலாகும்.”

இரு தரப்பும் “நோக்கி நகரும்” ஒரு ”பரஸ்பர நன்மையளிக்கும் ஒப்பந்தத்தின் கூறுகளும்” இன்னும் எஞ்சியுள்ளன என்றும் கார்னி கூறினார்.

இதற்கிடையில், திங்கள்கிழமை இரவு CTV News-ன் சிறப்பு இடைத்தேர்தல் ஒளிபரப்பின் போது, அரசியல் ஆய்வாளர்கள் அனைவரும் கடந்த சில வாரங்களில் கனடா - அமெரிக்க வர்த்தகக் கோப்பில் நடந்த நிகழ்வுகள் - குறிப்பாக டிரம்பின் நடவடிக்கைகள் மற்றும் கருத்துக்கள் - வாக்களிப்பை எந்த அளவிற்குத் தீர்மானித்தன என்பதை வலியுறுத்தினர்.

“கியூபெக் உட்பட இந்த நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும், கடலோரம் முதல் கடலோரம் வரையிலான அரசியலில் டிரம்ப் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறார் என்று நான் நினைக்கிறேன்,” என்று முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்பரின் முன்னாள் தகவல் தொடர்பு இயக்குநரான கோரி டெனெய்கே (Kory Teneycke) கூறினார்.

டிரம்பைக் கையாள்வதற்குத் தான் சிறந்த நபர் என்ற வாக்குறுதியின் பேரில் கடந்த ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற கார்னி, திங்கள்கிழமை இரவு நடந்த மூன்று இடைத்தேர்தல்களிலும் அனைத்துத் தொகுதிகளையும் கைப்பற்றினார்.

“இந்த ஒவ்வொரு தொகுதியிலும் 50 சதவீதத்திற்கும் அதிகமானோர் அரசாங்கத்தின் திட்டத்திற்குத் தங்கள் ஆதரவை வழங்கியுள்ளனர். கனடியர்கள் ஒற்றுமையாக இருக்கிறார்கள் மற்றும் கனடியர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதால் தான் இது சாத்தியமானது என்று நான் நினைக்கிறேன்,” என்று திங்கள்கிழமை இரவு இடைத்தேர்தல் முடிவுகளைக் குறிப்பிட்டு கார்னி கூறினார்.

கனடியப் பொருட்களை வாங்குவதற்கான அழுத்தத்தைக் சுட்டிக்காட்டிய அவர், “ஆரம்பத்திலிருந்தே இந்த அரசாங்கத்தின் திட்டம் இதுதான். நாங்கள் அதை நடைமுறைப்படுத்தி வருகிறோம் அது பலனளிக்கிறது. இன்னும் ஆரம்ப நாட்கள் தான், ஆனால் அது செயல்படுகிறது,” என்றும் கூறினார்.

# டொராண்டோ மேயர் தேர்தல்: மக்கள்- வேட்பாளர் கவனம் எதில் ?




கோடைகாலத்தின் இறுதி நாட்களைக் கொண்டாட மக்கள் முயன்று கொண்டிருந்தாலும், செப்டம்பர் மாதம் பிறந்துவிட்டதால் டொராண்டோவின் நகராட்சி தேர்தல் களத்திற்கு வந்துவிட்டது.

சூடுபிடித்து வரும் இந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் நீங்கள் தவறவிட்ட சில முக்கிய நிகழ்வுகளும், நாங்கள் சிந்திக்கும் சில கேள்விகளும் இங்கே தரப்பட்டுள்ளன:

இந்த மேயர் தேர்தல் எதைப் பற்றியது?

வேட்பாளர் பிராட் பிராட்போர்ட் (Brad Bradford) தனது முன்னுரிமைகளை பின்வருமாறு பட்டியலிடுகிறார்: குற்றம், போக்குவரத்து நெரிசல், வாழ்க்கைச் செலவு, பொது ,டங்களின் தூய்மை மற்றும் நகரத்தின் வணிகச் சூழலின் போட்டித்தன்மை.

இது ஒரு நல்ல தொடக்கப் பட்டியல். பீச்சஸ்-ஈஸ்ட் யார்க் (Beaches-East York) கவுன்சிலரான பிராட்போர்ட் மற்றும் பிற வேட்பாளர்கள், இதுபோன்ற முக்கிய தலைப்புகளைச் சுற்றியே இந்தத் தேர்தலை அமைத்துக்கொண்டு செல்ல முயற்சிப்பார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்கலாம்.

ஆனால், இப்போதுக்கும் தேர்தல் நாளான அக்டோபர் 26-க்கும் இடைப்பட்ட காலத்தில் என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்? உதாரணத்திற்கு: மிதிவண்டிப் பாதைகளை (bike lanes) அகற்றுவதில் ∴போர்ட் (Ford) அரசாங்கம் தீவிரமாக செயல்பட்டு வருகிறது என்ற செய்தி இந்தத் தேர்தல் சூழலை நிச்சயமாக மாற்றும்.

“நகராட்சித் தேர்தல் என்பது உடனடித் தன்மையைக் கொண்ட ஒரு அரசியல் வடிவமாகும்” என்று “சிட்டி ஹால் வாச்சர்“ (City Hall Watcher) ஊடகத்தின் மேட் எலியட் குறிப்பிடுகிறார். உங்கள் வீட்டுக் கதவைத் திறந்த வுடனேயே - நடைபாதையின் நிலைமை முதற்கொண்டு - உள்ளூர் பிரச்சனைகளை நீங்கள் பார்க்கத் தொடங்குவீர்கள் இலையுதிர் காலத்தின் தொடக்கத்தில் நகரம் எவ்வாறு உணர்கிறது என்பதுதான் தேர்தலின் போக்கைத் தீர்மானிக்கும்.

வாக்காளர்கள் என்ன சொல்கிறார்கள்?

டொராண்டோ நகரம் முழுவதிலும் உள்ள 100-க்கும் மேற்பட்ட மக்கள், தங்களின் முக்கிய தேர்தல் பிரச்சனைகள் குறித்து பதிலளித்துள்ளனர் அல்லது கேள்விகளை எழுதியுள்ளனர்.

இந்த ஐந்து முக்கிய பிரச்சனைகள் மீண்டும் மீண்டும் முன்னிலைக்கு வந்துள்ளன:

வாழ்க்கைச் செலவு உயர்வு (Affordability): குறிப்பாக வீட்டுவசதி தொடர்பான செலவுகள் மிகப்பெரிய பிரச்சனையாக உள்ளது.

வீடற்ற நிலை மற்றும் போதைப்பொருள் அடிமைத்தனம்: இது வாக்காளர்களுக்கு ஒரு பெரிய கவலையாக இருந்தாலும், இதை எவ்வாறு செய்வது என்பதில் வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன.

மிதிவண்டிப் பாதைகள் (Bike lanes): மிதிவண்டிப் பாதைகளை அகற்றுவதற்குப் பதிலாக, அவற்றைத் தக்கவைத்து மேம்படுத்த வேண்டும் என்று பெரும்பாலான மக்கள் குரல் கொடுத்து வருகின்றனர்.

நகர நிர்வாகத்தில் மாகாணத்தின் தலையீடு: மேயர் ஒலிவியா சௌவைத் (Olivia Chow) தோற்கடிப்பதில் சிலர் மட்டுமே தீவிர கவனம் செலுத்துகின்றனர். அதேவேளையில், ஒன்ராறியோ முதல்வர் டக் ∴போர்ட் (Doug Ford) நகர விவகாரங்களில் தலையிடுவதைக் கண்டித்து பலர் எழுதியுள்ளனர்.

பொதுப் பாதுகாப்பு ரூ உள்கட்டமைப்பு: பொதுப் பாதுகாப்பு சில வாக்காளர்களுக்கு ஒரு பிரச்சனையாக ,ருந்தது, அதே நேரத்தில் நகரத்தின் உள்கட்டமைப்பு நிலை குறித்தும் பலர் கவலை தெரிவித்தனர்.

நகர நிர்வாகத்தில் மாகாணத்தின் தலையீடு: மேயர் ஒலிவியா சௌவைத் (Olivia Chow) தோற்கடிப்பதில் சிலர் மட்டுமே தீவிர கவனம் செலுத்துகின்றனர். அதேவேளையில், ஒன்ராறியோ முதல்வர் டக் ∴போர்ட் (Doug Ford) நகர விவகாரங்களில் தலையிடுவதைக் கண்டித்து பலர் எழுதியுள்ளனர்.

பொதுப் பாதுகாப்பு & உள்கட்டமைப்பு: பொதுப் பாதுகாப்பு சில வாக்காளர்களுக்கு ஒரு பிரச்சனையாக இருந்தது, அதே நேரத்தில் நகரத்தின் உள்கட்டமைப்பு நிலை குறித்தும் பலர் கவலை தெரிவித்தனர்.

BEHIND ME MEDIA
2026 September, 08
219, Kandy Road Jaffna.
Tel : +94762390159,
+14376883493
Email:
info@behindmemedia.com,
website:
www.behindmenews.org

# அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்தை கார்னி அரசாங்கம் நிராகரித்ததற்கு கனடியர்கள் ஆதரவு: நனோஸ் கருத்துக்கணிப்பு



ஒட்டாவா – பொருளாதாரப் பின்னடைவுகள் குறித்த கவலைகள் நிலவியபோதிலும், அமெரிக்காவுடனான வர்த்தகப் பேச்சுவார்த்தையை நிராகரித்து வெளியேறுவதற்கான பிரதமர் மார்க் கார்னி (Mark Carney) தலைமயிலான அரசாங்கத்தின் முடிவிற்கு பெரும்பாலான கனடிய மக்கள் பெருமளவில் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

“சிடிவி நியூஸ்“ (CTV News) செய்திச் சேவைக்காக “நனோஸ் ரிசர்ச்“ (Nanos Research) நடத்திய புதிய கருத்துக்கணிப்பில் இத்தகவல் வெளியாகியுள்ளது. மேலும், செப்டம்பர் 8 முதல் அமெரிக்க இறக்குமதிகளுக்கு எதிராக கனடா விதிக்கவுள்ள பதில் வர்த்தக வரிகளுக்கு (counter-tariffs) கனடிய மக்களிடையே முன்னெப்போதும் இல்லாத வகையில் உச்சக்கட்ட ஆதரவு நிலவுவதாக இந்த ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆகஸ்ட் 21 அன்று, ஒட்டாவா மற்றும் வோஷிங்டன் இடையிலான வர்த்தகப் பேச்சுவார்த்தைகள் முறிந்தன. அதனைத் தொடர்ந்து, ஒப்பந்தத்திலிருந்து விலகும் தீர்மானத்தை பிரதமர் மார்க் கார்னி மேற்கொண்டார்.

இதன் விளைவாக, அடுத்த நாளே பில்லியன் கணக்கிலான டாலர் மதிப்பிலான கனடிய பொருட்கள் மீது அமெரிக்கா 50 சதவீத வரிகளை விதித்தது. இதற்குப் பதிலடியாக, செப்டம்பர் 8 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், சுமார் 28 பில்லியன் டாலர் மதிப்பிலான அமெரிக்க இறக்குமதிப் பொருட்களுக்கு இணையாக “டாலருக்கு டாலர்“ என்ற அடிப்படையில் பதில் வரிகளை கனடா அறிவித்தது.

தற்போது தீவிரமடைந்துள்ள இந்த வர்த்தகப் போரில் கனடியர்களின் நிலைப்பாடு, ஒப்பந்தத்தை நிராகரித்ததற்கான ஆதரவு, பேச்சுவார்த்தைக்கான கால அளவு எதிர்பார்ப்பு மற்றும் வரிகளினால் ஏற்படும் பொருளாதார பாதிப்புகள் குறித்தான கவலைகள் குறித்து இந்த ஆய்வு நடத்தப்பட்டது.

அமெரிக்க வர்த்தக ஒப்பந்த நிராகரிப்பு குறித்த மக்களின் நிலைப்பாடு:வர்த்தகப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகி, அமெரிக்காவின் ஒப்பந்தத்தை நிராகரித்த கனடாவின் முடிவிற்கு மிக அதிக அளவிலான ஆதரவு கிடைத்துள்ளது.

நான்கில் மூன்று பங்கு கனடியர்கள் (75 சதவீதம் பேர்) இந்த முடிவை முழுமையாக ஆதரிப்பதாகக் கூறியுள்ளனர். மேலும் 10 சதவீதம் பேர் இம்முடிவிற்கு ஓரளவு ஆதரவு அளித்துள்ளனர்.

அதேசமயம், கனடா இந்த வர்த்தக ஒப்பந்தத்தை நிராகரித்ததை எதிர்ப்பதாக 7.8 சதவீதம் பேரும், ஓரளவு எதிர்ப்பதாக 4.4 சதவீதம் பேரும் தெரிவித்துள்ளனர்.

நாட்டின் பெரும்பாலான பகுதிகள் இந்த முடிவை ஆதரித்தாலும், பிரெய்ரி (Prairies) பிராந்தியத்திலேயே இதற்கு நேரடி ஆதரவு ஒப்பீட்டளவில் குறைவாகப் பதிவாகியுள்ளது.அதேவேளையில், 55 வயதைக் கடந்த மூத்த கனடியர்கள், அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை நிராகரித்த கனடா அரசாங்கத்தின் முடிவிற்கு அதிகளவில் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# நீண்டகால வர்த்தகப் போருக்கு கனடா தயார்?

அமெரிக்கப் பொருட்களுக்கு எதிராக கனடாவால் விதிக்கப்பட்ட வர்த்தக வரிகள் செவ்வாய்க்கிழமை முதல் அமலுக்கு வந்துள்ளன. இருப்பினும் இரு நாடுகளுக்கும் இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுவதற்கான எந்த அறிகுறிகளும் தற்போதைக்குத் தெரியவில்லை.

இந்த எதிர்-வரிகள் எ·்கு (Steel), தளபாடங்கள் முதல் பருத்தி டி-ஷர்ட்டுகள் வரை சுமார் 28 பில்லியன் கனடிய டாலர் ($20 பில்லியன்) மதிப்புள்ள அமெரிக்கப் பொருட்களுக்குப் பொருந்தும், மேலும் இவை 50% வரை உயர்த்தப்படும்.

அமெரிக்க மற்றும் கனடிய அதிகாரிகள் இரு தரப்பினரும் ஒப்பந்தம் ஒன்றை எட்ட விரும்புவதாகக் கூறியுள்ள போதிலும், கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் பேச்சுவார்த்தைகள் முறிந்த பின்னர் அவற்றை மீண்டும் தொடங்குவதற்கான எந்தவொரு முயற்சிகளும் எடுக்கப்படவில்லை.

கனடாவைச் சேர்ந்த விமானத் தயாரிப்பு நிறுவனமான பாம்பார்டியர் (Bombardier) தனது உற்பத்திப் பணிகளை தெற்குப் பகுதிக்கு (அமெரிக்காவிற்கு) மாற்றாவிட்டால், அந்நிறுவனத்துடனான அனைத்து அமெரிக்க வணிக நடவடிக்கைகளையும் நிறுத்தப்போவதாக அதிபர் டொனால்ட் டிரம்ப் திங்கள்கிழமை அச்சுறுத்தினார்.

டிரம்ப் வார இறுதியில் தனது ட்ரூத் சோஷியல் (Truth Social) தளத்தில் வெளியிட்ட பதிவுகளில் கனடாவைக் கடுமையாக விமர்சித்தார். அதில் ஒன்றில், அமெரிக்க டாலருடனான கனடாவின் செலாவணி மாற்று விகிதம் “ஏற்றுக்கொள்ள முடியாதது” என்று குறிப்பிட்டிருந்தார்.

“வணிகங்கள் பழிவாங்கும் நடவடிக்கையைப் புரிந்துகொள்கின்றன, ஆனால் எல்லை மீறிய பதற்றத்தை விரும்பவில்லை,” என்று சபையின் தலைமை நிர்வாக அதிகாரி காண்டேஸ் லைங் (Candace Laing) வெள்ளிக்கிழமை BBC-க்கு அளித்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். இருப்பினும், வணிகங்கள் “இந்த வர்த்தகத் தகராறு நீண்ட காலம் நீடிக்கும் என்பதற்கேற்பத் தயாராகி வருகின்றன” என்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்கா தற்போது கனடிய கார்கள் மற்றும் லாரிகள் மீது 25மூ வரியையும், கனடிய எ·்கு, அலுமினியம் மற்றும் மரப் பொருட்கள் மீது கூடுதல் வரிகளையும் விதித்துள்ளது. ஆகஸ்ட் மாத இறுதியில், அதிபர் டொனால்ட் டிரம்ப் பால் பொருட்கள், மதுபானம், ஹாக்கி மட்டைகள் மற்றும் வாசனை திரவியங்கள் போன்ற பிற பொருட்கள் மீது 50மூ புதிய வரிகளை விதித்தார்.

அமெரிக்கா மீது பழிவாங்கும் வரிகளை விதிக்கும் தங்கள் நாட்டின் முடிவிற்கு பெரும்பாலான கனடியர்கள் ஆதரவு அளிப்பதாகக் கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

கனடா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளின் நண்டு தொழிலும் ஒன்றையொன்று பெரிதும் சார்ந்துள்ளன் அமெரிக்காவில் பிடிக்கப்படும் நண்டுகள் பெரும்பாலும் செயலாக்கத்திற்காக வடக்கு நோக்கிய கனடாவிற்கு அனுப்பப்பட்டு, பின்னர் மீண்டும் அமெரிக்காவிற்கு அனுப்பி விற்கப்படுகின்றன.

சமீபத்திய வரிகளுக்கு முன்னதாக, கனடாவின் பொருளாதாரம் வலுவான மீட்சிப் போக்கைக் காட்டியது. இரண்டாம் காலாண்டில் அதன் புனீ 3.3மூ வளர்ச்சியடைந்ததுடன், ஏப்ரல் முதல் ஜூலை வரை 181,000 வேலைவாய்ப்புகளைப் பெற்றது.

மிதமான வளர்ச்சியைக் கண்ட ஒரு துறை உற்பத்தித் துறையாகும் - நுகர்வோரும் வணிகங்களும் கனடாவில் தயாரித்த பொருட்களை அதிகம் வாங்குவதே இதற்குக் காரணம் என கனடிய அரசு கூறுகிறது.

# ஒன்டாரியோ தொழிலாளர்களை இலக்கு வைக்கும் அமெரிக்க வரிகள்!



அமெரிக்காவின் ,றக்குமதி வரிகள் ஒன்டாரியோ மாகாணத் தொழிலாளர்களைப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ள நிலையில், எப்போதும் ,ல்லாத அளவிற்கு அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு நல்ல ஊதியத்துடனான வேலைகளுக்கான பயிற்சிகளை வழங்கி வருவதாக ஒன்டாரியோ முதலமைச்சர் டக் ·போர்ட் (Doug Ford) தெரிவித்துள்ளார்.

உயர்கல்வித் துறையிலான முதலீட்டை ஒன்டாரியோ அரசாங்கம் 6.4 பில்லியன் டாலராக உயர்த்தி உள்ளதாகவும், தொழிலாளர்களும் இளைஞர்களும் நிலையான தொழில்வாய்ப்புகளைப் பெறுவதற்குத் தேவையான நடைமுறைத் திறன்களைக் கற்றுக்கொள்வதற்காக 2.5 பில்லியன் டாலர்களை முதலீடு செய்து வருவதாகவும் அவர் குறிப்பித்துள்ளார்.




# BEHIND ME MEDIA

# இராணுவக் கொள்முதல்: அமெரிக்காவிடமிருந்து விலகி நிற்கக் கனடா தயார்



கனடாவின் பாதுகாப்பு முதலீட்டு முகமையின் (Defence Investment Agency) தலைவர் நேர்காணல் ஒன்றில் தெரிவிக்கையில், அமெரிக்க நிறுவனங்களுக்கு ஒற்றை-மூல (sole-source) இராணுவ ஒப்பந்தங்களை வழங்குவதை கனடிய மக்கள் ஒருபோதும் விரும்புவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

“நிலைமையை நான் கவனித்து மதிப்பிட்ட வரையில், குறிப்பாக கடந்த வார நிகழ்வுகளுக்குப் பிறகு, அமெரிக்க நிறுவனங்களுக்கு அவ்வாறான ஒப்பந்தங்களை வழங்குவது மிகவும் கடினமான காரியமாக இருக்கும். மக்கள் அதில் நிச்சயமாக மகிழ்ச்சியடைய மாட்டார்கள்,” என்று பாதுகாப்பு கொள்முதல் அமைச்சுச் செயலாளர் ஸ்டீபன் ஃபூர் (Stephen Fuhr) கூறினார்.

இந்த வாரம் அறிவிக்கப்பட்ட கனடாவின் பதிலடி வரி விதிப்பு நடவடிக்கைகள் பாதுகாப்புத் துறையை நேரடியாக இலக்கு வைக்கவில்லை. இருப்பினும், ஃபூரின் கருத்துக்கள் அமெரிக்க இராணுவ தளவாடங்களை வாங்குவதில் கனடாவிற்கு அதிகரித்து வரும் தயக்கத்தையே காட்டுகின்றன.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் 2029 ஜனவரியில் பதவியிலிருந்து விலகிய பிறகு, இரு நாட்டு உறவுகள் மீண்டும் வழமைக்குத் திரும்பிவிடும் என்பது போல கனடா நடந்துகொள்ளக் கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

வரவிருக்கும் ஆண்டுகளில் கூடுதல் பாதுகாப்புச் செலவினங்களுக்காக பல்லாயிரக்கணக்கான கோடிக் கணக்கான டாலர்களை ஒதுக்குவதாக கனடா உறுதியளித்துள்ள போதிலும், அந்த நிதியில் 70 சதவீதம் தெற்கு எல்லைக்கு (அமெரிக்காவிற்கு) பாய்ந்த காலக்கட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க விரும்புவதாகத் தெரிவித்துள்ளார்.

“நாங்கள் தூண்டிவிடாத ஒரு சூழ்நிலையிலும், நாங்கள் தகுதியற்ற ஒரு நிலையிலும்தான் தற்போது இருக்கிறோம். இந்த மாற்றத்தின் பாதிப்பை நாங்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இந்தத் தருணத்தைச் சமாளிக்கவும், இனி மீண்டும் ஒருபோதும் இத்தகைய நிலைக்குத் தள்ளப்படாமல் இருக்கவும் புதிய வாய்ப்புகளைக் கண்டறிந்து விரைவாகச் செயல்படுவதே நமது பணியாகும்,” என்று ஃபூர் கூறினார்.

கனடா தனது விருப்பங்களை “கவனமாகப் பரிசீலித்து வருகிறது”

அமெரிக்காவை இன்னமும் ஒரு முக்கிய பாதுகாப்பு பங்காளியாகவே ஃபூர் விவரிக்கிறார். ஆனால், “அனைத்து முட்டைகளையும் ஒரே கூடையில் வைப்பதன்” ஆபத்துக்களை கனடா உணர்ந்து கொண்டதாக அவர் வலியுறுத்துகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக, இராணுவ உற்பத்தியில் கனடா தன்னிறைவு பெற வேண்டும் அல்லது புதிய மூலோபாயக் கூட்டணிகளை உருவாக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

“எனவே, நம்முடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் மற்றும் நமது பணிகளுக்கு மேலதிக மதிப்பு சேர்க்கக்கூடிய மற்றவர்களுடன் இணைந்து பணியாற்றுவது குறித்து நாங்கள் ஆழமாகப் பரிசீலித்து வருகிறோம். மீண்டும் கூறுகிறேன், எங்களின் பாரம்பரிய பங்காளியுடனான உறவைக் குறைத்து மதிப்பிடுவதற்காக இதைச் சொல்லவில்லை, ஆனால் இப்போது நிலைமை மாறிவிட்டது. இனிவரும் காலங்களில் நமது உறவு நிச்சயமாக வேறுபட்டதாகவே இருக்கும் என்பது தெளிவாக உணர்த்தப்பட்டுவிட்டது,” என்று ஃபூர் கூறினார்.

மொன்ட்ரியாலில் உள்ள கியூபெக் பல்கலைக்கழகத்தின் (Université du Québec à Montréal) இராணுவ விவகாரங்களுக்கான நிபுணர் ஜஸ்டின் மாசி (Justin Massie) கூறுகையில், புதிய அமெரிக்க யதார்த்தத்திற்கு ஏற்ப கனடா தனது பாதுகாப்பு கொள்கையை மாற்றி அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்றார்.

“தங்கள் நட்பு நாடுகளைப் பாதுகாக்கும் பொறுப்பை அந்தந்த நாடுகளே முழுமையாக ஏற்க வேண்டும் என அமெரிக்கா விரும்புகிறது. ஐரோப்பா மற்றும் கனடாவின் பாதுகாப்பிற்கு அமெரிக்க வரி செலுத்துவோரின் பணத்தைப் பயன்படுத்துவதில் அவர்கள் சலிப்படைந்துவிட்டனர்,” என்று மாசி குறிப்பிட்டார்.

மெக்டொனால்ட்-லாரியர் நிறுவனத்தின் (Macdonald-Laurier Institute) மூத்த ஆய்வாளர் ரிச்சர்ட் ஷிமூகா (Richard Shimooka) கூறுகையில், கனடாவின் பாதுகாப்பு வரவுசெலவுத் திட்டம் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 2 சதவீதத்திற்கும் அதிகமாக உயர்ந்து வரும் நிலையிலும், கண்டத்தின் பாதுகாப்பிற்காக (NORAD) அமெரிக்காவுடன் தொடர்ந்து இணைந்து பணியாற்றுவதற்கான வழியை கனடா கண்டறிய வேண்டியிருக்கும் என்றார்.

“கனடாவால் இதைத் தனியாகச் செய்ய முடியாது என்பதை கனடியர்கள் புரிந்து கொள்ளவில்லை. நமது பாதுகாப்பு வரவுசெலவுத் திட்டத்தை 10 சதவீதமாக உயர்த்தினாலும் கூட அது போதுமானதாக இருக்காது,” என்று அவர் தெரிவித்தார்.

# எல் நினோ 2027 ஆரம்பத்தில் இலங்கையில் அதிக வெப்பமான மற்றும் வறட்சியான காலநிலை?

எல் நினோ நிகழ்வுகள் தீவிரமடைந்து வருவதால், வரும் மாதங்களில் இலங்கையில் மழைவீழ்ச்சி அமைப்புகளில் மாற்றங்கள் மற்றும் வெப்பநிலை உயர்வு ஆகியவை ஏற்படக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் விஜேமான்ன தெரிவித்துள்ளார்.

2027 பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நாட்டின் வெப்பநிலை அதிகரிக்கும் என்றும், அதே வேளையில் மழைவீழ்ச்சி இயல்பை விடக் குறைவாகவே இருக்கும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்பார்க்கிறது. இதன் காரணமாக, நாட்டின் பல பகுதிகளில் ஒப்பீட்டளவில் வறட்சியான வானிலை நிலவக்கூடும்.

வெப்பநிலை உயர்வின் தாக்கம் பகல் நேரத்தில் அதிகமாக உண உணரப்படலாம் என்பதோடு, இரவு நேர வெப்பநிலையும் உயர வாய்ப்புள்ளதாக விஜேமான்ன குறிப்பிட்டார்.

இதற்கிடையில், வறட்சியால் பாதிக்கப்பட்ட சில பகுதிகள் மழையைப் பெற வாய்ப்புள்ளது. மொணராகலை, பதுளை, மன்னார் மற்றும் மட்டக்களப்பு, கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளிலும் இன்று மாலையும் நாளைய தினமும் பலத்த மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.



மேலும், செப்டம்பர் மாத இறுதியில் பரவலான மழை தொடங்கக்கூடும் என்றும், இது தற்போது வறட்சியை எதிர்கொள்ளும் பகுதிகளுக்குச் சிறிது நிவாரணம் அளிக்கும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் எல் நினோ காலநிலை உருவாக அதிக வாய்ப்புள்ளதாகவும், இக்காலகட்டத்தில் அது மேலும் தீவிரமடையக்கூடும் என்றும் உலக வானிலை அமைப்பு (WMO) சுட்டிக்காட்டியுள்ளது.

வளர்ந்து வரும் எல் நினோ நிலைமைகள் வரவிருக்கும் மாதங்களில் இலங்கையின் மழைவீழ்ச்சி முறைகள் மற்றும் வெப்பநிலை நிலைகளைப் பாதிக்கக்கூடும் என்பதால், வானிலை அதிகாரிகள் நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# நாளை பிரச்சாரம் தொடங்குவதற்கு முன் எந்த விவாதங்களிலும் சௌ பங்கேற்க மாட்டார் !




வரவிருக்கும் யூத விரோத மனப்பான்மை குறித்த விவாதம் நாளை செப்டம்பர் 9-ஆம் தேதி தனது பிரச்சாரம் அதிகாரப்பூர்வமாகத் தொடங்குவதற்கு ஒரு நாள் முன்பு நடைபெறுவதால், மேயர் ஒலிவியா சௌ அதில் கலந்துகொள்ள மாட்டார் என்று ஒரு பேச்சாளர் தெரிவித்தார்.

“அந்த தேதிக்கு முன் எந்த விவாதங்களிலும் அவர் பங்கேற்க மாட்டார்” என்று அந்தப் பேச்சாளர் கூறினார். ”தனது பிரச்சாரம் தொடங்கிய பிறகு, யூத விரோத மனப்பான்மை, பாதுகாப்பு மற்றும் பிற முக்கியமான விஷயங்கள் குறித்து யூத சமூகத்துடன் அவர் ஈடுபடுவார்.”

வெள்ளிக்கிழமையன்று டொரண்டோ ஸ்டார் இந்தச் செய்தியை முதலில் வெளியிட்டது.

கனடா யூத வழக்கறிஞர்கள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த விவாதம், செப்டம்பர் 8-ஆம் தேதி டொரண்டோவில் உள்ள ஒரு ஜெப ஆலயத்தில் நடைபெறும். ஏற்பாட்டாளர்களை உடனடியாகத் தொடர்பு கொள்ள முடியவில்லை.

சோவின் இரு முக்கிய போட்டியாளர்களான கவுன்சிலர் பிராட் பிராட்ஃபோர்டு (பீச்சஸ்-ஈஸ்ட் யார்க்) மற்றும் முன்னாள் கூட்டாட்சி அமைச்சர் கிறிஸ் அலெக்சாண்டர் ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

சமீபத்திய அறிக்கை ஒன்றின்படி, ”டொரண்டோவிற்கான தங்கள் பார்வையை வெளிப்படுத்தவும், யூத விரோத மனப்பான்மை மற்றும் வெறுப்பை எவ்வாறு எதிர்கொள்வார்கள், பொது பாதுகாப்பை எவ்வாறு வலுப்படுத்துவார்கள், சமூக நிறுவனங்களைப் பாதுகாப்பார்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் குடிமைச் செயல்பாடுகளில் பங்கேற்க முடியும் என்பதை விளக்கவும்” வேட்பாளர்களுக்கான வாய்ப்பாக இந்த விவாதம் வர்ணிக்கப்படுகிறது.

சோ கலந்துகொள்ளாதது ”மிகவும் துரதிர்ஷ்டவசமானது” என்று பிராட்ஃபோர்டின் பிரச்சாரக் குழுவின் பேச்சாளர் கூறினார்.

”இந்த நகரத்திற்குத் தேவையான மாற்றத்தைப் பற்றி இரு வேட்பாளர்களும் அருகருகே நின்று தங்கள் வாதங்களை முன்வைப்பதைக் கேட்க டொரண்டோ மக்கள் தகுதியானவர்கள்” என்று அந்தப் பேச்சாளர் கூறியதுடன், சௌ பங்கேற்காவிட்டால் ஒரு நேரடி உரையாடல் பாணி விவாதத்திற்கு பிராட்ஃபோர்டு ஒப்புக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

இஸ்ரேல்-ஹமாஸ் போருக்குப் பிறகு யூத விரோத மனப்பான்மையை போதுமான அளவு எதிர்கொள்ளவில்லை என்று பிராட்ஃபோர்டு உள்ளிட்ட விமர்சகர்களால் சௌ குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

2023 அக்டோபர் 7-ஆம் தேதி இஸ்ரேலின் மீதான ஹமாஸ் தாக்குதலைத் தொடர்ந்து வெறுப்புக் குற்றங்கள் கடுமையாக அதிகரித்ததாக டொரண்டோ போலீஸ் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன, பின்னர் 2025-ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கை குறைந்தது. இருப்பினும், மே மாதத்தில் 2026-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ”கவலைக்குரிய” அதிகரிப்பு ஏற்பட்டதாக போலீஸ் தெரிவித்தது.

வெறுப்புக் குற்றப் புள்ளிவிவரங்கள் மதம், இனம், இன மூலம், பாலியல் நோக்குநிலை, இயலாமை, மொழி அல்லது பாலின அடையாளத்தால் தூண்டப்பட்ட எந்தவொரு குற்றத்தையும் உள்ளடக்கியது, ஆனால் அனைத்து வெறுப்பு-தூண்டப்பட்ட குற்றங்களிலும் ”அதிக அளவில் இலக்கு வைக்கப்படும்” குழுவாக யூத சமூகம் இருப்பதாக போலீஸ் தெரிவித்தது.

இருப்பினும், யூத விரோத மனப்பான்மையை எதிர்கொள்வதில் மேயரின் அர்ப்பணிப்பு குறித்த எந்தவொரு கேள்விகளையும் சௌவின் பேச்சாளர் மறுத்தார்.

□டொரண்டோவில் தலைதூக்கியுள்ள யூத விரோத மனப்பான்மையைக் கண்டிப்பதில் மேயர் சோ தெளிவாகவும் நிலையாகவும் இருந்திருக்கிறார்” என்று அவரது பிரச்சாரப் பேச்சாளர் கூறினார். ”சமூகங்களில் அதிகரித்த போலீஸ் இருப்பில் அவர் முதலீடு செய்துள்ளார், உடல் பாதுகாப்பு மேம்பாடுகளுக்கான திட்டங்களை உருவாக்கியுள்ளார், மேலும் சமூகம் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்யும் நடவடிக்கைகள் குறித்து சமூகத் தலைவர்கள் மற்றும் போலீசாருடன் சந்தித்துள்ளார். யூத விரோத மனப்பான்மையை முற்றிலும் ஒழிக்க இன்னும் அதிக வேலை செய்ய வேண்டும் என்பதை அவர் உணர்கிறார், மேலும் தொடர்ந்து நடவடிக்கை எடுப்பார்.”

கனேடிய அரசியலில் விவாதங்களைத் தவிர்ப்பது என்பது பொதுவான ஒன்றுதான். 2023 மேயர் இடைத்தேர்தலில், சௌ, அனா பைலாவோ, மார்க் சாண்டர்ஸ் மற்றும் பிராட்ஃபோர்டு ஆகியோர் அனைவரும் பல்வேறு காரணங்களுக்காக விவாதங்களைத் தவறவிட்டனர்.

செப்டம்பர் 14-ஆம் தேதி நடைபெறும் டெய்லி பிரெட் உணவு வங்கி விவாதத்தில் தான் கலந்துகொள்வதாக சௌ உறுதிப்படுத்தியுள்ளார்.

BEHIND ME MEDIA

# அதிகரித்து வரும் டக் ஃபோர்டின் செல்வாக்கு!

தொடர்ச்சி

டொராண்டோவிற்கு வடக்கே உள்ள யார்க்-சிம்கோ தொகுதி, 2007 இல் உருவாக்கப்பட்டதிலிருந்தே டோரி (PC) கட்சியின் கோட்டையாக இருந்து வருகிறது. கடந்த ஆறு தேர்தல்களில் பிசி கட்சி 40 சதவீதத்திற்கும் குறைவான வாக்குகளைப் பெற்று இந்தத் தொகுதியை ஒருபோதும் வென்றதில்லை.

ஆனால், ஸ்கார்பாரோ சவுத்வெஸ்ட் மற்றும் ஹாமில்டன் ஈஸ்ட்-ஸ்டோனி க்ரீக் ஆகிய இரண்டு தொகுதிகளிலும் கடுமையான போட்டி நிலவும் எனக் கருதப்படுகிறது. ஃபோர்டு டிரம்புடன் நடத்தும் இந்த மோதல் பிசி கட்சிக்கு ஆதரவை அதிகரிக்கக்கூடும் என வல்லுநர்கள் கூறுகின்றனர்.

“இது அளப்பரிய உதவிகளைச் செய்யும் என்று நான் நினைக்கிறேன்,” என்று முன்னாள் லிபரல் அமைச்சரவை அமைச்சர் ஜான் மில்லோய் கூறினார். “(வாக்காளர்கள்) அந்த வாக்குச்சீட்டைப் பார்க்கும்போது, இப்போது டிரம்ப் எதிர்ப்பு உணர்வோடு மிகவும் தொடர்புடைய நபராக டக் ஃபோர்டு இருப்பார். எனவே இது உதவக்கூடும்”.

‘ஃபோர்டுக்கு கவனத்தை திசைதிருப்பும் ஒரு வாய்ப்பு அவசரமாகத் தேவைப்பட்டது’: வியூகவாதி

தற்போது மார்ட்டின் லூதர் பல்கலைக்கழகக் கல்லூரியின் பொது நெறிமுறைகளுக்கான மையத்தின் இயக்குநராக இருக்கும் மில்லோய், இடைத்தேர்தல்களில் வழக்கமாக வாக்காளர்களின் வருகை குறைவாகவே இருக்கும் என்று கூறினார். ஆனால் டிரம்பின் மீதான பொதுமக்களின் கொந்தளிப்பான கோபத்தை ஃபோர்டு சரியாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் மக்கள் அந்த விரக்தியை வெளிப்படுத்த வழிகளைத் தேடுகிறார்கள்.

அந்த உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழியாக இடைத்தேர்தலில் வாக்களிப்பது அமையக்கூடும் என்று மில்லோய் கூறினார்.

“அவர் செய்தது மிகவும் புத்திசாலித்தனமானது என்று நான் நினைக்கிறேன், மேலும் இது மக்களை வெளியே வந்து வாக்களிக்க ஊக்குவிக்கும், இது ஒரு மிகப்பெரிய விஷயம்,” என்று அவர் கூறினார். “மக்களை சோம்பலை விட்டு எழுப்பி வாக்களிக்க வைப்பதே இதில் முக்கியப் பங்கு”.

அதிகாரப்பூர்வ எதிர்க்கட்சியான எண்டிபி (NDP), இந்த இடைத்தேர்தல்களில் வெற்றிபெறும் நோக்கில் ஸ்கார்பாரோ மற்றும் ஹாமில்டன் ஆகிய இரு தொகுதிகளிலும் தீவிரமாகப் பணியாற்றி வருவதாக எண்டிபி வியூகவாதி எரின் மோரிசன் தெரிவித்தார்.


பிசி கட்சி பல மாதங்களாக தொடர் சர்ச்சைகளில் சிக்கியிருந்தது. அதில் ஒரு தனியார் ஜெட் விமானம் வாங்கியது மற்றும் விற்றது, செலவின ஊழல் மற்றும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் விடுமுறையில் இருந்தபோது அவரைக் உளவு பார்த்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் ஆகியவை அடங்கும்.

“ஃபோர்டுக்கு மக்களின் கவனத்தை திசைதிருப்-மேலும் டிரம்ப் வடிவில் அது அவருக்குக் கிடைத்தது ஹாமில்டன் ஈஸ்ட்-ஸ்டோனி க்ரீக் மற்றும் ஸ்கார்பாரோ சவுத்வெஸ்டில் அவருக்கு உதவக்கூடும்,” என்று ‘டெக்ஸ்டர் கம்யூனிகேஷன்ஸ்’ நிறுவனத்தின் துணைத் தலைவரான மோரிசன் கூறினார்.

இரண்டு தொகுதிகளிலும் எண்டிபி (NDP) முன்னிலையில் இருப்பதாக அவர் நம்புகிறார், ஆனால் இப்போது அவர்கள் தங்களது வாக்குகளைப் பெற கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும்.

கன்சர்வேடிவ் வியூகவாதியான சாம் டங்கன் கூறுகையில், டிரம்புடனான மோதல் முதல்வரின் பலங்களுக்குச் சாதகமாக அமைகிறது என்றார். மேலும் கடந்த வாரத்தில் அவரது நடவடிக்கைகளும் பேச்சுக்களும், வாக்காளர்கள் ஏன் அவரை மீண்டும் பெரும்பான்மை அரசாங்கத்துடன் குயின்ஸ் பார்க்கிற்கு (Queen’s Park) அனுப்பி வைத்தார்கள் என்பதை நினைவுபடுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

# யாழ். போதனா வைத்தியசாலையில் விசேட கண்புரை சத்திரசிகிச்சை முகாம்




நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் வருகை தந்த 200-க்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு, விசேட முகாம் ஒன்றின் மூலம் கண்புரை (Cataract) சத்திரசிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப் பட்டன.

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் கண் சிகிச்சைப் பிரிவு வைத்தியக் குழுவினரும், ஹம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையின் வைத்தியக் குழுவினரும் இணைந்து இவ்விசேட கண்புரை சத்திர சிகிச்சை முகாமை சிறப்பாக முன்னெடுத்தனர்.

இதன் மூலம் கண்புரை காரணமாக பார்வைக் குறைபாட்டுடன் காணப்பட்ட 200-க்கும் மேற்பட்ட நோயாளிகள் சத்திரசிகிச்சை பெற்று பயனடைந் துள்ளனர்.

BEHIND ME MEDIA






# செப்டம்பர் 14: தடைகளை நீக்கி அருளும் விநாயகர் சதுர்த்தி விரதம்!



பிள்ளையார் பூஜை என்பது ஒருநாள் கொண்டாடும் விழாவாக மட்டுமின்றி, வாழ்க்கை முழுவதும் நமக்கு வளமும் வளமையும் தரும் ஆன்மீக பாதையை நினைவூட்டும் திருநாள் ஆகும். பிள்ளையாரின் அருளுடன் துவங்கும் வாழ்க்கைப் பயணம் எப்போதும் நன்மையிலும் வெற்றியிலும் முடியும்.

இந்துக்களால் மிகவும் உற்சாகத்துடன் கொண்டாடப்படும் பண்டிகைகளில் முக்கியமானது விநாயகர் சதுர்த்தி விழா. தடைகளை நீக்கி, ஞானம், செல்வம், வெற்றி ஆகியவற்றை அருளும் விநாயகப் பெருமானின் பிறந்த நாளாகவும் இந்த நாள் கொண்டாடப்படுகின்றது.

முழுமுதற் கடவுளும், ஈசனின் மகனுமான விநாயகர் அவதரித்த தினமான விநாயகர் சதுர்த்தி விழாவானது ஒவ்வொரு வருடமும் ஆவணி மாதத்தின் வளர்பிறை சதுர்த்தி நாளன்று கொண்டாடப்படுகிறது. அதன்படி, இந்த வருடம் வருகின்ற செப்டம்பர் 14 திங்களன்று விநாயகர் சதுர்த்தி விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட உள்ளது. அப்படிப்பட்ட இந்த தருணத்தில் விநாயகர் சதுர்த்தி விழா ஏன் கொண்டாடுகிறோம்? அதன் தாத்பரியம் என்ன? வரலாறு பற்றியும் தெரிந்துகொள்வோம்.

மன்னர் சத்ரபதி சிவாஜியின் காலத்திலேயே விநாயகர் சதுர்த்தி விழா பிரபலமாகிவிட்டாலும் இன்று நாம் பார்க்கும் விநாயகர் விழாக் கொண்டாட்டங்கள் மற்றும் ஊர்வலங்களுக்குப் பிள்ளையார் சுழி போட்டவர் இந்திய விடுதலை இயக்கத்தின் முதல் தலைவரான பாலகங்காதர திலகர்.

1893-ம் ஆண்டு ”சர்வஜன கனேஷ் உத்சவ்” என்ற பெயரில் இவர் ஆரம்பித்துவைத்த விநாயகர் சதுர்த்தி கொண்டாட்டங்களே இன்று வரை மக்கள் மிகப்பெரிய விழாவாகக் கொண்டாடி வருகின்றனர்.

புராணப்படி அரக்கர்களின் கொடுமையிலிருந்து தங்களைக் காத்திடத் தவமிருந்து, சிவபெருமானிடம் தேவர்கள் முறையிட்டதன் பயனாகத் தடைகளைத் தகர்த்தெறியும் ஆற்றலுடன் சிவன் பார்வதியால் உருவாக்கப்பட்டவர்தான் விநாயகப் பெருமான்.

இவர் ஒரு ஆவணி மாத சதுர்த்தியன்று யானை முகத்தோடும், மனித உடலோடும் அரக்கன் கஜமுகாசுரனை அழித்து தேவர்களை மீட்டார். எனவே, அன்று முதல் இந்த தினத்தை விநாயகர் சதுர்த்தியாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.



# யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழா



ஒரு மனிதன் அறிவிலும் சிந்தனையிலும் முழுமையடைவதற்கு வாசிப்பு இன்றியமையாதது. அறிவைத் தேடும் பயணம் வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டிய ஒன்றாகும். வாசிப்புப் பழக்கத்தை அடுத்த தலைமுறையிடம் வளர்ப்பதற்கு முன்னர், பெரியவர்களான நாமே வாசிப்பை எமது வாழ்வின் ஒரு பகுதியாக மாற்றிக்கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம், இந்திய துணைத் தூதரகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த “யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழா - 2026“ கடந்த சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் சங்கிலியன் பூங்காவில் ஆரம்பமானது.

நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், ஒரு மனிதன் முழுமையடைவது வாசிப்பின் ஊடாகவே எனக் குறிப்பிட்டார். அறிவைத் தேடும் இந்தப் பயணம் ஒரு குறிப்பிட்ட வயதுடன் முடிவடைவதில்லை என்றும், வாழ்நாள் முழுவதும் தொடர வேண்டிய ஒன்றாகும் என்றும் தெரிவித்தார்.

வாசிப்பின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் அறிஞர் அண்ணா தொடர்பான நிகழ்வை நினைவு கூர்ந்த ஆளுநர், சத்திரசிகிச்சைத் தருணத்திலும் தாம் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தை முடிப்பதற்கு நேரம் கேட்ட சம்பவம், வாசிப்பு ஒருவரது வாழ்வில் எந்தளவு ஆழமான இடத்தைப் பெற முடியும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு எனக் குறிப்பிட்டார்.




BEHIND ME MEDIA

இன்றைய சமூக ஊடகச் ஊடகங்களின் நல்லவை, கெட்டவை, உண்மையானவை, பொய்யானவை எனப் பல்வேறு தகவல்கள் வேகமாகப் பரவி வருகின்றன எனக் குறிப்பிட்ட ஆளுநர், சமூக ஊடகங்களில் நாம் வாசிக்கும் தகவல்கள் பெரும்பாலும் விரைவாக மறைந்து போகக்கூடியவை அல்லது மறக்கப்பட்டுவிடக்கூடியவை என்றார். அதற்கு மாறாக அச்சுப் புத்தகங்கள் நீண்ட காலத்துக்குப் பாதுகாக்கப்படக்கூடியதுடன், தேவையான எந்த நேரத்திலும் மீண்டும் எடுத்துப் படித்து பயன்பெறக்கூடிய நிலையான அறிவு வளங்களாகத் திகழ்கின்றன எனத் தெரிவித்தார்.


















யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம் இந்திய துணைத் தூதரகத்துடன் இணைந்து தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக மாபெரும் புத்தகக் கண்காட்சியை நடத்துவது பாராட்டத்தக்கது எனக் குறிப்பிட்ட ஆளுநர், பல்வேறு நூல்களையும் பதிப்பகங்களையும் ஒரே இடத்தில் ஒன்றிணைப்பதன் மூலம் வாசகர்கள் பல இடங்களுக்கு அலைந்து திரியாமல் தமக்குத் தேவையான நூல்களை எளிதாகத் தெரிவுசெய்யும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

குறிப்பாக, நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாக் காலத்துடன் இணைந்ததாக இப்புத்தகத் திருவிழா நடைபெறுவது, பெருமளவான மக்கள் இந்நிகழ்வில் பங்கேற்று பயன்பெறுவதற்கான சிறந்த வாய்ப்பாக அமைந்துள்ளதாகவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இளைஞர்கள் தமது வாசிப்புப் பழக்கத்தை மென்மேலும் வளர்த்துக்கொள்வதுடன், இதுவரை அறியாத புதிய விடயங்களைத் தேடிக் கற்றுக்கொள்வதற்கும் இத்தகைய நிகழ்வுகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும்,5 புத்தகங்களை வாங்குவது அல்லது வாசிப்பது என்பது வெறுமனே ஒரு தனிப்பட்ட பழக்கமாக அல்லாது, தனிமனித அறிவு வளர்ச்சிக்கும் சமூகத்தின் அறிவுசார் முன்னேற்றத்துக்கும் அடித்தளமாக அமையும் எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் கௌரவ அமைச்சர் இ.சந்திரசேகர், கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் ஸ்ரீ சாய் முரளி, யாழ்ப்பாண மாநகர கௌரவ முதல்வர் மதிவதனி மற்றும் யாழ்ப்பாண வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

வாசிப்பு குறைகிறது என்ற கவலையைத் தாண்டி, ஒவ்வொரு தலைமுறையிலும் புதிய வாசகர்களை உருவாக்குவதற்கான சூழலை நாம் கட்டியெழுப்ப வேண்டும் அதற்கான முக்கியமான முயற்சியாக யாழ்ப்பாணம் சர்வதேச புத்தகத் திருவிழா அமைய வேண்டும் என ஆளுநர் வாழ்த்துத் தெரிவித்தார்.





# உலகக் கண்ணோட்டம்

## 40 ட்ரில்லியன் டொலருக்கு மேல் அமெரிக்காவின் தேசிய கடன் தொகை?




அமெரிக்காவின் தேசிய கடன் தொகை 40 ட்ரில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் அதிகரித்துள்ளதாக அண்மையில் வெளியான அந்நாட்டு நிதி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி வெளியான அந்த அறிக்கை விபரங்களின்படி, இந்த ஆண்டின் 8 மாதங்களிலேயே கடன் தொகை 40.047 டிரில்லியன் அமெரிக்க டொலர்களைக் எட்டியுள்ளது.

இதில் 32.266 ட்ரில்லியன் டொலர் பொதுமக்களிடமும் 7.782 ட்ரில்லியன் டொலர் அரசுகளுக்கு இடையிலுமான கடன் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்காசியாவில் இடம்பெறும் போர்ச்சூழல், ஈரானுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகள், பாதுகாப்புக்கான நிதித் தேவைகள், பணவீக்கத்தை கட்டுப்படுத்த வட்டி விகிதங்கள் உயர்த்தப்பட்டதன் காரணமாக நாட்டின் கடன் மீதான வட்டித் தொகை பல மடங்கு அதிகரித்தமை போன்றவற்றினால் அமெரிக்கா இந்த வரலாறு காணாதளவு கடனை அதிகரிப்பை சந்தித்துள்ளதாக துறைசார் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

2017 ஜனவரியில் டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக முதன்முதல் பதவியேற்றபோது 19.95 ட்ரில்லியன் டொலராக இருந்த அமெரிக்காவின் கடன், அவர் பதவியேற்று ஒரு தசாப்த காலம் நிறைவடைவதற்குள் இரு மடங்குக்கும் அதிகமாகி, அமெரிக்கா பெரும் கடன்சுமையை எதிர்கொண்டிருப்பதாக குறிப்பிடப்படுகிறது.

## 11 ஆண்டுகளுக்குப் பிறகு பசுபிக் பெருங்கடலில் ஒரே நேரத்தில் உருவான 3 சூறாவளிகள்!




உலகெங்கிலும் உள்ள பல நாடுகளை எல் நினோ காரணி பாதித்துள்ள பின்னணியில், அது உருவான பசிபிக் பெருங்கடலில் 11 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரே நேரத்தில் மூன்று சூறாவளிகள் தீவிரமடைந்துள்ளன.

இந்த சூறாவளி நிலைமை காரணமாக ஏற்பட்ட கனமழை மற்றும் கடல் கொந்தளிப்பு காரணமாக ஹவாய் தீவுகளுக்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எல் நினோ தாக்கத்தின் மத்தியில் இந்த ஆண்டில் சீனாவைப் பாதித்த 7ஆவது சூறாவளியாகக் குறிப்பிடப்படும் ‘சௌடெல்’ (Soudelor) சூறாவளி அந்நாட்டிற்கு கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருவதாகக் தெரிவிக்கப்படுகிறது.

எல் நினோ காரணமாக கொலம்பியாவில் மழை குறைந்து வறட்சி நிலை ஏற்பட்டுள்ளதுடன், அங்குள்ள வீடுகளுக்கு பவுசர்கள் மூலம் நீர் விநியோகிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த சில வாரங்களாக இந்தோனேசியா மற்றும் சுவிட்சர்லாந்தின் வனப்பகுதிகளில் நிலவிய வறட்சியான வானிலையுடன் கடுமையான காட்டுத்தீ பரவியது.

உலகிற்கு இவ்வாறு பாதிப்பை ஏற்படுத்திய எல் நினோ நிலைமை, இலங்கையின் பல மாவட்டங்களில் கடுமையான வறட்சியை ஏற்படுத்தி பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கமைய, நாட்டின் 7 மாவட்டங்களில் நிலவும் கடுமையான வறட்சியான வானிலை காரணமாக குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியாமல் 35,000க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 115,534 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

## கச்சா எண்ணெய் திருட முயன்றபோது விஷவாயு தாக்கி 37 பேர் பலி

தெற்கு நைஜீரியாவின் ரிவர்ஸ் மாகாணத்தில் உள்ள ஒக்கிரிகா பகுதியில், கச்சா எண்ணெய் குழாயில் இருந்து வெளியேறிய கடுமையான விஷவாயுவைச் சுவாசித்ததில் 37 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். சட்டவிரோதமாக எரிபொருளைத் திருட முயன்றபோது இந்த சோக விபத்து நடந்துள்ளது.

சர்வதேச நாடுகளைச் சேர்ந்த எண்ணெய் நிறுவனங்கள் நைஜீரியா நாட்டின் டெல்டா பகுதிகளில் கச்சா எண்ணெய் குழாய்கள் அமைத்துள்ளன. மேலும், தெற்கு நைஜீரியாவின் ரிவர்ஸ் மாகாணத்தில் உள்ள ஒக்கிரிகா பகுதியின் ஒகாரி ஜெட்டி அருகே பிரதான கச்சா எண்ணெய் குழாய் ஒன்று அமைந்துள்ளது. இதனால், அந்த பகுதியில் சுற்றுச்சூழல் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரம் இழந்து மக்கள் வறுமையில் வாடி வந்தனர்.

இந்த நிலையில், அண்மையில் நூற்றுக்கும் மேற்பட்ட உள்ளூர் இளைஞர்கள் மற்றும் கிராமவாசிகள் படகுகளில் வந்து கச்சா எண்ணெய்யைத் திருட முயன்றுள்ளனர். இதற்காக அவர்கள் குழாயில் சட்டவிரோதமாக துளையிட்டபோது, மிக அதிக அழுத்தத்துடன் கச்சா எண்ணெய் மற்றும் கடுமையான நச்சுத்தன்மை வாய்ந்த விஷவாயு காற்றில் பரவியது.

நைஜீரியாவின் சுற்றுச்சூழல் அமைப்பான “யூத்ஸ் அண்ட் என்விரான்மெண்டல் அட்வொகேசி சென்டர்” வெளியிட்டுள்ள முதற்கட்ட தகவலின்படி 37 பேர் உயிரிழந்துள்ளதாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

BEHIND ME MEDIA




சீன விஞ்ஞானிகள் ஒரு ஆச்சரியமான விஷயத்தை சாதித்து இருக்காங்க.

மனித ஸ்டெம் செல்களில் இருந்து வளர்க்கப்பட்ட ஒரு மிகச் சிறிய மூளை போன்ற திசுவை வைத்து ஒரு ரோபோவை இயக்கி இருக்காங்க. இதற்கு பெயர் Brain Organoid.

வழக்கமா ரோபோக்கள் கம்ப்யூட்டர் சிப் மூலமா தான் இயங்கும். ஆனா இந்த புதிய முறையில், உயிருள்ள நரம்பு செல்களையும் எலக்ட்ரானிக் சிப்பையும் ஒன்றாக இணைச்சிருக்காங்க. அந்த சின்ன மூளை திசுவில் இருந்து வரும் சிக்னல்களை சிப் படித்து ரோபோவுக்கு அனுப்பும், ரோபோவின் அசைவுக்கு ஏற்ப மீண்டும் அந்த திசுவுக்கு தகவல் கொடுக்கும்.

ஆய்வகத்தில் நடந்த சோதனையில் இந்த ரோபோ, தானாகவே தடைகளை தாண்டுவது, பொருட்களை பிடிப்பது போன்ற சின்ன சின்ன வேலைகளை கற்றுக்கொண்டது. யாரோ Program பண்ணினது போல இல்லாமல், அனுபவத்தில் ,ருந்தே கற்றுக்கொள்கிறது என்பது தான் இதில் ஸ்பெஷல்.

இது முழுமையான மனித மூளை கிடையாது. ஆரம்ப நிலை மூளை வளர்ச்சியை போல செயல்படும் ஒரு சிறு நரம்பு செல்களின் கூட்டம் மட்டுமே. இன்னும் இது ஆய்வக சோதனை அளவில் தான் இருக்கிறது.

இருந்தாலும், எதிர்காலத்தில் மூளை - கம்ப்யூட்டர் இணைப்பு தொழில்நுட்பம், நரம்பியல் நோய்களுக்கான ஆராய்ச்சி, குறைந்த மின்சாரத்தில் இயங்கும் கம்ப்யூட்டர்கள் என பல துறைகளில் இது பெரிய மாற்றத்தை கொண்டு வரலாம் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். உயிரியல் அறிவும் செயற்கை தொழில்நுட்பமும் சேர்ந்தால் என்ன நடக்கும் என்பதற்கு இது ஒரு சிறந்த உதாரணம்.

## நேபாள வெள்ளம் - 2.56 பில்லியன் டொலர் சொத்துகளுக்கு சேதம்



கடந்த வாரம் நேபாளத்தில் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்கில் குறைந்தபட்சம் 2.56 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சொத்துக்கள், வீடுகள் மற்றும் உட்கட்டமைப்புகள் அழிவடைந்துள்ளதாக அந்நாட்டின் அனர்த்த முகாமைத்துவ அதிகாரசபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆரம்பக்கட்ட மீட்புப் பணிகளின் முதல் 4 மாதங்களில், வீதிகளை அமைப்பதற்கும், தற்காலிக முகாம்களைக் கட்டுவதற்கும், குடிநீர் வழங்குவதற்கும் மற்றும் மின்சாரத்தை சீரமைப்பதற்கும் மதிப்பிடப்பட்ட செலவு சுமார் 52.6 மில்லியன் டொலர்களாக இருக்கும் என தேசிய அனர்த்த முகாமைத்துவ அதிகார சபையின் தலைவர் தெரிவித்தார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுமார் 20,000 வீடுகளை நேபாளம் மீண்டும் கட்டியெழுப்ப வேண்டியிருக்கும் என்றும், அவற்றில் குறைந்தபட்சம் 7,500 வீடுகள் முற்றாக அழிவடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.




BEHIND ME MEDIA

# மறைமுக நன்கொடை சர்ச்சை: ரிஃபார்ம் யூகே கட்சியின் இரு மூத்த அதிகாரிகள் விலகல்?



சேனல் 4 நியூஸ் (Channel 4 News) வெளியிட்ட மறைமுக ஆய்வு அறிக்கையைத் தொடர்ந்து, ரி∴பார்ம் யூகே கட்சியின் தலைவர்களில் இருவர் தங்கள் பதவிகளிலிருந்து தற்காலிகமாக விலகியுள்ளனர். இது தொடர்பாக கட்சிக்குள் உள்கட்சி விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

நைஜல் ∴பராக்கின் (Nigel Farage) மூத்த உதவியாளர் டான் ஜுக்ஸ் (Dan Jukes) மற்றும் கட்சியின் கொள்கைப் பிரிவுத் தலைவர் ஜேம்ஸ் ஓர் (James Orr) ஆகிய இருவருமே உள்கட்சி விசாரணை நிறைவடையும் வரை பதவியிலிருந்து விலகியிருப்பதாகக் கட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணை "சுதந்திரமாகவும், எந்தவித சார்புமின்றியும் நடைபெற அனுமதிக்கப்பட வேண்டும்" என்றும், தற்போதைக்கு இது குறித்து வேறு கருத்துகள் எதுவும் தெரிவிக்கப்படமாட்டாது என்றும் ரி∴பார்ம் யூகே கட்சி கூறியுள்ளது. பர்மிங்காமில் நடைபெற்றுவரும் கட்சியின் முக்கிய மாநாட்டின் போதே இந்தச் சர்ச்சை உருவெடுத்துள்ளது.

ரகசியப் பதிவு மற்றும் குற்றச்சாட்டுகள்
வியாழக்கிழமை இரவு ஒளிபரப்பப்பட்ட சேனல் 4 அறிக்கையில், கட்சியின் மூத்த உதவியாளர் டான் ஜுக்ஸ், தேர்தல் சட்டங்களைத் தாண்டி £500,000 (5 லட்சம் பவுண்டுகள்) அளவிலான வெளிநாட்டு நன்கொடையைப் பெறுவதற்கான வழியொன்றைப் பரிந்துரைப்பது போன்ற ரகசியக் காணொளி காட்சிகள் இடம்பெற்றிருந்தன.

விசாரணைக் குழு: Centre for Climate Reporting அமைப்பின் பத்திரிகையாளர்களால் தொடங்கப்பட்ட ஏநசடியவைஅ Investigations என்ற அமைப்பினால் இந்த ரகசியப் பதிவு மேற்கொள்ளப்பட்டது.

சேனல் 4 நிலைப்பாடு: தங்களுக்குக் கிடைத்த ஆதாரங்களைச் சரிபார்த்த பின்னரே அவற்றை ஒளிபரப்பியதாக சேனல் 4 நியூஸ் தெரிவித்துள்ளது.

ரி∴பார்ம் யூகே மறுப்பு: கட்சி எந்தவொரு தவறான செயலிலும் ஈடுபடவில்லை என்றும், "வெளிநாட்டு நிதி உதவியுடன் இயங்கும் காலநிலை மாற்ற ஆர்வலர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு சதித் திட்டத்திற்குத் தங்களது கட்சி இலக்காகியுள்ளது" என்றும் கூறியுள்ளது.

# செம்மணியை நினைவுகூர்ந்து லண்டனில் 583 வெள்ளை விரிப்புகளுடன் அமைதிப் போராட்டம்!

கிருஷாந்தி குமாரசுவாமியின் 30ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் 583 மனித எச்சங்களை நினைவுகூரும் வகையில், லண்டனில் அமைதிப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.



செம்மணியை நினைவுகூர்ந்து லண்டனில் 583 வெள்ளை விரிப்புகளுடன் அமைதிப் போராட்டம்!
லண்டன் பிரிம்ரோஸ் ஹில் பூங்காவில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில், புலம்பெயர் தமிழர்களால் 583 வெள்ளைத் துணிகள் பயன்படுத்தப்பட்டு, அவற்றால் உடல்களை முழுமையாக மூடியவாறு பங்கேற்பாளர்கள் தரையில் படுத்திருந்தனர்.



1996ஆம் ஆண்டு செப்டம்பர் 7ஆம் திகதி பாடசாலை மாணவியான கிருஷாந்தி குமாரசுவாமி, செம்மணிச் சந்தியில் அமைந்திருந்த இராணுவ சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டு, பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றிருந்தது.

அந்த சம்பவத்தின் 30ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, தமிழர் இளைஞர் அமைப்பு, நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் உள்ளிட்ட பிரித்தானியாவில் இயங்கும் பல்வேறு தமிழ் அமைப்புகளின் ஏற்பாட்டில் இந்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.



செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட 583 மனித எச்சங்களை நினைவுகூரும் வகையில், 583 பேர் வெள்ளைத் துணிகளால் தங்களை மூடியபடி அமைதியாக படுத்திருந்த காட்சியானது, செம்மணி புதைகுழி தொடர்பான நினைவுகளை பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருந்தது.

# சதித்திட்டத் தாக்குதல் ரஷியர்களுக்கான விசாக்களைக் குறைக்குமாறு ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஜெர்மனி வலியுறுத்தல்

லைப்சிக் (Leipzig) விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்த முயன்றதாகக் கூறப்படும் வழக்கின் கீழ், இத்தாலியால் சுற்றுலா விசா வழங்கப்பட்ட பெலாரஸ் நாட்டவர் ஒருவர் விசாரிக்கப்பட்டு வருகிறார்.

பர்லினால் மாஸ்கோ மீது குற்றம் சாட்டப்பட்ட சமீபத்திய சதித்திட்டத் தாக்குதல்களுக்குப் பிறகு, சுற்றுலா விசாக்களில் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் நுழையும் ரஷிய குடிமக்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துமாறு ஜெர்மனி தனது ஐரோப்பிய பங்காளிகளை வலியுறுத்தி வருகிறது.

ட்ரோன்கள் மற்றும் வெடிபொருட்களைப் பயன்படுத்தி லைப்சிக் விமான நிலையத்தின் மீது தாக்குதல் நடத்த முயன்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில், ரஷிய கடவுச்சீட்டையும் (Passport) கொண்டுள்ள பெலாரஸ் நாட்டவர் ஒருவரை ஜெர்மன் அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.



பெலாரஸின் தலைநகரான மின்ஸ்கில் உள்ள இத்தாலிய தூதரகத்தால் வழங்கப்பட்ட சுற்றுலா விசா மூலம் இந்த நபர் ஷெங்கன் (Schengen) பகுதிக்குள் நுழைந்ததாகக் கூறப்படுகிறது. எனினும், அவர் இத்தாலிக்கு எப்போதுமே பயணம் செய்ததாகத் தெரியவில்லை என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ரஷியர்களுக்கு அதிக எண்ணிக்கையிலான விசாக்கள் வழங்கப்படுவதாக ஜெர்மனியின் வெளியுறவு அமைச்சகம் கவலை தெரிவித்துள்ளது.

"ஐரோப்பிய ஒன்றியத்தில் விடுமுறையைக் கழிப்பதற்காக ரஷிய குடிமக்களுக்கு வழங்கப்படும் விசாக்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உள்ளது" என்று அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

ரஷியர்களுக்கு பெருமளவில் விசாக்கள் வழங்கப்படுவது உக்ரைன் போர் தொடர்பான தடைகளின் நோக்கத்திற்கு எதிரானது என்றும், யார் எந்த நோக்கத்திற்காக ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் நுழைகிறார்கள் என்பதை அறிவது இதன் மூலம் சாத்தியமற்றதாகிறது என்றும் அரசாங்கத்திற்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Euractiv தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்திலேயே இத்தாலிதான் அதிக அளவிலான ஷெங்கன் விசாக்களை வழங்கியுள்ளது் ரஷியர்களிடமிருந்து வந்த அனைத்து விசா விண்ணப்பங்களில் முக்கால்வாசிப் பங்கு இத்தாலி, பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளுக்கே கிடைத்துள்ளன.

கடந்த ஆண்டில் மற்ற எந்த ஐரோப்பிய ஒன்றிய நாட்டையும் விட இத்தாலியே பெலாரஸ் நாட்டவர்களுக்கு அதிக விசாக்களை வழங்கியுள்ளது. மேலும், ரஷியாவின் உக்ரைன் மீதான முழு அளவிலான படையெடுப்பிற்குப் பிறகு இந்த எண்ணிக்கை வியத்தகு அளவில் அதிகரித்துள்ளது. இத்தாலிய செய்தித் தளமான டுமைமைநளவய பகுப்பாய்வு செய்த ஐரோப்பிய ஆணையத்தின் புள்ளிவிவரங்களின்படி, இத்தாலி 2021 இல் பெலாரஸ் குடிமக்களுக்கு 2,968 விசாக்களை மட்டுமே வழங்கியிருந்த நிலையில், கடந்த ஆண்டில் 50,709 விசாக்களை வழங்கியுள்ளது.

ரஷியாவிலும் இதே போன்றதொரு போக்கைக் காண முடிகிறது. ரஷிய குடிமக்களுக்கு வழங்கப்பட்ட இத்தாலிய விசாக்கள் 2021 இல் 63,894 ஆக இருந்து, போர் தீவிரமடைந்தபோதிலும் 2025 இல் 165,000 க்கும் அதிகமாக உயர்ந்து கிட்டத்தட்ட மூன்று மடங்காகியுள்ளது.

லைப்சிக் சதித்திட்டத்திற்கு பின்னால் ரஷிய உளவுத்துறை இருக்கக்கூடும் என்று தெரிவித்ததைத் தொடர்ந்து, கிரெம்ளினுக்கு (ரஷிய அரசு) பதிலடி கொடுப்பதற்கான நடவடிக்கைகளை ஜெர்மன் அரசாங்கம் இந்த வாரம் அறிவித்தது. பொன்னில் (Bonn) உள்ள ரஷிய துணைத்தூதரகத்தை மூடுவது, ரஷிய தூதரை வெளியுறவு அமைச்சகத்திற்கு வரவழைப்பது மற்றும் பால்டிக் கடலில் சட்டவிரோதமாக எண்ணெய் ஏற்றிச் செல்லும் ரஷியாவின் நிழல் கடற்படைக் கப்பல்களின் (shadow fleet) கண்காணிப்பை தீவிரப்படுத்துவது ஆகியவை இதில் அடங்கும்.

BEHIND ME MEDIA

CANADA
HUMANITY
• SINCE 2024 •
BEHIND ME
FOUNDATION

# மனிதநேயம் - Behind me foundation

வாழ்வாதாரத்தைத் தேடும் கரங்களை பலப்படுத்தும் நோக்கோடு கடந்த 2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது **மனிதநேயம் - Behind me foundation** நிறுவனம் தனிநபர்களுக்கும் பேரிடர்களால் நிலைகுலையும் மக்களுக்குமான சேவைகளைத் தொடர்ச்சியாக ஆற்றிவருகின்றது.

உதவிகள் தேவைப்படுவோர் **Behind me foundation** ஊடாக எம்மைத் தொடர்புகொள்ளும் பட்சத்தில் உங்களுக்கான தேவைகளை நாம் எமது ஊடகங்களின் வாயிலாக அறிவித்து தனி நபர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் ஊடாக உங்களுக்கான அனுசரணைகளைப் பெற்றுத் தருவோம்.



## எமது சேவைகள்

- உதவிகளை பெற்றவர்கள் - வழங்கியவர்கள் பணம் மற்றும் பொருள் விபரங்களின் வெளிப்படைத்தன்மை பேணப்படும்.
- உதவி தேவைப்படும் மக்கள் மற்றும் காரணங்கள்
- உதவிகளை வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள்
- உதவிகள் உரியவர்களைச் சென்றடைந்த உறுதிப்படுத்தல்கள்

எமது Behind me International Media
ஊடக வலையமைப்பில் பகிரப்படும்

## தொடர்புக்கு

இலங்கை - +94 76239 0159
இந்தியா - + 91 917632 3079
கனடா - + 437 688 3493
மின்னஞ்சல் - info@behindmemedia.com

BEHIND ME
FOUNDATION

உதவுவது நம் கடமை
மாற்றம் கொண்டுவருவது நம் குறிக்கோள்

நாம் இணைவோம்... பலரை உயர்வோம்...




# உலக வரைபடத்தில் மாற்றம்: 164 நாடுகள் ஆதரவு

ஆபிரிக்கா மற்றும் பிற நில நடுக்கோட்டுப் பிரதேசங்களின் தோற்றத்தை வழக்கமான உலக வரைபடங்கள் தவறாகப் பிரதிபலிப்பதாக வாதிட்டு, ஆபிரிக்க யூனியன் (African Union) சார்பில் டோகோ (Togo) நாடு இந்த முன்னெடுப்புக்குத் தலைமை தாங்கியது.

பள்ளிகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் டிஜிட்டல் தளங்களில் உலகின் கண்டங்களை மிகவும் துல்லியமாகப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் பொதுச் சபை (UN General Assembly) ஏற்றுக்கொண்டுள்ளது. இந்த மாற்றம் உலக வரைபடங்கள் காண்பிக்கப்படும் முறையையே மாற்றக்கூடும்.

செப்டம்பர் 4 ஆம் திகதி நிறைவேற்றப் பட்ட இந்தத் தீர்மானத்திற்கு 164 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. ஒரு நாடு எதிர்த்து வாக்களித்ததுடன், 6 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலை வகித்தன. பரவலாகப் பயன்பாட்டில் உள்ள மெர்கேட்டர் (Mercator) கணிப்பு முறைக்குப் பதிலாக, ஈக்குவல் எர்த் (Equal Earth) கணிப்பு முறையைப் பயன்படுத்துவதை இத்தீர்மானம் ஊக்குவிக்கிறது.




ஐக்கிய அமெரிக்க நாடுகள் மட்டுமே இத்தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்த ஒரே நாடாகும்.

பிளெமிஷ் நிலவரைபட வல்லுநரான கொரார்டஸ் மெர்கேட்டரால் 1569ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட மெர்கேட்டர் கணிப்பு முறை, முதன்மையாகக் கடல் வழிப் பயணங்களுக்காகவே வடிவமைக்கப்பட்டது. இருப்பினும், இது நிலநடுக்கோட்டிலிருந்து தொலைவில் உள்ள நிலப்பகுதிகளின் தோற்ற அளவை மிகைப்படுத்திக் காட்டுகிறது.

உதாரணமாக, மெர்கேட்டர் வரைபடத்தில் கிரீன்லாந்து (Greenland) நாடானது ஆப்பிரிக்காவிற்கு நிகரான அளவில் தோற்றமளிக்கலாம்.

ஆனால், உண்மையான நிலப்பரப்பளவில் ஆப்பிரிக்கா கிரீன்லாந்தை விட சுமார் 14 மடங்கு பெரியதாகும்.

கண்டங்களின் ஒப்புமைப் பரப்பளவை மிகவும் துல்லியமாகப் பாதுகாப்பதற்காக 2018ஆம் ஆண்டில் ஈக்குவல் எர்த் கணிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. நிலப்பரப்பின் துல்லியமான பிரதிநிதித் துவம் அவசியமான இடங்களில், ஈக்குவல் எர்த் அல்லது பிற சம-பரப்பு (Equal-area) கணிப்பு முறைகளைப் பயன்படுத்துமாறு அரசாங்கங்கள், கல்வி நிறுவனங்கள், சர்வதேச அமைப்புகள் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களை ஐ.நா. தீர்மானம் ஊக்குவிக்கிறது.

இந்தத் தீர்மானம் மெர்கேட்டர் கணிப்பு முறையைத் தடை செய்யவோ அல்லது ஒரே ஒரு வரைபடத்தை மட்டுமே கட்டாயப்படுத்தவோ இல்லை. சில வழிசெலுத்தல் தேவைகளுக்கு மெர்கேட்டர் தொடர்ந்து பயனுள்ள தாகவும் இருக்கும்.

இதற்கிடையில், பிரான்ஸ் நாடு தனது வெளிவிவகார அமைச்சகம் மெர்கேட்டர் முறையிலிருந்து விலகி, கண்டங்களின் பரப்பளவை இன்னும் துல்லியமாகப் பிரதிநிதித்துவப்படுத்தும் எக்கர்ட் ஐஏ (Eckert IV) கணிப்பு முறையை ஏற்கும் என்று தனித்தனியாக அறிவித்துள்ளது.

# இந்த வாரம்



BEHIND ME MEDIA



## 8-9-2026


தேவ மாதா பிறந்த நாள்


பிரதோஷம்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 பாத்ரபதம் 17
சிவ வழிபாட்டுக்கு சிறப்பானதும், சுபகாரியம் மற்றும் பரிகாரம் செய்ய ஏற்ற பிரதோஷ தினம் இன்று.
துவாதசி மா.02.28 வரை, பின்பு திரயோதசி - பூசம் மா.05.11 வரை, பின்பு ஆயில்யம்.

ஸ்ரீ பராபவ ஆவணி 22 | SEP - TUE செவ்வாய் | ரபிஉல் அவ்வல் 25 | தேய்பிறை 251 / 114

தேய். துவாதசி 21.01 (மா. 02.28) பூசம் 27.47 (மா. 05.11) தியாஜ் 58.20 சித்த யோகம். **பிரதோஷம். தேவமாதா பிறந்தநாள்.** மதுரை ஸ்ரீநவநீத கிருஷ்ணசுவாமி ரெங்கநாதன் திருக்கோலம். மாலை வெண்ணெய்த்தாழி ஸேவை. இரவு கெருட வாகனத்தில் ராஜாங்க ஸேவை. சிறிய நகசு.

| நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 7.45-8.45 | 10.45-11.45 | 03.00 | 12.00 | 09.00 |
| மாலை: 4.45-5.45 | 7.30-8.30 | 04.30 | 01.30 | 10.30 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்
சிம்ம லக்கனம் இருப்பு நா. 1 வி. 42
சந்திராஷ்டமம்: பூராடம், உத்திராடம்
கரணம் : 7.30-9; சூரிய உதயம் : 6.04

| | | | |
|---|---|---|---|
| சனி | | | செ |
| ரா | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | | வி |
| | | | சூ கே |
| | | சு | பு |

மேல் ↑ — திதி: திதித்துவயம்

**ஊதாரி தன் எதிர்காலத்தை கொள்ளையடிக்கிறான்**

இராசிபலன்:
மேஷம் - பக்தி
ரிஷபம் - லாபம்
மிதுனம் - களிப்பு
கடகம் - யோகம்
சிம்மம் - ஆர்வம்
கன்னி - பயம்
துலாம் - சுகம்
விருச்சி - செலவு
தனுசு - நன்மை
மகரம் - பொறுமை
கும்பம் - ஆதாயம்
மீனம் - நிம்மதி





## 9-9-26


மாத சிவராத்திரி

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 பாத்ரபதம் 18
சிவலிங்கத்தை வழிபட்டு, வில்வ இலை சாற்றி, சிவ மந்திரம் உச்சரிக்கும் உன்னத மாத சிவராத்திரி இன்று.
திரயோதசி மா.12.33 வரை, பின்பு சதுர்த்தசி - ஆயில்யம் மா.04.03 வரை, பின்பு மகம்.

ஸ்ரீ பராபவ ஆவணி 23 | SEP - WED புதன் | ரபிஉல் அவ்வல் 26 | தேய்பிறை 252 / 113

தேய்.திரயோதசி 16.13 (மா.12.33) ஆயில்யம் 24.57 (மா.04.03) தியாஜ் 02.20, 53.55 சித்த யோகம். **மாத சிவராத்திரி.** திருவல்லிக்கேணி பார்த்தசாரதிப் பெருமாள் கோவிலில் ஸ்ரீநரசிம்மர் மூலவருக்கு அலங்காரத் திருமஞ்சன ஸேவை. திருச்செந்தூர் முருகப் பெருமான் ரதோத்ஸவம். நகசு.

| நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 9.15-10.15 | 10.45-11.45 | 12.00 | 10.30 | 07.30 |
| மாலை: 4.45-5.45 | 6.30-7.30 | 01.30 | 12.00 | 09.00 |

சூலம் : வடக்கு; பரிகாரம் : பால்
சிம்ம லக்கனம் இருப்பு நா. 1 வி. 31
சந்திராஷ்டமம்: உத்திராடம், திருவோணம்
கரணம் : 6-7.30; சூரிய உதயம் : 6.04

| | | | |
|---|---|---|---|
| சனி | | | செ |
| ரா | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | | வி |
| | | | சூ கே |
| | | சு | பு |

கீழ் ↓ — திதி: சதுர்த்தசி

**பக்தியோடு பிரார்த்தனை செய், முயற்சியை கைவிடாதே**

இராசிபலன்:
மேஷம் - மகிழ்ச்சி
ரிஷபம் - எதிர்ப்பு
மிதுனம் - சோதனை
கடகம் - இன்பம்
சிம்மம் - அச்சம்
கன்னி - பரிவு
துலாம் - தேர்ச்சி
விருச்சி - நிம்மதி
தனுசு - நிறைவு
மகரம் - ஏமாற்றம்
கும்பம் - மேன்மை
மீனம் - வெற்றி

## 10-9-26

அமாவாசை


சர்வ அமாவாஸ்யை

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். கிருஷ்ண பட்சம். சக 1948 பாத்ரபதம் 19
முன்னோர்களின் ஆசியையும், குடும்ப செழிப்பையும், ஆரோக்கியத்தையும் அருளும் சர்வ அமாவாசை இன்று.
சதுர்த்தசி கா.10.56 வரை, பின்பு அமாவாசை - மகம் மா.03.14 வரை, பின்பு பூரம்.

ஸ்ரீ பராபவ ஆவணி 24 | SEP - THU வியாழன் | ரபிஉல் அவ்வல் 27 | அமாவாசை 253 / 112

தேய். சதுர்த்தசி 12.10 (கா. 10.56) மகம் 22.56 (மா. 03.14) தியாஜ் 42.35 அமிர்த 22.56 மேல் சித்த யோகம். **சர்வ அமாவாசை.** மதுரை ஸ்ரீநவநீத கிருஷ்ணஸ்வாமி ஆண்டாள் அலங்காரம். மாலை புன்னமர கிருஷ்ண அலங்காரம். இரவு புஷ்ப தண்டியலில் தவழும் கண்ணன் திருக்கோலம்.

| நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை 10.45-11.45 | ------------ | 01.30 | 09.00 | 06.00 |
| மாலை: 12.15-1.15 | 6.30-7.30 | 03.00 | 10.30 | 07.30 |

சூலம் : தெற்கு; பரிகாரம் : தைலம்
சிம்ம லக்கனம் இருப்பு நா. 1 வி. 21
சந்திராஷ்டமம்: திருவோணம், அவிட்டம்
கரணம் : 3-4.30; சூரிய உதயம் : 6.04

| | | | |
|---|---|---|---|
| சனி | | | செ |
| ரா | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | | வி |
| | | | சூ கே |
| | | சு | பு |

கீழ் ↓ — திதி: அமாவாஸ்யை

**தூக்கம் வந்துவிட்டால் தலையணை தேவை இல்லை**

இராசிபலன்:
மேஷம் - சாதனை
ரிஷபம் - நலம்
மிதுனம் - நிறைவு
கடகம் - நன்மை
சிம்மம் - நற்செயல்
கன்னி - மேன்மை
துலாம் - உயர்வு
விருச்சி - வெற்றி
தனுசு - ஆதாயம்
மகரம் - லாபம்
கும்பம் - குழப்பம்
மீனம் - சாந்தம்

## 11-9-2026

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். சுக்ல பட்சம். சக 1948 பாத்ரபதம் 20
பிரதமை திதி, அமாவாசை அடுத்த நாள், புதிய முயர்சிகள் மற்றும் தொடக்கங்களுக்கு ஏற்ற நாள்.
அமாவாசை கா.09.40 வரை, பின்பு பிரதமை - பூரம் மா.02.47 வரை, பின்பு உத்திரம்.

ஸ்ரீ பராபவ ஆவணி 25 | SEP - FRI வெள்ளி | ரபிஉல் அவ்வல் 28 | வளர்பிறை 254 / 111

அமாவாசை 09.01 (கா. 09.40) பூரம் 21.47 (மா. 02.47) தியாஜ் 39.52 சித்த யோகம். இஷ்டி காலம். பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பகவிநாயகர் மயில் வாகன திருவீதியுலா. உப்பூர் ஸ்ரீவிநாயகப் பெருமான் காமதேனு வாகன பவனி. ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீஆண்டாள் புறப்பாடு.

| நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 9.15-10.15 | 12.15-1.15 | 10.30 | 07.30 | 03.00 |
| மாலை: 4.45-5.45 | 6.30-7.30 | 12.00 | 09.00 | 04.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்
சிம்ம லக்கனம் இருப்பு நா. 1 வி. 11
சந்திராஷ்டமம்: அவிட்டம், சதயம்
கரணம் : 1.30-3; சூரிய உதயம் : 6.04

| | | | |
|---|---|---|---|
| சனி | | | செ |
| ரா | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | | வி |
| | | | சூ கே |
| | | சு | பு |

கீழ் ↓ — திதி: பிரதமை

**புகழை வெறுப்பவனுக்கு புகழ் தானாக வந்து சேரும்**

இராசிபலன்:
மேஷம் - தெளிவு
ரிஷபம் - விவேகம்
மிதுனம் - சிக்கல்
கடகம் - பெருமை
சிம்மம் - நிறைவு
கன்னி - பொறாமை
துலாம் - களிப்பு
விருச்சி - புகழ்
தனுசு - விருத்தி
மகரம் - செலவு
கும்பம் - வெற்றி
மீனம் - ஆக்கம்

## 12-9-2026

சந்திர தரிசனம்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். சுக்ல பட்சம். சக 1948 பாத்ரபதம் 21
வளர்பிறை மூன்றாம் நாள் மாலையில் தென்படும் பிறை சந்திரனை தரிசிப்பது சந்திர தரிசனம் இன்று.
பிரதமை கா.08.51 வரை, பின்பு துவிதியை - உத்திரம் மா.02.47 வரை, பின்பு ஹஸ்தம்.

ஸ்ரீ பராபவ ஆவணி 26 | SEP - SAT சனி | ரபிஉல் அவ்வல் 29 | வளர்பிறை 255 / 110

வளர். பிரதமை 06.58 (கா. 08.51) உத்திரம் 21.48 (மா. 02.47) தியாஜ் 43.15 மரண யோகம். **சந்திர தரிசனம்.** தேரெழுந்தூர், திண்டுக்கல், மிலட்டூர், திருவலஞ்சுழி இத்தலங்களில் ஸ்ரீவிநாயகப் பெருமான் பவனி வரும் காட்சி. மதுரை தெற்கு வாசல் முகையதீன் ஆண்டவர் கொடியேற்றம்.

| நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 7.45-8.45 | 10.45-11.45 | 09.00 | 06.00 | 01.30 |
| மாலை: 4.45-5.45 | 9.30-10.30 | 10.30 | 07.30 | 03.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்
சிம்ம லக்கனம் இருப்பு நா. 1 வி. 01
சந்திராஷ்டமம்: சதயம், பூரட்டாதி
கரணம் : 12-1.30; சூரிய உதயம் : 6.04

| | | | |
|---|---|---|---|
| சனி | | | செ |
| ரா | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | | வி |
| | | | சூ கே |
| | | சு | பு |

மேல் ↑ — திதி: துவிதியை

**அடிமை போல உழை, அரசனை போல உண்.**

இராசிபலன்:
மேஷம் - பயணம்
ரிஷபம் - நன்மை
மிதுனம் - ஆதாயம்
கடகம் - செலவு
சிம்மம் - மேன்மை
கன்னி - விவேகம்
துலாம் - பொறுமை
விருச்சி - நிம்மதி
தனுசு - தெளிவு
மகரம் - சுபம்
கும்பம் - உயர்வு
மீனம் - பாராட்டு

## 13-9-26


சுபமுகூர்த்தம்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். சுக்ல பட்சம். சக 1948 பாத்ரபதம் 22
அனைத்து சுப காரியங்களுக்கு ஏற்ற, சுப முகூர்த்தம் மற்றும் சுப துவக்கங்களுக்கு ஏற்ற நன்னாள் இன்று.
துவிதியை கா.08.29 வரை, பின்பு திரிதியை - ஹஸ்தம் மா.03.15 வரை, பின்பு சித்திரை.

ஸ்ரீ பராபவ ஆவணி 27 | SEP - SUN ஞாயிறு | ரபிஉல்ஆகிர் 1 | வளர்பிறை 256 / 109

வளர். துவிதியை 06.06 (கா. 08.29) ஹஸ்தம் 22.59 (மா.03.15) தியாஜ் 43.50 அமிர்த22.59 மேல் சித்தயோகம். **சுபமுகூர்த்தம்.** ஸாமோபாகர்மம். கல்கி ஜெயந்தி. தாமஸமன்வாதி. பிள்ளையார்பட்டி ஸ்ரீகற்பக விநாயகர் மாலை திருத்தேரில் வீதியுலா சந்தனக்காப்பு. இரவு யானை வாகனம். பெரிய நகசு.

| நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 7.45-8.45 | 10.45-11.45 | 04.30 | 03.00 | 12.00 |
| மாலை: 3.15-4.15 | 1.30-2.30 | 06.00 | 04.30 | 01.30 |

சூலம் : மேற்கு; பரிகாரம் : வெல்லம்
சிம்ம லக்கனம் இருப்பு நா. 0 வி. 51
சந்திராஷ்டமம்: பூரட்டாதி, உத்திரட்டாதி
கரணம் : 10.30-12; சூரிய உதயம் : 6.03

| | | | |
|---|---|---|---|
| சனி | | | செ |
| ரா | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | | வி |
| | | | சூ கே |
| | | சு | பு |

சம ↔ — திதி: திரிதியை

**கரண்டி இல்லாதவன் கையை சுட்டுக்கொள்வான்**

இராசிபலன்:
மேஷம் - சுகம்
ரிஷபம் - மகிழ்ச்சி
மிதுனம் - நன்மை
கடகம் - லாபம்
சிம்மம் - பொறாமை
கன்னி - புகழ்
துலாம் - நட்பு
விருச்சி - வெற்றி
தனுசு - உற்சாகம்
மகரம் - நிறைவு
கும்பம் - திடம்
மீனம் - சலனம்

## 14-9-2026

அரசு விடுமுறை

கரிநாள்


ஸ்ரீவிநாயகர் சதுர்த்தி


சதுர்த்தி விரதம்

தட்சிணாயனம். வருஷ ருது. கார் காலம். சிம்மம் மாதம். சுக்ல பட்சம். சக 1948 பாத்ரபதம் 23
ஆவணி வளர்பிறை சதுர்த்தி - தடை நீக்கி, செல்வம், நலம் அருளும் ஸ்ரீவிநாயகர் சதுர்த்தி இன்று.
திரிதியை கா.08.40 வரை, பின்பு சதுர்த்தி - சித்திரை மா.04.12 வரை, பின்பு சுவாதி.

ஸ்ரீ பராபவ ஆவணி 28 | SEP - MON திங்கள் | ரபிஉல்ஆகிர் 2 | வளர்பிறை 257 / 108

வளர். திரிதியை 06.33 (கா. 08.40) சித்திரை 25.23 (மா. 04.12) தியாஜ் 40.20 சித்த 25.23 மேல் அமிர்தயோகம். பிள்ளையார்பட்டி ஸ்ரீவிநாயகர் தீர்த்தவாரி. **ஸ்ரீவிநாயகர் சதுர்த்தி. சதுர்த்தி விரதம். அரசுவிடுமுறை. கரிநாள்.** தேவக்கோட்டை, திண்டுக்கல், மிலட்டூர், உப்பூர் ஸ்ரீவிநாயகர் தீர்த்தவாரி.

| நல்லநேரம் | கௌ.ந.நெ. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|
| காலை: 6.15-7.15 | 9.15-10.15 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை: 4.45-5.45 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர்
சிம்ம லக்கனம் இருப்பு நா. 0 வி. 41
சந்திராஷ்டமம்: உத்திரட்டாதி, ரேவதி
கரணம் : 9-10.30; சூரிய உதயம் : 6.03

| | | | |
|---|---|---|---|
| சனி | | | செ |
| ரா | 1 சிம்-புத 15 துலா-சுக் 17 கன்-புத | | வி |
| | | | சூ கே |
| | | சு | பு |

சம ↔ — திதி: சதுர்த்தி

**அன்பினால் சிங்கத்தின் மீசையை பிடுங்க முடியாது**

இராசிபலன்:
மேஷம் - நன்மை
ரிஷபம் - செலவு
மிதுனம் - ஆதாயம்
கடகம் - ஓய்வு
சிம்மம் - சிந்தனை
கன்னி - சிரமம்
துலாம் - தாமதம்
விருச்சி - பயம்
தனுசு - எதிர்ப்பு
மகரம் - சினம்
கும்பம் - மேன்மை
மீனம் - லாபம்

# இந்தியச் செய்திகள்

BEHIND ME MEDIA

## முதல்வர் விஜய் குறித்து அவதூறு பதிவு: தொழிலதிபர் கைது

ஆண்களுக்கும் பெண்களுக்கும் தேவையான அந்தரங்கப் பொருட்களை விற்பனை செய்யும் "காமகாரட் இந்தியா", "விண்ட்ராக இங்க", "விண்ட் ராக்ஸ்பேஸஸ்" மற்றும் சீனாவில் 24 செட்டியார் க.்.பே ஆகிய நிறுவனங்களை நடத்தி வருபவர் தொழிலதிபர் பிரவீன் கணேசன (35). இவர் கடந்த ஜூன் மாதம் சீனாவில் இருந்தபோது, முதல்வர் விஜய் குறித்து சர்ச்சைக்குரிய விளம்பரம் ஒன்றைப் பதிவிட்டதாகக் கூறப்படுகிறது.

சமூக வலைதளங்களில் இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியதைத் தொடர்ந்து, அந்தப் பதிவை அவர் நீக்கினார். இது தொடர்பாக சமூக ஆர்வலர் ஒருவர் அளித்த புகாரின் அடிப்படையில், சென்னை தெற்கு மண்டல சைபர் க்ரைம் காவல் ஆய்வாளர் சுஜாதா தலைமையிலான போலீஸார் வழக்குப் பதிவு செய்தனர். இதையடுத்து, சென்னை காவல் ஆணை ஆணையர் அமல்ராஜ் உத்தரவின் பேரில், பிரவீன் கணேசனுக்கு எதிராக "லுக் அவுட்" நோட்டீஸ் பிறப்பிக்கப் பட்டு அனைத்து விமான நிலைய ங்களுக்கும் அனுப்பப்பட்டது.

இந்நிலையில், நேற்று அதி காலை ஹாங்காங்கிலிருந்து டெல்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்துக்கு பிரவீன் கணேசன் வந்திறங்கினார். அங்குள்ள குடியுரிமை அதிகாரி கள் அவரது பாஸ்போர்ட்டைச் சோதித்தபோது, அவருக்கு எதிராக லுக் அவுட் நோட்டீஸ் இருப்பதை அறிந்து அவரைத் தடுத்து நிறுத்தினர். உடனே தகவலறிந்து, சென்னை சைபர் க்ரைம் காவல் ஆய்வாளர் (பொறுப்பு) துர்கா தலைமை யிலான போலீஸார் டெல்லி விரைந்தனர்.

சென்னை வந்தார்: அங்கு பிரவீனை கைது செய்த போலீஸார் அங்குள்ள நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, அவரை சென்னைக்கு அழைத்து வர "டிரான்சிட் வாரண்ட்" பெற்றனர். நேற்று இரவு அவர் சென்னைக்கு அழைத்து வரப்பட்டார். இதையடுத்து, அவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்டு சிறையில் அடைக்கப் படுவார் என எதிர்பார்க்கப் படுகிறது.

## வஉசி பிறந்த நாளை வழக்கறிஞர்கள் தினமாக அறிவிக்க வேண்டும்

சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனாரின் பிறந்த நாளை வழக்கறிஞர் தினமாக அறிவிக்க வேண்டும் என அவரது கொள்ளுப் பேத்தி செல்வி கோரிக்கை விடுத் துள்ளார்.

சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனாரின் 155 - வது பிறந்த நாளை முன்னிட்டு கோவில்பட்டியில் உள்ள அவரது கொள்ளுப்பேத்தியும், கோவில்பட்டி கல்வி மாவட்ட அலுவலருமான உ.செல்வி தனது வீட்டில், நேற்று காலை வ.உ.சி.யின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறும்போது, "கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் பிறந்த நாளை வழக்கறிஞர் தினமாக அறிவிக்க வேண்டும். இது எங்கள் குடும்பம் மற்றும் வழக்கறிஞர்களின் நீண்ட கால கோரிக்கையாகும். அவர் பிறந்த இல்லம் உள்ள ஓட்டப் பிடாரத்தில் வஉசிக்கு பிரம்மாண்ட மணிமண்டபம் அமைக்க வேண்டும்.

## சென்னையில் இரண்டாவது விமான நிலையம்?



சென்னை: சென்னையில் 2-வது விமான நிலையம் அமைக்க பரந்தூர் திட்டம் கைவிடப்பட்ட நிலையில், செய்யூர் மற்றும் கும்மிடிப்பூண்டி ஆகிய பகுதிகளை அரசு தேர்வு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

சென்னை மீனம்பாக்கத்தில் சர்வதேச விமான நிலையம் நூற்றாண்டை கடந்து இன்றும் செயல்பாட்டில் இருந்து வருகிறது. தினசரி 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமான சேவையைப் பயன்படுத்தி வருகின்றனர். பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், கடந்த சில ஆண்டுகளாக மீனம்பாக்கம் விமான நிலையம் இடநெருக்கடியைச் சந்தித்து வருகிறது.

இதன் காரணமாகப் புதிய சர்வதேச விமான நிலையம் கட்டுவதற்குக் கடந்த ஆட்சியில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பரந்தூர் இடம் தேர்வு செய்யப்பட்டது. அதற்கு மத்திய அரசும் ஒப்புதல் அளித்தது. அதற்காக 90 சதவீதம் வரை நிலமும் கையகப்படுத்தப்பட்டது. ஆனால், விமான நிலையம் அமைக்க எதிர்ப்பு தெரிவித்து கடந்த ஆண்டு பரந்தூர் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களைத் தவெக தலைவர் விஜய் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்தார்.

## அண்ணாமலையார் கோயிலில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு பக்தர் உயிரிழப்பு



திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தினசரி ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். விடுமுறை நாட்களில் வழக்கத்தைவிட அதிக அளவில் பக்தர்கள் வருகை தந்து சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். இதனால், விடுமுறை தினங்களில் கோயிலில் பக்தர்கள் கூட்டம் அலைமோதுகிறது.

வார விடுமுறை தினத்தையொட்டி காலை முதலே பக்தர்கள் வருகை அதிகரித்துக் காணப்பட்டது. பக்தர்கள் வருகை படிப்படியாக அதிகரித்து கோயிலில் கூட்டம் அலைமோதியது. இதனால், சுவாமி தரிசனம் செய்ய பொது தரிசனம் மற்றும் கட்டண தரிசன வரிசைகளில் பக்தர்கள் நீண்ட வரிசையில் சுமார் 3 மணி நேரம் காத்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர்.

இந்நிலையில், அண்ணாமலையார் கோயிலில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற அபிஷேகத்தில், சென்னையைச் சேர்ந்த ரவிசங்கர் (68) என்பவர் தனது குடும்பத்தினருடன் பங்கேற்றார். அப்போது கூட்டம் அதிகமாக இருந்த நிலையில் அவருக்கு மூச்சுத்தினறல் ஏற்பட்டதாக தெரிகிறது. இதனால் அவர் மயக்கமடைந்தார். அவரை மீட்டு கோயில் வளாகத்தில் உள்ள மருத்துவ சிகிச்சை மையத்தில் முதலுதவி அளிக்கப்பட்டுள்ளது.

பின்னர், மேல்சிகிச்சைக்காக திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றனர். அங்கு அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் ரவிசங்கர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து, அண்ணாமலையார் கோயிலில் அபிஷேகத்துக்கு

பக்தர்களை கூடுதலாக அனுமதிப்பதை தடுக்கவும், கோயிலில் பக்தர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை கூடுதலாக்கவும் கோரிக்கை எழுந்துள்ளது.

## தேமுதிகவுக்கு தமிழக மக்கள் அங்கீகாரம் தரவில்லை

தேமுதிகவுக்கு 25 ஆண்டுகளாக மக்கள் அங்கீகாரம் தரவில்லை என கிருஷ்ணகிரியில் அக்கட்சியின் இளைஞர் அணி மாநிலச் செயலாளர் விஜயபிரபாகரன் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் மேலும் கூறியதாவது: தவெக அரசு, தற்போது பரந்தூர் விமான நிலையம் அமைத்தால் விளைநிலங்கள் பாதிக்கப்படும் எனக் கூறி, திட்டத்தை ரத்து செய்து வேறு இடத்துக்கு மாற்ற உள்ளனர். ஆனால், தற்போது செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் புதிய விமானநிலையம் அமைக்க தமிழக அரசு, மத்திய அரசுக்குப் பரிந்துரைக் கடிதம் அனுப்பியுள்ளது.

அப்போது அங்குள்ள விளைநிலங்கள் பாதிக்கப்படாதா, ஏற்கெனவே பரந்தூரில் 40 சதவீதம் நிலத்தை அரசு கையகப்படுத்தியுள்ள நிலையில், அந்த நிலத்தை வழங்கிய விவசாயிகள் என்ன ஏமாளிகளா. இவ்வாறு அவர் பேசினார்.

## "தமிழகத்தில் பிறந்து, வளர்ந்து தமிழ் தெரியாது என்று சொல்வது அவமானம்"

விழுப்புரம்: "தமிழகத்தில் பிறந்து, வளர்ந்து தமிழ் தெரியாது என்று சொல்வது போன்ற அவமானம் வேறு ஏதும் இல்லை. தமிழ் மொழி எல்லோரையும் வாழ வைக்கும். தமிழ் மொழி எந்த நேரத்திலும் உங்களை வீழ்த்தாது" என சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் தெரிவித்தார்.

விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரியில் 2-வது பட்டமளிப்பு விழா இன்று (செப்.5) நடைபெற்றது. கல்லூரி முதல்வர் கிருஷ்ணலீலா வரவேற்றார். சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி என்.ஆனந்த் வெங்கடேஷ் சிறப்புரையாற்றினார்.

அப்போது அவர் பேசியது: "ஆசிரியர் தின விழாவில் ஆசிரியர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துகள். வழக்கறிஞர் என்ற கம்பீரமான தொழிலுக்குள் அதிகாரபூர்வமாக கால் பதிக்கும் தகுதியூட்டும் நாள் இது. உங்கள் வாழ்க்கை பாதையில் ஏதோ ஒரு வகையில் உதவி புரிந்தவர்களுக் கும், நல் உள்ளங்களுக்கும் இந்த நாளை காணிக்கையாக்க வேண்டும் என விரும்புகிறேன். நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும், வெற்றி என நினைக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்.

வாழ்க்கையில் நன்றி விசுவாச த்துடன் இருப்பது முக்கியம். மற்றவர் உதவி இல்லாமல் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. உலகத்துக்குள் வரும்போதும், உலகத்தைவிட்டு செல்லும்போது என இரண்டு இடங்களில் மட்டும் மனிதன் தனியாக இருக்கின்றான். இடைப்பட்ட காலத்தில் மனிதன் எதனை அடைய வேண்டும் என்றாலும், மற்றவர்கள் துணை இல்லாமல் அடைய முடியாது.

சமூக வலைதளங்களால் நமது நேரத்தை இழக்கிறோம். புத்தகங்களை வாசிக்கும்போது, பக்கத்தை திருப்புவதன்மூலம் இடைவெளி வருகிறது. ஆனால் சமூக வலைதளங்களில் இடைவெளி இல்லை. என்று நான் இசை அமைப்பது நின்று விடுகிறதோ, அன்று எனது மூச்சு நின்றுவிடும் என்கிறார் இளையராஜா.

சமூக வலைதளங்களால் நமது நேரத்தை இழக்கிறோம். புத்தகங்களை வாசிக்கும்போது, பக்கத்தை திருப்புவதன்மூலம் இடைவெளி வருகிறது. ஆனால் சமூக வலைதளங்களில் இடைவெளி இல்லை. என்று நான் இசை அமைப்பது நின்று விடுகிறதோ, அன்று எனது மூச்சு நின்றுவிடும் என்கிறார் இளையராஜா. எனக்கு சட்டம் உயிர், பாட்டு பைத்தியம், விளையாட்டு, உடல் ஆரோக்கியம் எனக்கு மிகவும் பிடிக்கும். எழுதுவதும், மாணவர்களின் முகத்தை பார்த்து பேசுவதும் பிடிக்கும். இவை எல்லாம் பிடிக்கிறதால், நேரம் என்னுடன் இருக்கிறது. நேரமின்மை என்பது பிடிக்காமல் செய்யும் செயலால் ஏற்படுகிறது. பிடித்து ஒரு தொழிலை எடுத்து நடத்தினால் எந்த விதமான தடை கல்லையும் அசாதாரணமாக தாண்டி விட முடியும்.

எத்தனை பேர் தினசரி உடற் பயிற்சி, நடை பயிற்சி, விளை யாட்டில் ஈடுபடுத்திக் கொள் கிறீர்கள்? சமூக ஊடகங் களை தாண்டி புத்தகங்களை வாசிப்ப திலும், இலக்கிய உலகிலும் ஆர்வம் காட்டுகிறீர்கள்? எத்தனை பேருக்கு பாடுவது, ஆடுவது, வரைவது என ஈடுபாடு உள்ளீர்கள்? திரை உலகம், சமூக வலைதளத்தில் மூழ்கி விடாமல் மனிதர்களுடன் ஆழ மான உறவுகளை வளர்த்துக் கொள்ள எத்தனை பேர் ஆசைப்படுகிறீர்கள்? இந்தக் கேள்விகளுக்கான விடையை நீங்களே கேட்டுக் கொள் ளுங்கள்.

முதல் மூன்று கேள்விகளை விட 4-வது கேள்வி மிக முக்கியம். ஸ்கிரீன் உள்ளே இருக்கும் ஒருவர் கூட நம்முடன் வர மாட்டார்கள். அருகில் நம்முடன் இருக்கும் உறவுகள்தான் வரும். சட்டப் புத்தகங்களை மட்டும் படித்துவிட்டு நீதிமன்றத்தின் உள்ளே வாழும் இயந்திரங்களாக நீங்கள் இருக்கக் கூடாது என்பதற்காக கேட்கிறேன். அப்புறம் உங்களுக்கும், செல்போனுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். நாமும் ஜடமாகிவிடும். நம்முடன் மிகப் பெரிய ஆன்மா இருப்பதால் ஜட பொருளாகிவிடக் கூடாது.

நான், வாரத்தில் 6 நாள் உடற்பயிற்சி கூடத்துக்கு சென்றுவிடுவேன். நீதிபதியாக இல்லை என்றால் உடற்பயிற்சி கூட பயிற்றுநராக இருந்திருப்பேன். நான் எதை கடைபிடிக்கிறேனோ, அதனை உங்களிடம் சொல்லி இருக்கிறேன்.

தாய்மொழிப் பற்று முக்கியம். தமிழனாக பிறந்ததற்கு பெருமைப்பட வேண்டும். 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்ற பாரதி சொல்லியதை மேடையில் பேசுவதால் பயன் இல்லை. எனக்கு மொழி வெறி உண்டு. நம்முடைய தமிழ் மொழி மிகவும் தொன்மையான மொழி. வளமான தமிழ்மொழியை, தாய் மொழியாக பெற்றிருப்பதற்கு, ஒவ்வொரு நொடியும் நாம் பெருமைப்பட வேண்டும்" என்று அவர் பேசினார்.

# சித்திரச் சிறகுகள்


BEHIND ME MEDIA


## ஏகலைவன் கதை

பண்டைய காலத்தில் ஏகலைவன் என்ற சிறுவன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு வில்வித்தை கற்பதில் மிகுந்த ஆர்வம் இருந்தது. துரோணாச்சாரியாரை தன் குருவாக ஏற்றுச்ட்டனள விருப்பினான். ஆனால் ஏதோ காரணா காரணத்தினால், துரோணர் அவனுக்கு நேரடியாகப் பயிற்சி அளிக்கி அளித்ககப் பயிற்சி அளிக்கவில்லை. அதனால் ஏகலைவன் காட்டிற்குச் சென்று, துரோணரின் நினைவாக ஒரு சிலை செய்தான். அந்தச் சிலையடையே தன் குருவாகக் கருதி , தினமும் விடாமுயற்சியுடன் வில்த்தை பயிற்சி செய்தான். பயிற்சி செய்தான். காலப்போக்கில், அவன் சிறந்த வில்வித்தையாளராக வளர்ந்தான். அவனது திறமையைக் கண்டு துரோணர் வியப்படைந்தார். அவர் ஏகலைவனிடம் குருதட்சணை கேட்டார்.
குருவின் வேண்டுகோளை மதித்த ஏகலைவன், மிகுந்த மனஉறுதியுடன் அதை வழங்கினான் என்று மகாபாரதக் 1.b கதை, கூறிகது. முடிஉாமபுரஸ்ழ் கதை கூறுகிறது.
குருப க்தியும், விடாமுயற்சியும் இன்றும் நினைவுூரப்படுகின்றன.



## 5 வித்தியாசங்களையும் கண்டுபிடியுங்கள்!








## விடுகதைகள்

1. காலை நான்கு கால், மதியம் இரண்டு கால், மாலை மூன்று கால் – அது என்ன?
   ........................................
2. கண்கள் உண்டு, ஆனால் பார்க்க முடியாது – அது என்ன?
   ........................................
3. வாய் உண்டு, ஆனால் பேசாது – அது என்ன?
   ........................................
4. இறக்கைகள் உண்டு, ஆனால் பறக்காது – அது என்ன?
   ........................................
5. பகலில் மறைந்து, இரவில் வரும் – அது என்ன?
   ........................................
6. வெட்டினால் வளரும் – அது என்ன?
   ........................................
7. எவ்வளவு எடுத்தாலும் குறையாது – அது என்ன?
   ........................................
8. உடல் முழுவதும் கண்கள் – அது என்ன?
   ........................................
9. கால்கள் இல்லாமல் ஓடுகிறது – அது என்ன?
   ........................................
10. வாயில்லாமல் பேசுகிறது – அது என்ன?
   ........................................

### விடைகள்

1. மனிதன்.
2. உருளைக்கிழங்கு.
3. ஆறு.
4. காற்றாலை.
5. நிலா.
6. முடி.
7. அறிவு.
8. அன்னாசிப்பழம்.
9. தண்ணீர்.
10. வானொலி.




BEHIND ME MEDIA

# படைப்பாளியை ஏன் பாலினப் பாகுபாடு கொண்டு நோக்க வேண்டும்?






படைப்பின் வடிவம் எதுவாகவும் இருக்கலாம். ஆனால், படைப்பாளியைப் பாலினப் பாகுபாடு கொண்டு நோக்குவது சில நேரம் அவசியமாகிறது. பெண்களைப் பல நூற்றாண்டுகளாக அடக்கி, ஒடுக்கி வைத்த சமூக வரலாற்றைக் கொண்டிருப்பவர்கள் நாம். ஒடுக்கப்பட்ட பெண்களின் கதையை ஒரு நாவலாகவோ திரைப்படமாகவோ ஒரு பெண் படைக்கும்போது, அதில் பெண் குரலும் பெண் மொழியும் தனித்தும் அசலாகவும் வெளிப்பட்டுவிடுகின்றன. அதனாலேயே பெண் எழுத்தாளர்கள், பெண் திரைப்பட இயக்குநர்கள், பெண் சமூகப் போராளிகளின் செயல்பாடும் செயலூக்கமும் பெண்ணுலகத்துக்கானதாக இருக்கின்றன.

முதலிரண்டு படைப்புகள் இந்தப் புள்ளியில்தான் ‘டாக்ஸிக்’ திரைப்படத்தை எழுதி இயக்கிய கீது மோகன்தாஸ் என்கிற பெண் இயக்குநரின் செயல் விவாதத்துக்கும் கண்டனத்துக்கும் உள்ளாகியிருக்கிறது வன்முறையில் உழலும் மாஸ் மசாலா நாயகனாக யாஷ் நடிப்பில் வெளியான ‘டாக்ஸிக்’ திரைப்படம் சட்டம், காவல் துறையால் கட்டுப்படுத்த முடியாத நாயகனின் சாகசங்களை விரிக்கிறது.

பெருநகரக் குற்றப் பின்னணி கொண்ட ஒரு டான், ஐந்து பெண்களின் உலகில் ஊடாடும் அவனது எழுச்சியையும் வீழ்ச்சியையும் உளவியல் திரில்லராக மாற்றும் முயற்சியில் கொடூரமான வன்முறைக் காட்சிகளுடன் இதைப் படமாக்கியிருக்கிறார் நடிகை, திரைக்கதை எழுத்தாளர், இயக்குநர் எனப் பன்முகத் திறன்கொண்ட கீது.

ஓர் இயக்குநராக அவர் தன்னை அடையாளம் காட்டிய முதல் படமான ‘லையர்ஸ் டைஸ;’ (Liar’s Dice), இந்தியாவிலும் உலக அரங்கிலும் பெரிதும் பாராட்டப்பட்டது. அவரின் இரண்டாவது படமான ‘மூத்தோன்’, லட்சத்தீவின் மீனவக் கிராமத்திலிருந்து மும்பைக்கு ஓடிப்போன ஒருவனின் வாழ்க்கையையும் அவனைத் தேடி மும்பைக்குச் செல்லும் அவனுடைய 13 வயதுத் தங்கையின் பாசம் நிரம்பிய ஏக்கத்தையும் எந்தவித மசாலாப் பூச்சுமின்றி வெளிப்படுத்திய ஒரு துணிச்சலான படைப்பு.

பெண்கள் வெறும் உடல்களா? - வெகுஜன சினிமாவின் பிரம்மாண்டப் பரப்புக்குள் நுழைந்த பின் கீது மோகன்தாஸ் உருவாக்கிய ‘டாக்ஸிக்’, ஓர் அப்பட்டமான ஆண் மைய சினிமாவாகக் குறுகிவிட்டது. தனது தனித்துவமான படைப்புக் குரலையும் பெண் மைய அரசியலையும் ‘டாக்ஸிக்’ படத்தில் அவர் முழுமையாக இழந்து நிற்கிறார்.

காரணம், இப்படத்தில் எழுதியிருக்கும் ஐந்து முக்கியப் பெண் கதாபாத்திரங்களையும் மாஸ் மசாலா நாயக சினிமாவின் வரையறைக்கு அவர் பலிகொடுத்துவிட்டார். நாயகன் ராயாவின் அக்காவான கங்கா, ராயா திருமணம் செய்ய ஒப்புக்கொள்ளும் தாதாவின் மகள் ரெபேக்கா, ராயா காதலிக்கும் சர்க்கஸ் கலைஞரான நதியா, ராயாவை மணந்துகொண்டு வாழும் மெலிசா, கோவா நகரத்தை நிழலாட்சி செய்யும் மாபியா குழுவின் தலைவன் சால்வடோருடன் திருமணம் கடந்த உறவில் இருக்கும் எலிசபெத்.

கதைக் களத்தில் எலிசபெத்தும் கங்காவும் வன்மத்துடன் காத்திருந்து ஒருவரை அடுத்தவர் பழிவாங்கிக்கொள்கிறார்கள். தன் இருப்பை இல்லாமல் ஆக்கிய கங்காவைக் கொல்ல, அவளுக்கு நெருக்கமான இன்னொரு பெண்ணான நதியாவை மிரட்டியே அவளைக் கொல்லும்படி செய்கிறாள் எலிசபெத். தான் துப்பாக்கி முனையில் செய்த கொலையின் குற்றவுணர்வுடன் பத்து வயது மகனை, பொறுப்பற்ற ஒரு குடிகார ‘டானா’கிய அவனது உயிரியல் தந்தை பார்த்துக்கொள்வான் என அசட்டுத்தனமாக நம்பி, உடலில் வெடிகுண்டைக் கட்டிக்கொண்டு தன்னைத் தானே கொலை செய்துகொள்கிறாள் நதியா.

விளிம்புக்குத் தள்ளப்படும் பெண்கள்: கங்கா, தன் தம்பியின் வயிற்றுப் பசியைத் தீர்க்கத் தன் உடலை விற்றுச் சோறிட்டாள் என்கிற சித்தரிப்பும் அதை ராயா புகழ்ந்துசொல்வதும் ஒரு பெண் இயக்குநரின் பார்வையாக ஒருபோதும் இருக்க வாய்ப்பில்லை. யாஷும் சேர்ந்துதான் திரைக்கதை எழுதினார் என கீது தப்பித்துக்கொள்ளக்கூடும். ஆனால், யாஷ் ஏற்ற ராயா கதாபாத்திரம் தன் வாழ்க்கைக்குள் வந்துசெல்லும் பெண்களை விளிம்பு நிலைக்குத் தள்ளுவதும் அவனது நிழலில் ஒடுங்க வைப்பதும் ஒரு பெண் இயக்குநரிடம் வெளிப்பட்டுள்ள ஆணாதிக்கப் பார்வையாகவே கொள்ளப்படும்.

கங்கா (நயன்தாரா), நதியா (கியாரா அத்வானி), ரெபேக்கா (தாரா சுதாரியா), எலிசபெத் (ஹுமா குரேஷி), மெலிசா (ருக்மணி வசந்த்) எனப் பல முன்னணி நட்சத்திரங்கள் முக்கியப் பெண் கதாபாத்திரங்களை ஏற்றிருந்தபோதும் அவற்றின் ஒட்டுமொத்த இருப்பும் நாயகன் ராயாவை (யாஷ்) மையமாகக் கொண்டே கட்டமைக்கப்பட்டுள்ளது. இக்கதாபாத்திரங்களுக்கு இயக்குநர் கீது கொடுத்திருக்கும் தனித்துவமான அடையாளங்கள் அனைத்துமே ஆண்களின் வன்முறையை ஆராதிப்பவையாகவும் அதற்குப் பயந்து பின்வாங்குபவையாகவும் அவர்களின் பாலியல் இச்சைக்குப் பலியாடுகளாகவும் சுருக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஐந்து கதாபாத்திரங்கள் எடுக்கும் முடிவுகளும் எதேச்சாதிகாரம் மிக்க ஆண் மைய உலகத்தால் தீர்மானிக்கப்படுகின்றன. ஒரு திரைப்படத்தின் உரையாடல்கள் அது கொண்டுள்ள கதாபாத்திரங்களின் உளவியலைப் பிரதிபலிப்பவை. இப்படத்தில் அவை பேசும் பல வசனங்களும் அவை காட்டும் உணர்வு வண்ணங்களும் ஆண்களின் அகந்தைக்குத் தீனிபோடும் கருவிகளாகவே சித்தரிக்கப்பட்டுள்ளன.

# ‘ஹாய்’ - நாங்கள் நினைத்த நோக்கம் நிறைவேறிய திருப்தி கிடைத்துவிட்டது - நடிகர் கவின்

நயன்தாரா, கவின், பாக்யராஜ், பிரபு, ராதிகா சரத்குமார், விடிவி கணேஷ் உள்ளிட்ட பலர் நடித்துள்ள படம், ‘ஹாய்’. விஷ்ணு எடவன் இயக்கியுள்ள இந்தப் படத்தை ஜீ ஸ்டுடியோஸ், ரவுடி பிக்சர்ஸ், செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோ இணைந்து தயாரித்துள்ளன. ஆக. 28-ம் தேதி வெளியான இப்படம் வரவேற்பைப் பெற்றதை அடுத்து, படக்குழுவினர் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது, கவின் பேசும்போது, ‘‘இந்தப் படத்துக்கு கிடைத்த ஆதரவு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் கலந்த உணர்வைத் தந்துள்ளது. திரையரங்குகளில் ரசிகர்கள் சிரித்து, மகிழ்ந்து, சில காட்சிகளில் உணர்ச்சிவசப்பட்டு ரசிப்பதைப் பார்க்கும்போது, நாங்கள் நினைத்த நோக்கம் நிறைவேறிய திருப்தி கிடைக்கிறது. குடும்பத்துடன் ஒன்றாக அமர்ந்து, கவலைகளை மறந்து ரசிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்தப் படத்தை உருவாக்கினோம்.



நான் எப்போதும் இலக்கை அடைவதைவிட, அந்த இலக்கை நோக்கிய பயணம்தான் முக்கியம் என்று நம்புவேன். ஒரு படம் வெற்றி பெறுகிறதா, தோல்வி அடைகிறதா என்பது ஒரு கட்டம் மட்டுமே. ஆனால், அந்தப் பயணத்தில் நாம் சந்திக்கும் மனிதர்கள், நமக்காக நிற்பவர்கள், நமக்கு ஆதரவாக இருப்பவர்கள்தான் வாழ்க்கை முழுவதும் நம்முடன் வரும் உண்மையான பலம். அந்த வகையில் ‘ஹாய்’ படத்தின் பயணம் எனக்கு அழகான அனுபவம்.

ஹாய் கதையைக் கேட்டதும் ஒவ்வொரு கதாபாத்திரத்துக்கும் இயக்குநர் நினைத்த நடிகர்களே நடிக்க வேண்டும் என்று சொன்னேன். ராதிகா மேடம், பிரபு சார், சுஹாசினி மேடம், பாக்யராஜ் சார் என ஒவ்வொருவரையும் தாண்டி

# ‘தர்மன்’ 2-ம் கட்ட படப்பிடிப்பு நிறைவு



கமல்ஹாசன் தயாரிப்பில் ரஜினி நடித்து வரும் ‘தர்மன்’ படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்திருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.


ரஜினிகாந்த் டாக்டர் வேடத்தில் நடிக்கும் இந்தப் படத்தை அஸ்வத் மாரிமுத்து இயக்கி வருகிறார். ஆகஸ்ட் 13-ல் தொடங்கிய இந்தப் படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு தற்போது நிறைவடைந்துள்ளது.

இது குறித்து ராஜ்கமல் நிறுவனம் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ‘தர்மன் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்தது. ஸ்வாக் மோட் (SWAG Mode) ஆன்’ என்று தெரிவித்துள்ளது. மேலும் சில படப்பிடிப்பு காட்சிகள் அடங்கிய வீடியோ ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

இந்தத் தகவலை தனது எக்ஸ் தள பக்கத்தில் பகிர்ந்துள்ள இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து, ‘இரண்டாம் கட்ட படப்பிடிப்பு நிறைவடைந்தது. சூப்பர் ஸ்டார் அற்புதமாக இருந்தார்’ என்று தெரிவித்துள்ளார்.

ராஜ்கமல் பிலிம்ஸ் தயாரிப்பில் ரஜினிகாந்த் நடிக்கும் ‘தர்மன்’ படத்தில் அவருடன் சிம்ரன், ராஷி கன்னா, யோகி பாபு உள்ளிட்ட பலர் முக்கிய வேடங்களில் நடித்து வருகின்றனர். படத்துக்கு அனிருத் இசையமைக்கிறார்.

# ‘அரசன்’ நீங்கள் நினைப்பது போல சிறிய படம் கிடையாது - சிலம்பரசன்




வெற்றிமாறன் இயக்கத்தில் உருவாகி வரும் ‘அரசன்’ படத்தில் சிலம்பரசன் டிஆர், பிரியங்கா மோகன், அமீர், சமுத்திரக்கனி, கிஷோர், ஆண்ட்ரியா உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். வெற்றிமாறனின் வடசென்னை யுனிவர்ஸிலிருந்து புதிய கேரக்டர்களுடன் உருவாகும் இப்படத்தை கலைப்புலி எஸ்.தாணு தயாரிக்கிறார்.

இந்நிலையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட சிலம்பரசன் டிஆர், ‘அரசன்’ படத்தில் அனிருத்துடன் இணைந்து பணியாற்றுகிறேன். இது நீங்கள் நினைப்பது போல சிறிய படம் கிடையாது. என் கதாபாத்திரத்தின் இளம் வயது முதல் முதுமை வரையிலான வாழ்க்கைப் பயணத்தை இப்படம் பதிவு செய்யும்.

இதற்காக பல்வேறு வயது தோற்றங்களில், பல வித்தியாசமான கெட்டப்புகளில் நடிக்கிறேன். ‘அரசன்’ திரைப்படம் கோலிவுட்டுக்கு பெருமை சேர்க்கும் படமாக இருக்கும். இது பொங்கலுக்கு வெளியாகும் என்று பலரும் எதிர்பார்க்கின்றனர். பொங்கல் வெளியீடாக வரவில்லை. படத்தின் தரத்தில் எந்தவிதமான சமரசமும் செய்ய விரும்பவில்லை. ‘அரசன்’ திரைப்படம் குறித்த ‘த வேர்ல்ட் ஆ.்.ப் அரசன்’ என்ற பிரத்யேக க்ளிம்ப்ஸ், தீபாவளியை முன்னிட்டு திரையரங்குகளில் மட்டும் பிரத்யேகமாக வெளியிடப்பட உள்ளது’’ என்றார்.

# ‘பெத்லகேம் குடும்ப யூனிட்’ படக்குழுவை பாராட்டிய கமல்ஹாசன்



நிவின் பாலி - மமிதா பைஜு நடிப்பில் வெளியாகி இருக்கும் ‘பெத்லகேம் குடும்ப யூனிட்’ படத்தின் வணிக ரீதியிலான வெற்றிக்காக படக்குழுவினரை அழைத்து நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவருமான கமல்ஹாசன் எம்.பி பாராட்டு தெரிவித்துள்ளார்.

கிரிஸ் ஏ.டி இயக்கத்தில், நிவின் பாலி, மமிதா பைஜு இணைந்து நடித்திருக்கும் படம் ‘பெத்லகேம் குடும்ப யூனிட்’. ஆகஸ்ட் 21-ம் தேதி மலையாளத்தில் வெளியான இந்தப் படம் நல்ல வரவேற்பை பெற்று, ரூ.200 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளது.

இந்த வெற்றியைத் தொடர்ந்து இப்படம் தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளிலும் டப் செய்து வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் படத்தின் வணிக ரீதியிலாக வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, நடிகரும் மாநிலங்களவை எம்பியுமான கமல்ஹாசன் படக்குழுவினரை அழைத்துப் பாராட்டியுள்ளார். மேலும் படம் தமிழில் வெளியானதற்கும் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து படக்குழு தனது எக்ஸ் தள பக்கத்தில் படக்குழுவினருடன் கமல்ஹாசன் உரையாடும் வீடியோ ஒன்றை பகிர்ந்து பதிவிட்டுள்ளது. அதில், ‘பெத்லகேம் குடும்ப யூனிட் குழுவிருக்கு சிறப்பான தருணம் இது. உலக நாயகன் கமல்ஹாசன் எங்கள் குழுவினரைச் சந்தித்து படத்தின் மாபெரும் வெற்றிக்காக வாழ்த்துகள் கூறினார்’ என்று தெரிவித்துள்ளது.